

வானம்
தொடாத
நிலவு
உமா பாலகுமார்

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : வானம் தொடாத நிலவு! |
| ஆசிரியர் | : உமா பாலகுமார் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : ஏப்ரல், 2008 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 Kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 168 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருண் பதிப்பகம்<br>107/8, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14. |

**விலை: ரூ.60.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர்<br>சென்னை-18. ☎ 94441-01753 |
| அச்சிட்டோர் | : கே.வி.எஸ். ஆப்செட்<br>சென்னை-14. ☎ 28480166 |


# வானம் தொடாத நிலவு!

# வானம் தொடாத நிலவு!

## 1

வெண்மேகங்கள், வானவீதியில் உலாவர ஆரம்பித்திருந்த இனிய காலைப் பொழுது!

வெளிச்சத்தின் வருகைக்காய் இசைக்காமல் காத்திருந்த குயில் ஒன்று, சூரியனின் கதிர்களைக் கண்டதும், தனியே சாதகம் செய்து கொண்டிருந்தது.

விடியலில் சோம்பல் முறித்து எழுந்த மரங்கள், தென்றலின் பேச்சுக்கு, மௌனமாகத் தலையசைத்துக் கொண்டிருந்தன.

அழகாய்ப் புலர்ந்த அந்தக் காலையில், சீக்கிரமே எழுந்து தயாராகி, ரோஜா நிறத்தில் முத்துக்கள் பதித்த சுரிதாரணிந்து, ஒரு தேவதை போல் ஹாலுக்கு வந்தாள் அநந்திதா!

பாங்கிற்குச் செல்லக் கிளம்பிக் கொண்டிருந்த தன் தாய் காயத்ரியை அழைத்தாள்.

"அம்மா... இனிக்கு எனக்கு லஞ்ச் வேண்டாம்... நான் காலேஜ் கேண்டீன்லேயே கௌரியோட சாப்பிட்டுக்கறேன்!" சலுகையாகக் கூறினாள்.

"நந்து... மெல்லடா! என்ன அவசரம்? இன்னும் டைம் இருக்கே! கௌரிகூட இன்னும் வரலை!"

காயத்ரி, தன் பெண்ணை ரசித்தபடி கூறினார்.

அநந்திதா, 'பி.எஸ்ஸி.' இறுதி வருடம் படிப்பவள்!

இன்று, அவர்களுடைய கல்லூரியில் முத்தமிழ் விழாவின் முதல் நாள்!

அநந்திதா நன்றாகக் கவிதை எழுதுவாள்... ஒவ்வொரு வருடமும் கவிதைப் போட்டியில் அவள்தான் முதல் பரிசு வாங்குவாள்!

இந்த முறை 'சிறகை விரிப்போம்... சிகரம் தொடுவோம்' என்ற தலைப்பில் எழுதி இருக்கிறாள்.

மனதில் ஒருவிதப் பரபரப்புடன், அவள் ஜன்னல் கம்பிகளில் முகம் பதித்துக் காத்திருந்தபோது, தோட்டத்தில் காற்றும் பூவும் கலந்துரையாடல் நடத்திக் கொண்டிருந்தன.

சட்டென்று ஒரு கவிதை உதயமாகியபோது, கௌரி வந்து விட்டாள்.



அவள் நந்துவிற்கு மாமா பெண்... அவளும் அதே கல்லூரியில் 'பி.ஏ.' படிக்கிறாள்.

காயத்ரியிடம் விடைபெற்று இருவரும் வெளியே வந்தபோது, தோட்டத்து மகிழம்பூவின் மணம் இனிதாய் நாசியில் நிறைந்தது.

மதுரை மாநகர வீதிகள், கலகலக்க ஆரம்பித்திருந்தன.

கல்லூரிக்குள் சென்றபோது, அங்கு கொத்துக் கொத்தாய் பூத்த வண்ண மலர்களின் அணிவகுப்பாய் மாணவிகள் தெரிந்தனர்.

'இங்கு, இத்தனை புதுக்கவிதைகள் இருக்க, புதிதாய் ஒரு கவிதை எதற்கு...?' என்று கேட்க வேண்டும் போல்!

போட்டி ஆரம்பித்துவிட, அநந்திதாவின் முறை வந்தது.

விழிகளில் உற்சாக மின்னலோடு கவிதை வாசித்தபோது, இரு கால் முளைத்த மலராய்... அவள் தோற்றம்!

**வாழ்க்கை...**
**இனி**
**வரமாகட்டும்**
**நம்முன்!**
**துவள்வதற்கல்ல...**
**தோல்விகள்!**
**வாழ்க்கைப் பாதையில்...**
**வெற்றி இலக்கிற்கான**
**வேகத் நடைகள்!**
**சுருண்டு விடுவதற்கல்ல...**
**சோதனைகள்!**

சாதனைகளைத் தொடத் தூண்டுகின்ற...
ஏணிப்படிகள்!
எந்த
மனிதனையும்
சிக்கும் சக்தி...
வார்த்தைகளுக்குக்
கிடையாது...
அவன் மனது
பலவீனமாக
இருந்தாலொழிய...!
வாய்ப்புகள்...
தினம்
வாசல் வருவதில்லை!
விடாமுயற்சியே...
வாய்ப்புகளின்
திறவுகோல்கள்!
சமுதாய வேடர்கள்
உட்புகாத
கல்லூரி வனங்களில்...
கல்வியில் மட்டுமே
கவனம் செலுத்துவோம்!
எதிர்கால வானில்...
தன்னம்பிக்கை
சிறகு விரிப்போம்!
வெற்றிச் சிகரம்
தொடுவோம்!



கவிதையை முடித்து அவள் நிமிர்ந்தபோது எப்போதும் போல் கைத்தட்டலின் ஓசை, இனிய அங்கீகரிப்பாய் காதுகளைத் தழுவின.

போன வருடம், பெண்ணடிமைத்தனத்தை தன் கவிதைகளால் சாடி, சமூக ஆதிக்கத்துள் புதைந்து போன பெண் மன உணர்வுகளை... புதையலாய் கண்டெடுத்து, புழுதி தட்டிப் புதுப்பித்து, புதுப்பாதை வகுத்து, 'அச்சம் நரகம்' என்று முழங்கிய அந்த 'மகாகவி பாரதி'யைப் பற்றிப் பாடியது நினைவு வருவதாய்!

அந்த மகாகவியைப் பற்றி எண்ணும்போதே பெரும் புத்துணர்வு வந்தாலும், மனம் ஏனோ மகிழ்ச்சியடைய வில்லை.

அவளுடைய அக்கா அனிதாவின் நினைவு... நெருடலாய் நெஞ்சக் கதவுடைத்து உட்புகுவதாய்!

இன்று, பெண்ணடிமைத் தனத்தையும், வரதட்சணைக் கொடுமையையும் இவ்வளவு எதிர்க்கிறோமே, அன்று அனிதாவிற்கு இதில் ஒரு பங்கு தைரியம் இருந்திருந்தால், அந்த மாதிரி ஒரு முடிவெடுத்திருப்பாளாவென்று மனம் மறுகியது.

அந்த யோசனையிலேயே உழன்றபடி மெதுவாக மேடையிலிருந்து இறங்கி வந்தவள், முதல் வரிசையில் விழாக் குழுவினருள் ஒருவனாக அமர்ந்து தன்னையே ஆழ்ந்து ஊடுருவிய அபிமுகேஷ்வரைக் கவனிக்கவில்லை.

ஆனால், பேகம் செங்காந்தள் இதழ்களை, முதன் முதலில் பார்த்த அதிர்ச்சியிலிருந்தான் அவன்!

உற்சாகத்துடன் வரவேற்று கூட்டமாகக் கை கொடுத்துப் பாராட்டிய தோழிகளுக்கு ஒரு மௌனப் புன்

னைகையைப் பரிசளித்துவிட்டு, வேகமாகச் சென்று தன்னை அமைதிப்படுத்தி, கௌரிக்கு அருகில் அமர்ந்தாள் அவள்!

கண்கள், கண்ணீரைச் சிந்தி விடுவோம் என்று பயமுறுத்தின.

அந்த சோக நிமிடங்களின் தடங்கள்... இன்று நடந்ததைப் போல், எண்ணப் பரப்பில் சோகத்துடன் கண்ணீர்க் கோலங்களாய்ப் படர்ந்தன!

அனிதாவின் நினைவுச் சுவடு, மேலெழும்பி வந்து இதயத்தை கனமாக்கியது.

## 2

அவர்களுடைய குடும்பம்... அப்போது கும்பகோணத்தில் வசித்து வந்தனர்.

அவளுடைய அப்பா சுந்தரம், அங்கு ஒரு வங்கியில் வேலை பார்த்து வந்தார்.

நந்துவிற்கும், அனிதாவிற்கும் ஐந்து வயது வித்தியாசம்... அப்பாவின் செல்லப் பெண் 'அனி'யென்றால், 'நந்து' அம்மா செல்லம்!

இரு குழந்தைகளுமே பெண்கள் என்ற வருத்தம், சுந்தரத்திற்கு என்றுமே இருந்ததில்லை.

அனிதா, கல்லூரியில் இரண்டாவது வருடம் படித்துக் கொண்டிருந்த போது, மன்னார்குடியிலிருந்து அவளுக்கு ஒரு வரன் வந்தது.



இப்போது அவளுக்குத் திருமணம் முடித்து விட்டால், ஐந்தாறு வருடங்களுக்குப் பிறகு நந்துவிற்குச் செய்ய வசதியாக இருக்குமென்ற எண்ணத்தில் சுந்தரம் அந்த சம்மந்தத்தையே பேசி முடித்தார்.

அப்போது நந்துவுக்குப் பதினாலு வயது... ஒன்பதாவது படித்துக் கொண்டிருந்தாள்.

கல்லூரிப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்தப் போகும் நிலை, பெரும் வருத்தம் தந்தாலும், அப்பாவிற்காக அரை மனதுடன் சம்மதித்தாள் அனிதா!

அந்த வீட்டில் முதல் விசேஷம் என்பதால், வீடே திருமணக்களை கட்டியிருக்க, கல்யாணத்தை எதிர்பார்த்து அந்தக் குடும்பமே ஆவலுடன் காத்திருந்தனர்.

அடுத்த மாதமே அனிதாவுக்கும் கோபாலுக்கும், விமரிசையாகத் திருமணம் நடந்தது.

சரியாக ஆறு மாதங்கள்... அதுவரை அனிதாவை சந்தோஷமாகப் பார்த்தவர்கள்தான்!

பிறகு ஒருமுறை தாய் வீட்டில் தங்கிச் செல்ல அவள் வந்திருந்தபோதுதான் உண்மையே தெரிந்தது.

அவளுடைய கணவரும், மாமியாரும், புதிதாக ஒரு தொழில் தொடங்கப் பணம் கேட்டு, மிகவும் கொடுமைப் படுத்துவதை அறிந்தனர்.

வேலையையும் விட்டுவிட்டு வீட்டிலேயே இருப்பதால், அவனுடைய அடியும் உதையும், கேவலமான பேச்சுக்களும் தாங்க முடியவில்லை என்று அனிதா கூறும் போது, அந்த வயதில் விழியெடுக்காமல் கேட்டுக் கொண்டிருப்பாள் அவள்!

சுந்தரத்திற்குத்தான் பெரும் வேதனையாய்!

முதல் பெண் வாழாவெட்டியாக வந்து விட்டால், இரண்டாவது பெண் என்னாவதென்ற பெரும் சோகம்!

எப்படியாவது அவளை வாழ வைக்க வேண்டுமென்ற முடிவுடன், மகளை சமாதானப்படுத்தினார் அவர்!

அடுத்த மாதமே, கோபால் கேட்ட பணத்தை ஏற்பாடு செய்து தருவதாகக் கூறி, மாமியார் வீட்டில் அவளை விட்டு வந்தார்.

மறுவாரமே, அனிதாவின் மரணச் செய்தி அவர்களை இடியாய்த் தாக்கியது.

வரதட்சணைக் கொடுமையால், விரக்தியில் ஒரு மென்மையான மனம் ரணமானதால், அங்கு ஒரு மரணம் நிகழ்ந்திருந்தது!

தன்னைத் தீயில் புடம் போட்டு, கருகிச் சருகாகியிருந்தது, அந்தச் சிறு மலர்!

அவள் இறந்த பிறகுதான் தெரிந்தது... கோபாலுக்கு, முன்பே வேறு ஒரு பெண்ணின் தொடர்பும் இருந்த விபரம்!

அந்த வயதிலும், புரிந்தும் புரியாமலிருந்த அந்தச் சாவின் கொடூரம், நந்துவின் மனதில் பெரும் அதிர்ச்சியையும், இறுக்கத்தையும் வரவழைத்தன.

தன்னுடன் ஒன்றாக இணைந்து வளர்ந்த அனிதாவின் இழப்பும், தற்கொலை முடிவும் அவளை நொறுக்கிப் போட்டன.

அதைவிடப் பெரிய அதிர்ச்சியாய்... இமயம் சரிகின்ற கொடுமையாய்... சூரியன் சிதறுகின்ற அவலமாய் மறு



நாளே சுந்தரமும் நெஞ்சு வலியால் இறந்ததும், அந்தக் குடும்பமே சிதறிச் சின்னாபின்னமாகியது.

அவர்களிருவரையும், மேலும் தனிமைப்படுத்தி, வேதனையை விதைத்து, மனதளவில் பெரிதும் சோர்ந்து போகச் செய்தது..... காலன் அவர்களின் வாழ்க்கையில் அடித்த சாவுமணி!

குடும்பத் தலைவரையும், உயிராய் வளர்த்த மகளையும் ஒரே நேரத்தில் இழந்ததில் பெரிதும் ஓய்ந்து போனார் காயத்ரி.

விதியின் வினோத விளையாட்டு, அந்தக் குடும்பத்தை சுக்கு நூறாய் உடைத்துப் போட்டிருந்தது.

எல்லாம் முடிந்து, காயத்ரிக்கும் அந்த பாங்க்கிலேயே வேலை கிடைத்துவிட, இருவரும் மறுவருடமே மதுரைக்கு மாற்றல் கேட்டு வந்தவர்கள்தான்!

ஆறு வருடங்களாக மதுரையில் காயத்ரியின் அண்ணன் குணசீலன் வீட்டிற்கு அருகில்தான் வீடு பார்த்துக் குடியிருக்கிறார்கள்.

மதுரைக்கு வந்ததிலிருந்து மாமா குடும்பத்தின் அன்பிலும், ஆதரவிலும், இருவரும் தங்கள் சோகம் மறந்ததும், மாமா பெண் கௌரியை, அவள் தன் உயிர்த் தோழியாய் இணைத்துக் கொண்டதும், இன்று நடந்த நிகழ்வைப் போல், நிழற் படமாய், அவள் மனதில் விரிந்தன.

சிறு வயதில் எதுவும் புரியாவிட்டாலும், பிறகு புரிந்தது நந்துவிற்கு.... பெண்ணின் கிரஹணமே வரதட்சணைதான் என்பது!

மனித நேயம் மறந்து பெண்களை விலை பேசுபவர்களைக் கண்டால், நெஞ்சிற்குள் தீப் பிடித்தது.

தீபங்களாய்... குத்து விளக்காய் பெண்களைப் போற்றும் சமூகமே, சில நேரங்களில் அந்த தீபங்களையே எரிக்கத் துவங்கிய கொடூரத்தைத்தான் அவளால் தாங்க முடியவில்லை!

விலை கொடுத்துப் பொன் வாங்கலாம்... ஆனால் பெண் வாங்கி விலையும் கேட்டால்...? ஒருவேளை ஆணுக்கு விலையோ... அவளுக்குத் தெரியவில்லை!

மருமகள்களுக்கு மட்டும் ஸ்டவ் வெடிக்கின்ற நியாயமும் புரியவில்லை!

ஆனால், கல்யாணம்... ஆண்கள், புகுந்த வீடு என்ற வார்த்தைகளே கசப்பைத் தருவதாய்!

இன்றுவரை, எந்த ஒரு ஆணையும் நம்ப மறுக்கும் இதயம், பாலையாய் வறண்டிருந்தது.

* * *

கடந்த கால நினைவலைகள்... அநந்திதாவை நிகழ் காலக் கரையில் ஒதுக்கின!

அவளுடைய தோளில் பதிந்த மென்மையான கரத்தின் தொடுகையில் மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்.

"என்னாச்சு நந்து?" கௌரிதான் வினவினாள்.

உதடுகள் கேட்டாலும், நந்துவின் சோகம் புரிகிறதென்ற சாயல், அவள் கண்களில்!

'ஒன்றுமில்லை' என்று பதிலுக்கு தலையசைத்ததும்,



"அனிதாக்கா ஞாபகமா? அவங்களைப் பத்தி நினைச்சாலே, இறுகிப் போய் உன்னோட இயல்பையே தொலைச்சிடுறே நந்து... வேண்டாமே! நடந்தது நடந்து போச்சு... அதை மறக்க முயற்சி பண்ணு!" என்றாள் மென்மையாக!

நந்துவின் கண்களில் கண்ணீரின் முகவரி!

"எப்படி முடியும் கௌரி? ஒரே நேரத்திலே அனியையும், அப்பாவையும் பறி கொடுத்ததை நினைச்சாலே, பகீர்னு இருக்கு! அம்மா எப்படித்தான் இதத் தாங்கிக்கறாங்களோ பாவம்!"

அவள் குரலில் உணர்ச்சிகள் நிரம்பியிருந்தன.

பிரிவின் பாதிப்பு, நிழற்சோகமாய் விழிகளில் படர்ந்திருந்தது.

"சரி...! காலம் மனப்புண்ணை ஆத்தும்பாங்க... இத்தனை வருஷமாச்சி... எதையுமே மறக்கக் கத்துக்கணும் நந்து! அப்பதான் வாழ்க்கை சுலபமா இருக்கும்... நீயே இப்படி ஓய்ஞ்சு போனா அத்தை எப்படி இருப்பாங்க...? அங்கே ஃபங்ஷனைக் கவனி!" என்றாள் அக்கறையுடன்!

மனம் சிறிது சமனப்பட்டுவிட விழாவில் கவனத்தை செலுத்தினாள் அவள்.

பரிசுகள் அறிவிக்கப்படும் நேரத்தில் முதல் பரிசை வாங்க அவள் மேடைக்குச் சென்றபோதும், பரிசை வழங்கிய அபிமுகேஷ்வரின் விழிகள், நந்துவின் முகத்தையே இமைக்காமல் அளவெடுத்தன.

ஆனால், இது எதையுமே கவனிக்காமல், கரத்தின்றி பரிசை வாங்கிக்கொண்டு, நந்து இறங்கிச் சென்றாள்.

அவன் மனம் ஒரு கணம் தொட்டாற்சுருங்கியானது... மெதுவாக அவளிடம் கொள்ளை போனது!

அபிமுகேஷ்வர், 'பி.டெக்.' முடித்துவிட்டு, அப்பா விற்குத் துணையாய் கும்பகோணத்தில் தங்களுடைய தொழிற்சாலையை கவனித்துக் கொள்கிறான்.

அவனுடைய சித்தப்பா நந்தீஷ்வரன் தான் இந்தக் கல்லூரியின் நிறுவனர்.

முகேஷுக்கும் கல்லூரி நிர்வாகத்தில் ஒரு பங்கு இருப்பதால், தொழில் விஷயமாக மதுரைக்கு வந்தவன், இன்று விழாவுக்கு வந்திருந்தான்.

ஏனோ, வந்ததிலிருந்தே அவன் விழிகள் அந்தப் பெண்ணிடமே பதிந்து அவனை ஈர்த்தன.

எந்தப் பெண்ணிடமும் இதுவரை காணாத ஒரு தனித்துவம் அவளிடம் தெரிவதாய்...!

முதல் முறையாக, ஒரு பெண்ணிடம் சலனப்பட்டது மனது.

ஏனோ அவளைப் பார்க்கும்போது பிரியாத ஒரு பந்த மாய்..... நெடுங்காலச் சொந்தமாய்த் தோன்றியது.

அப்போதுதான் மலர்ந்த ரோஜாவைப் போல், கூந்தல் முடிகள் நெற்றிப் பரப்பில் சிலும்பலாய்க் கோலமிட, அழகோவியமாய் நின்று அவள் கவிதை சொன்னதும்... சிறு வார்த்தை தப்பாய்ப் போனதற்கு மென்மையாய் இதழ்களைக் கடித்து கண்களை மூடி மெல்லத் தலை யாட்டியதும், அவன் மனதில் ஆழமாய்ப் பதிந்தன.

அவள் பரிசைக் கொடுக்கும்போதும், நிமிர்ந்து கூடப் பார்க்காமல் அலட்டலின்றி இயல்பாய் அவள் வாங்கிச் சென்ற விதமும் அவனை மிகவும் கவர்வதாய்!



அந்த நிமிடமே, மனதிற்குள், ஏனோ தன் துணை இவன் தான் என்ற உறுதியான எண்ணம் நிலை பெற்றது.

அவனுக்கு உலகமே புதிதானது போல்... தன் கண் களால் அவள் பேசிய முதல் கவிதை, காதலோ என்றும் பிரமிப்பாய்..!

தன் மனம் இப்படி அலைபாய்வது இதுதான் முதல் முறை என்பது புரிய, இந்த நேசம், இன்று தோன்றி நாளை மறையாமல் ஆயுள் பரியந்தமும் தொடர்கிற ஒரு பந்தமாய் தோன்றியது.

## 3

அன்று விழா முடிந்து, நந்துவும் கௌரியும் வீட்டுக்கு வந்தபோது, காயத்ரி அவர்களுக்காக ஸ்வீட் செய்து வைத்துக் காத்திருந்தார்.

உள்ளே வந்த நந்துவின் முகத்தைக் கவனித்தவர், "என்ன கௌரி? உன் ஃப்ரெண்டுக்கு என்னாச்சி? முதல் பரிசு கிடைக்கலைன்னு இப்படி உம்முனு இருக்காளா?" இயல்பான கேலியுடன் கேட்டார்.

கௌரி ஒன்றும் கூறாமல் தர்மசங்கடத்துடன் நந்துவையே பார்க்க, அவள் வேகமாகத் தன் அறைக்குள் சென்று கதவை மூடிக் கொண்டாள்.

பதறிப்போன சாவித்ரியிடம், கௌரி எல்லா விபரங் களையும் கூறினாள்.

முதல் பரிசு அவளுக்குத்தான் கிடைச்சுது...

"அத்தை... முதல் பரிசு அவளுக்குத்தான் கிடைச்சுது... அவ கொஞ்ச அனிதாக்கா ஞாபகம் திடீர்னு வந்துடிச்சி... அவ கொஞ்ச நேரத்துல சரியாயிடுவா! நீங்க ஒண்ணும் கவலைப் படாதீங்க" என்று கூறிவிட்டு வீட்டுக்குக் கிளம்பினாள்.

அவனிடம் ஸ்வீட்டைக் கொடுத்து அனுப்பிவிட்டு, நந்துவின் அறைக்குள் சென்ற காயத்ரி, அவளுடைய சிவந்த விழிகளையும், சோர்ந்த முகத்தையும் கண்டு தவித்துப் போனார்.

"நந்து..." பரிவுடன் அவள் தலையை வருடினார்.

"வா... வந்து டிபன் சாப்பிடு! முடிஞ்சு போன அந்த சோகமான நினைவுகளை மறக்கணுங்கிறதுதான் என் ஆசையும்! ஆனா என்ன பண்றது... பல சமயங்கள்லே அது முடியறதில்லை!

"ம்... கடவுள் நமக்குக் கொடுத்திருக்கிற வாழ்க்கையை யாவது சந்தோஷமா வாழப் பழகிக்கணும்டா... எல்லாத் துக்குமே ஏதோ ஒரு காரணம் இருக்கும்... வாம்மா!" என்றார் ஆதரவாக.

வேகமாக எழுந்தாள் நந்து.

"ஆனா, நம்ம வீட்டுல நடந்ததுக்கு யாரும்மா காரணம்? ஒரு குடும்பத்தோட சுயநலமான பணத்தாசை யும் ஒரு ஆணோட, அரக்கத்தனமும், கொடுமையும் தானே...?

அவள் கேட்டபோது அவராலும் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியவில்லை.

இப்படித்தான், இருவரையும் அடிக்கடி பழைய ஞாபகங்கள் சோகத்தில் ஆழ்த்தி, பிறகு மீட்டு வரும்!



பிறகு தொடர்ந்து வந்த நாட்கள் படிப்பிலும், எக்ஸா மிலும் செல்ல, வேறு எதிலும் அவள் கவனம் செல்ல வில்லை.

தன் நினைவிலேயே ஒருவன் உயிராய் உருகிக் காத்திருப்பதையும், அவள் அறியவில்லை.

* * *

அங்கு, கும்பகோணத்தில்... அபிமுகேஷுக்கு ஊரி லிருந்து வந்ததிலிருந்து அநந்திதாவின் நினைவுகள் மனதில் ஆழமாய்!

ஒரு நாள் பார்த்த பெண் தானே... சில மணி நேரம் கண்களில் பட்டுக் கருத்தினுள் நுழைந்தவள், சீக்கிரமே மறைந்தும் விடுவாள் என்ற எதிர்பார்ப்பு, பொய்த்துப் போனது.

ஏனோ, நினைவுகள் அவளிடமே சென்றன.

அழகிய முகத்தில் துறுதுறுக்கும் விழிகளுடன், உயர மாய், மென்மையான நளினத்துடன் நின்றிருந்த அவள் உருவமும், தேன் குரலில் அவள் வாசித்த கவிதையும், மனதை விட்டு நீங்க மாட்டேன் என்று அடம் பிடித்தன.

நாளாக ஆக, அவள் ஞாபகம் வெகுவாய் ஆக்ரமிக்க, தன் அப்பா அம்மாவிடம் இது பற்றி அவனே பேசினான்.

அவர்களும் மிகவும் மகிழ்ந்து போய், மதுரைக்கு போன் செய்து, அவனுடைய சித்தப்பா நந்தீஸ்வரனிடம் பேசினர்.

அபி முகேஷ், இதுவரை வந்த வரனை எல்லாம் மறுத்தே வந்ததில், மீனாட்சி தான் பெரிதும் பாதிக்கப் பட்டிருந்தார்!

சித்தப்பாவிற்கும் எல்லாமே தெரிந்ததால், அவருக்கும் ஆச்சரியமாகவே இருந்தது.

பிரின்ஸிபாலிடம் பேசிவிட்டு, அந்தப் பெண்ணைப் பற்றி விசாரித்துச் சொல்வதாகக் கூறினார்.

பிறகு, அந்தத் துறைப் பேராசிரியரிடம் பேசிவிட்டு, பரீட்சை முடிந்து விடுமுறை ஆரம்பித்ததும், தன் குடும்ப நண்பர் ஒருவரை, காயத்ரியின் வீட்டுக்கு அனுப்பினார் அவர்.

* * *

அன்று விடுமுறை என்பதால், மெதுவாக எழுந்து டிபன் சாப்பிட்டு விட்டு டி.வி. பார்த்துக் கொண்டிருந்த நந்துவை, அழைப்பு மணி ஓசை கலைத்தது.

காயத்ரி வேலையாக இருந்ததால், அவளே சென்று கதவைத் திறக்க, யாரோ ஒரு புதியவர் நின்றிருந்தார்.

''வாங்க! உங்களுக்கு யாரைப் பாக்கணும்?'' அவள் மெதுவாகக் கேட்டாள்.

''நான் காயத்ரி அம்மாவைப் பாக்கணும்... அவங்க இருக்காங்களாம்மா?'' என்று கேட்டார் அவர்.

அம்மாவுடைய அலுவலக நண்பராக இருக்குமோ என்று தோன்ற, இன்று வரை இது போல் அவரைப் பார்க்க யாருமே வந்ததில்லையே என்ற யோசனை வந்தது.

அவரை ஹாலில் அமர வைத்தவள், உள்ளே சென்று அம்மாவிடம் கூறிவிட்டுத் தன் அறைக்குச் சென்றாள்.

காயத்ரிக்குப் பிறகுதான் தெரிந்தது... அவர் நந்துவை பெண் கேட்டு வந்த விஷயம்!

எல்லா விபரத்தையும் கூறிவிட்டு, அந்த மனிதர் ஜாதகத்தைக் கொடுத்தபோது, காயத்ரிக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.



மறுநாளே, தன் அண்ணனிடம் நந்துவின் ஜாதகத்தைக் கொடுத்து அனுப்பியவர், மகளின் மனம் தெரிந்திருந்ததால், முதலில் இதுபற்றி அவளிடம் எதுவுமே கூறவில்லை.

அந்த வாரமே, அவர்களுடைய குடும்ப ஜோசியரிடம் குணசீலனை அழைத்துச் சென்று, அவர்கள் இருவரின் ஜாதகத்தையும் பார்த்தபோது, இரண்டுமே அம்சமாகப் பொருந்தின.

அன்றிரவு நந்துவிடம் மெதுவாக ஆரம்பித்தார் அவர்.

''நந்தும்மா... உன்கிட்ட முக்கியமான ஒரு விஷயம் பேசணும். போன வாரம் ஒருத்தர் என்னைப் பாக்க வந்திருந்தாரே... அவர் என்னோட நண்பர் இல்லை!

''உன்னை விரும்பிப் பெண் கேட்டு, உங்க காலேஜ் கரஸ்பாண்டன்ட் வீட்டுல இருந்து வந்தவர்தான்...

''ஜாதகம் எல்லாம் நல்லாப் பொருந்தி இருக்கு... மாப்பிள்ளை உன்னைக் காலேஜ் பங்ஷன்லே பாத்திருக்கார்... ரொம்பப் பிடிச்சிப் போச்சாம்!

''அதான் எக்ஸாம் முடியறவரைக்கும் காத்துட்டிருந்து, அதுக்கப்புறம் பேசலாம்னு முடிவெடுத்தாங்களாம்...

''ஜாதகம் பொருந்தினதாலே நாம சரின்னு சொன்னா, அடுத்த வாரமே பொண்ணு பாக்க வரதா சொல்றாங்க!

''எனக்கும், அண்ணனுக்கும் இதிலே பரிபூரண சம்மதம்... நீ என்ன சொல்றே?'' கேள்வியுடன் முடித்தார்.

தனக்குத் தெரியாமல், இத்தனை விஷயங்கள் தன்னைப் பற்றியே நடந்திருக்கிறதா என்ற ஆச்சர்யத்திலும், அதங்கத்திலும், அவள் விழிகள் விரிந்தன.

"அம்மா... உங்களுக்கே தெரியும்! கல்யாணம்னாலே எனக்கு எவ்வளவு வெறுப்புன்னு...!

"'அனி'க்கு அப்படி ஒரு கொடுமை நடந்தப்புறமும் எப்படிம்மா இப்படி ஒரு முடிவெடுத்தீங்க? என்னால முடியாது" என்றாள் உறுதியாக.

அனிதாவின் மரணம் அவளுக்குள் ரௌத்ரமாய் இருக்க, எதையுமே சுலபத்தில் மறக்க முடியவில்லை.

ஆண்களின் மீது வெறுப்பு மட்டுமே வந்தது.

அவளுடைய பெண்மையின் மென்மையும், இளமைக் கனவுகளும், அனிதாவின் மரணத்தால், ஆழ் மனதில் புதைந்து உறைந்து போயிருந்தன.

திருமணம், காதல் என்ற உணர்வுகள் மரத்துப் போய், ஒரு இறுகிப்போன உணர்வு தெரிந்தது அவளிடம்!

கனவுகள் கானல் நீராகி விட பனிப்பாறையாய் உறைந்து போய் இருந்தாள் அவள்.

## 4

நந்துவின் மனம், பிடிவாதமாக திருமணத்திற்கு உடன் பட மறுத்தது.

அவள் உறுதியாகத் திருமணம் வேண்டாமென்று மறுத்தபோது, காயத்ரி விடவில்லை.

"நந்தும்மா! சொன்னாப் புரிஞ்சிக்கணும்! நானும் அப்பாவும் கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமா இல்லையா? உங்கப்பா என்னைக் கொடுமைப்படுத்தினாரா என்ன..? இல்லையே!



"அனியோட வாழ்க்கை மட்டும் ஏனோ அப்படி ஆயிடுச்சி! அதுக்காக, எல்லா ஆண்களையும் கண் மூடித்தனமா குறை சொல்றது தப்புடா!" என்றார் பரிவுடன்.

"அதோட, வந்திருக்கற சம்மந்தம் ரொம்ப வசதியானது... அதனால நீ சொல்ற வரதட்சணைங்கிற விஷயமே இதில அடிபட்டுப் போயிடுது. அவங்க எதுவுமே டிமாண்ட் பண்ணலை..! நம்ம இஷ்டம்னு சொல்லிட்டாங்க... உன்னை விரும்பிக் கேக்கிறாங்க... யோசிச்சுப் பாரு நந்து, புரியும்!"

விடாப்பிடியாக, அவளை இணங்கச் செய்கின்ற முயற்சிகளில் இறங்கினார்.

என்ன யோசித்தாலும், நந்துவுக்கு உள்ளே ரணமாகிப் போயிருந்த மனதின் சில பகுதிகள் மனிதர்களை நம்ப மறுத்தன.

மறுநாள் காலையிலும், இந்தத் திருமணத்தில் இஷ்டமில்லை என்று நந்து கூறியபோது, காயத்ரிதான் மிகவும் உடைந்து போனார்.

"நந்தும்மா! என் சந்தோஷமே உன் முடிவுலதான்டா இருக்கு... தன் பொண்ணுக்கு நல்ல வாழ்க்கை அமைச்சுத் தரதை விட, ஒரு அம்மாவுக்கு வேற என்ன ஆசை இருக்க முடியும்..?

"அப்பாவும், அனியும் போனப்பறம், உன் ஒருத்திக்காகத்தான் நான் வாழ்ந்துட்டு இருக்கேன்..."

"நீ மட்டும் இல்லேன்னா, அன்னிக்கே நான் என் வாழ்க்கையை முடிச்சிட்டு இருந்திருப்பேன்... உனக்காகத்தான் நான் இருக்கறதே...

"புரிஞ்சுக்கடா! போன தடவை, சரியா விசாரிக்காம பண்ணின தப்பை இப்பவும் நான் செய்வேனா?

"மாமாவும் நானும் நல்லா விசாரிச்சிப் பாத்துட்டோம்... அந்தக் குடும்பம் ரொம்ப வசதியானதோட, நல்ல பாரம்பரியம் மிக்கக் குடும்பமாம்.

"நமக்கு நல்ல அதிர்ஷ்டம்னு மாமாவும் சொன்னாரு! மாட்டேன்னு சொல்லாதே நந்து... எனக்கு அப்புறம், உன்னை யார் பார்த்துப்பா? மெதுவா நாளைக்கு உன் முடிவைச் சொன்னாப் போதும்" என்றார் வேதனையுடன்!

உடனே நந்துவின் கண்கள் பனித்தன.

"எம்மா இப்படி எல்லாம் பேசறீங்க...? எனக்கு மனசே இறுகிப் போன மாதிரி இருக்கு! ஆண்கள், கல்யாணம் இதெல்லாம் சுத்தமாப் பிடிக்கலை... ப்ளீஸ்... இப்படியே இருந்திடறேனே!"

விழிகளில் கெஞ்சலுடன் யாசித்தாள்.

காயத்ரி ஒரு பெருமூச்சுடன் தொடர்ந்தார்.

"ஒருத்தர் ரோடுல அடிபட்டு இறந்துட்டா, நாம அப்புறம் ரோடுலேயே நடந்து போகமாட்டேன்னு சொல்ல முடியுமா? எத்தனையோ தடவை ஆக்சிடெண்ட் ஆன ட்ரெயின்லே, நாம திரும்பவும் போறதே இல்லையா...?

"எப்பவுமே பாஸிடிவ்வா திங்க் பண்ணணும் அப்படின்னு, நீதானே சொல்வே! எனக்கும் இப்பல்லாம் உடம்பு முன்னாடி மாதிரியே இல்லை நந்து! ஐ திங்க், யூ ஆர் அன் ஆப்டிமிஸ்ட்...

"அனிதாவோட கல்யாணத்துக்கு அப்புறம் மகிழ்ச்சியான விஷயமே நம்ம வீட்டுல நடக்கலை!



"இது ஏன் அந்த முதல் சந்தோஷமா இருக்கக் கூடாது? இந்த வாரம் அவங்களை வரச் சொல்லுவோம்... பையனை உனக்குப் பிடிச்சாத்தான் நாங்க மத்த விஷயமே பேசுவோம்... இல்லைன்னா மறுத்திடலாம்..!" மெதுவாக நிறுத்தினார்.

* * *

அன்று மாலை, வீட்டுக்கு வந்திருந்த மாமாவும் மாமியும் நந்துவிடம் பேசினர்.

அனிதாவைத்தான் நன்றாக வாழ வைத்துப் பார்க்க முடியவில்லை... அவளையாவது சந்தோஷமாகப் பார்க்க காயத்ரி ஆசைப்படுவதை அவர்கள் எடுத்துக் கூறிய போது, அவள் மனம் சிறிது அசைந்தது.

பிறகு, அனைவரும் கிளம்பி, மீனாட்சியம்மன் கோவிலுக்குச் சென்றிருந்தனர்.

அம்மனை தரிசித்துவிட்டு, பிரகாரத்தில் மூவரும் அமர, நந்துவை அழைத்துக் கொண்டு பொற்றாமரைக் குளத்திற்குக் கிளம்பினாள் கௌரி.

இருவரும் பேசியபடி மெதுவாகச் சென்று குளத்தின் படிக்கட்டுகளில் இறங்கி, நீரில் கால்கள் நனைய நின்ற போது, அந்த சிலீரென்ற தொடுகையில் உடல் சிலிர்த்தது, நந்துவுக்கு!

மேகங்கள் மிதந்த குளத்து நீர், அவர்களின் பாதத் தீண்டலால் அதிர்வலைகளாய் சிதறி... வளையங்களை வரைய, பஞ்சுப் பொதியாய் மேகங்கள் சிதறின.

ஞாபகக் குளத்தில் தூண்டில் வீசியது, நந்துவின் மனது... அதில் துள்ளும் மீன்களாய் சிக்கின... அனியின் நினைவுகள்!

இளமைப் பருவம்... சில உறவுகளைப் பற்றி, பல முக்கியக் காரணங்களால்... அழுத்தமான சில அபிப்ராயங்களை நம்முள் உருவாக்கி விடுகின்றன!

மறுபரிசீலனையின்றி, வாழ்க்கையின் பொதுவான நியதியாய் அதை மாற்றி... ஏன் எதற்கென்ற கேள்வியில்லாது... வாழ்க்கை முழுவதும் அதை நாம் தொடர்ந்து சுமக்கிறோம்!

இன்று... அதே நிலையில் நந்திதாவும்!

கௌரி அந்த நிமிடத்து மௌனத்தைக் கலைத்தாள்.

“நந்து! எத்தனையோ வருஷம் கழிச்சி, நான் அத்தையோட முகத்துல சந்தோஷத்தைப் பாக்கறேன். இந்த ஒரு சின்ன மகிழ்ச்சியை, நிம்மதியை... நீ அவங்களுக்குத் தரக்கூடாதா நந்து?”

அவள் கேட்டபோது மீதமிருந்த வைராக்யமும், பிடிவாதமும், பொடிப் பொடியாய் சிதற, அந்த நிமிடம் ஒரு முடிவுக்கு வந்தாள் நந்து.

சிறிது நேரம் கழித்து சிறு புன்னகையுடன் அவள் தலையசைக்க, வானத்தையே வசப்படுத்திய உணர்வு, கௌரியிடம்!

திரும்பி வரும்போது, தெய்வீகமாய் ஒலித்த ஆலய மணியின் ஓசையும், கோவிலுக்கே உரித்தான இனிய இதமான சூழ்நிலையும், ஏனோ நந்துவை அமைதிப் படுத்தவில்லை!



# 5

அடுத்த வாரமே, அபிமுகேஷின் வீட்டிலிருந்து நந்துவைப் பெண் பார்க்க வந்திருந்தனர்.

காயத்ரியின் அண்ணன் குடும்பத்தினரும், நண்பர்கள் சிலரும் வந்துவிட, அனைவரும் டிபன் செய்து வைத்துக் காத்திருந்தனர்.

வருகின்ற மாப்பிள்ளையிடம், தன் மனதைப் பற்றித் தெளிவாகக் கூறிவிட வேண்டுமென்பதில், மிகவும் உறுதியாக இருந்தாள் அவள்.

கௌரி, நந்துவுக்கு அலங்காரம் செய்துவிட, வசந்தா நீண்ட கூந்தலைத் தளரப் பின்னிப் பூ வைத்து விட்டார்.

எளிமையாக, ஒரு சிறிய நெக்லஸும், தோடும், அணிந்து கொண்டாள் நந்து.

அவள் கட்டி இருந்த இள நீல நிறப் பட்டுப் புடவை, அவள் அழகை மேலும் மிளிரச் செய்து, ஒரு உற்சவத்துச் சிலை போல் காட்டியது.

உதட்டுக்கும் மேல் இருந்த சிறு மச்சம், இயல்பாகவே ஆண்டவன் அவளுக்கு வைத்த திருஷ்டிப் பொட்டாய்!

அவள் உயரத்துக்கும், அழகுக்கும் எளிமையான அலங்காரமே கண்ணைப் பறித்தது.

வசந்தா மாமி வெளியில் சென்றவுடன், கௌரியிடம் மட்டுமே அவள் மனம் விட்டுப் பேசினாள்.

மனப்பறவை கடந்த காலத் திசையில் பின்னோக்கிப் பறக்க ஆரம்பித்து... உடனே சோகத்துடன் திரும்பி நிகழ்காலத்திற்கு வந்தது.

"கௌரி! எனக்கு என்னவோ எதுவுமே பிடிக்கலை... அனி அக்கா இறந்த பிறகு எல்லாத்துலயும் நம்பிக்கை போயிடுச்சி! அந்த வயசுலப் புரியாததெல்லாம், இப்ப நல்லாப் புரிஞ்சி, மனசுல ஆண்கள்னாலே வெறுப்பு தான் அதிகமா இருக்கு!"

அவள் குரலில் பெரும் வேதனை தெரிந்தது.

"நந்து... ஆண்கள் எல்லாரும் அப்படியே இருப்பாங்கன்னு சொல்ல முடியாதுடி... ஒவ்வொருத்தர் ஒவ்வொரு மாதிரி! எல்லா ஆண்களுமே கெட்டவங்களா என்ன...? நமக்கு எப்படி அமையுதுன்னுதான் பாக்கணும்."

"அதனால தான் நான் ரிஸ்க் எடுக்க விரும்பலை! யார் நல்லவங்க, கெட்டவங்கன்னு பழகினாத் தானே தெரியும்... கல்யாணம் பண்ணிட்டப்புறம் சுயரூபம் தெரிஞ்சு, லைஃபை வீணாக்கிக்கறதை விட இப்படியே தனியா நிம்மதியா இருந்திடலாமே...?" என்றாள் நந்து சோர்வுடன்!

"தேவை இல்லாம பயப்படாதே நந்து... உங்க அக்காவுக்குக் கெடுதல் நடந்தா, உனக்கும் நடக்குமா? நல்லதே நடக்கும் அப்படின்னு எதிர்பார்ப்போம்" அவளை அடக்கினாள் கௌரி.

• • •

வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

எழுந்து பார்த்தால், மாப்பிள்ளை வீட்டிலிருந்து அனைவரும் வந்துவிட, ஜன்னல் வழியே இருவரும் மெதுவாக எட்டிப் பார்த்தனர்.



காரின் முன்புறமிருந்து இறங்கிய அபிமுகேஷ், நல்ல உயரத்தில், மாநிறத்துக்கும் குறைவாக, அடர்ந்த கேசமும், மீசையும் கொண்டு... கம்பீரமான அழகோடு தெரிந்தான்.

எல்லோரும் உள்ளே வந்தபோது, கடைசியாக வந்தவனின் பார்வை, எதேச்சையாக ஜன்னலில் பதிந்தது.

அங்கு முழுநிலவாய் நந்துவைக் கண்டதும், மெல்லிய சிரிப்புடன் குறும்பாகக் கண் சிமிட்டினான்.

ஒரு நொடி, மனம் விதிர்த்துப் போக, வேகமாகத் திரும்பிக் கொண்ட அநந்திதாவுக்கு, இதயம் ஈரச்சிறகாய்!

எவ்வளவு தைரியமிருந்தால், தன்னைப் பார்த்து அவன் கண் சிமிட்டுவான் என்ற கோபம் வந்து, அனிச்சைச் செயலாய் முகம் சுருங்கியது.

தடதடக்கும் ரயிலோசையாய்... மனம் படபடத்தது. பெரியவர்களின் பொதுவான பேச்சுக்களுக்குப் பிறகு, பெண்ணை அழைத்து வரலாமே என்று ஒருவர் கூற, காயத்ரி உள்ளே வந்தார்.

பிறகு, தேவதை போலிருந்த நந்துவை, வரவேற்பறைக்கு அழைத்துச் சென்றார் வசந்தா.

அனைவரின் பார்வையும், தன் மேலேயே பதிந்து தான் ஒரு காட்சிப் பொருளாய் நிற்பது அவள் மனதை சங்கடப்படுத்தியது.

காயத்ரி கூறியது நினைவுக்கு வர, மெதுவாகக் கை குவித்து அனைவரையும் நமஸ்கரித்து விட்டு, மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்.

ஒரு வயதானவர் அவளைப் பார்த்து, "வாம்மா... வந்து உக்காரு" என்று கூறி விட்டு, எல்லாரையும் அறிமுகப் படுத்தினார்.

தன் மனைவி, தம்பி, அவர் மனைவி, மைத்துனர், அவர் மனைவி என்று வரிசைப் படுத்தினார்.

கடைசியாக "இவன்தாம்மா என் மகன் அபிமுகேஷ்வர்... உன்னைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன் அப்படின்னு சொல்லி, எங்களை இங்க அழைச்சிட்டு வந்தவன்!" என்றார்.

அவருடைய வெளிப்படையான பேச்சு, ஏனோ அவளுக்குப் பிடித்திருந்தது.

அவர் மனைவி எதுவும் பேசாமல் அருகில் அமர்ந்திருக்க, இது புயலுக்கு முன் வரும் அமைதியோ என்று அதையும் மனம் தவறாகவே கணித்தது.

யாரையுமே நம்புவதற்குத் தன் மனம் மறுப்பதை, அந்த நிமிடம் ஒருவித இயலாமையுடன் உணர்ந்தாள் அவள்.

உடனே கடிவாளமிட்டுத் தன் மனதை அடக்கியவள், மெல்ல நிமிர்ந்து அபிமுகேஷைப் பார்த்தாள்.

அவன், குறுகுறுத்த கண்களை சுருக்கி, கூர்மையான பார்வையை அவளிடமே பதித்திருந்தான்.

அவனுடைய விழி அம்புகள், தன்னைத் துளைத்துச் செல்வது போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்த உடனே, தன் பார்வையைப் பூமியில் பதித்தாள்.

அப்போது, அவனுடைய மாமா சாரங்கன், காயத்ரியிடம் பேச ஆரம்பித்தார்.

''முகேஷோட 'செட்'டிலே இருக்கற எங்க சொந்தக்காரப் பையனுங்களுக்கெல்லாம் கல்யாணமாயிடுச்சி! இவன்தான் தள்ளிப் போட்டுட்டே வந்தான்...



''எத்தனையோ சம்மந்தம் வந்தும் கல்யாணத்துக்கு ஒத்துக்காதவன், உங்க பொண்ணைப் பாத்துட்டு விரும்பினதுனாலதான், உடனே கிளம்பி வந்தோம்...

''இங்கே வந்தப்புறம் தானே தெரியுது, அவன் செலக்ஷன் பிரமாதம்னு!'' அட்டகாசச் சிரிப்புடன் முடித்தார்.

உடனே ''ஷ்... மாமா...!'' என்றான் முகேஷ், போதும் என்ற பாவனையில்!

பிறகு, மெதுவாகப் பேச ஆரம்பித்தார், முகேஷின் அம்மா மீனாட்சி.

''எங்களுக்குப் பொண்ணை ரொம்பப் புடிச்சிருக்கு... எங்க குடும்பத்துல, கல்யாணச் செலவை நாங்க ஏத்துக்கறதுதான் வழக்கம்!

''மத்தபடி, பொண்ணுக்கு நீங்க என்ன செய்யணும்னு நினைக்கிறீங்களோ, அதை செய்ங்க... போதும்! எங்க வீட்டில இருக்கறதெல்லாம், வரப் போற பொண்ணுக்குத் தானே!'' புன்னகையுடன் கூறினார்.

சட்டென்று உள்ளுக்குள் உலர்ந்தவளை, வேறு குரல் மீட்டது.

''உங்க பொண்ணையும் கேட்டுட்டு முடிவு சொன்னீங்கன்னா, உடனே தட்டு மாத்திக்கலாம்'' என்றார், முகேஷின் சித்தப்பா நந்தீஷ்வரன்.

உடனே, நந்திதாவை உள்ளே போகும்படி கண்ணசைவிலேயே கூறினார் காயத்ரி.

ஆனால், உள்ளே அழைத்துச் சென்ற உடனே, அவள் முகேஷிடம் தனியாகப் பேச வேண்டும் என்றாள்.

காயத்ரிக்கு இதை எப்படி அவர்களிடம் சொல்வது... சொன்னால் தப்பாக எடுத்துக் கொள்வார்களோ என்ற பயமும் தவிப்பும் மனதில் எழுந்தன.

தயக்கத்துடன் வெளியே வந்த அவரைப் பார்த்து, புன்னகைத்தார் முகேஷின் அப்பா மஹேஷ்வரன்.

''உங்க பொண்ணு கூட, முகேஷ் தனியாய்ப் பேசணும்னு சொல்றான்... அவங்களே பேசி ஒரு நல்ல முடிவை எடுக்கட்டுமே! உங்களுக்கு இதிலே ஏதாவது ஆட்சேபணை இருக்கா?'' என்றார் தெய்வ சித்தம் போல...!

ஒரு கணம் 'அப்பாடா' என்று மனம் நிம்மதியானது காயத்ரிக்கு!

அனைவரும் வெளியே வந்து விட, அநந்திதாவின் அறையிலேயே, முகேஷ் அவளுடன் பேச ஏற்பாடானது.

# 6

அறையின் உள்ளே வந்தவுடன், அவளையே கூர்ந்து பார்த்தவன், முகபாவத்திலேயே அவளது மனதைப் படித்தான்.

அவள் எதையோ சொல்லத் துடிப்பது, அந்த முகத்தில் தெரிந்தது.

''என்கிட்ட நீயும் எதையோ பேசணும்னு நினைக்கிறே இல்லை... எதுவா இருந்தாலும் சொல்லலாம்'' என்றான் மென்மையாக.



அவன் பேசிய உடனே, ஒருமைப் பன்மையில் நீண்ட நாள் பழகியவனைப் போல் தன்னை அழைத்ததை, மனம் உடனே குறித்துக் கொண்டது.

அவனிடம் தான் பேச எண்ணியிருந்ததைக் கோர்வையாகக் கூற ஆரம்பித்தாள் நந்து.

''மிஸ்டர் முகேஷ்... எனக்குக் கல்யாணம்கிற ஒரு கமிட்மெண்ட்டுல கொஞ்சம்கூட இஷ்டமில்லை... என்னால எந்த ஆணையும் நேசிக்க முடியாது! அது நீங்கன்னு இல்லை... யாரா இருந்தாலும்!

''என்னோட அக்கா அனிதா, வரதட்சணைக் கொடுமையால இறந்ததுலேருந்து, என் மனசுல அது ஆறாத ரணமாயிடுச்சி...

''எனக்கு என்னவோ, ஆண்கள் மேல ஒரு வெறுப்புதான் வருது! உங்களுக்கு ஒரு நல்ல மனைவியா என்னால நிச்சயமா இருக்க முடியாது. சாரி!...'' உறுதியுடன் முடித்தாள்.

அதற்குப் பிறகு அந்த அறையில், சிறிது நேரம் அமைதியே ஆட்சி செய்தது.

முதலில் மனம் சுருங்கினாலும், பிறகு ஏதோ ஒரு சுவாரசியம் வந்தது அவனுக்குள்!

அந்தக் கணமே... அவள்தான் வேண்டுமென்று ஏங்கியது மனது.

அவளுடைய முகத்தையே சிறிது நேரம் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த முகேஷ், அதில் தெரிந்த வெகுளித் தனத்தையும், பிடிவாதம் கலந்த கோபத்தையும், வெகுவாக ரசித்தான்.

அவள் உதட்டின் மேலிருந்த அந்த சிறு மச்சம், அவன் உள்ளத்தைப் பெரிதும் கவர்வதாய்!

அவளுடைய ஓரவிழிப் பார்வை, அவனுக்குள் ஆயிரம் தீபங்களை ஏற்றியது.

எந்த பதிலும் கூறாமல், தோளைக் குலுக்கிக் கொண்டு எழுந்த முகேஷ், கதவருகில் சென்றதும் திடீரென்று நின்று திரும்பினான்.

"எனக்குப் பொய் சொல்லிப் பழக்கமில்லை... சாரி! என்னால உன்னைப் பிடிக்கலைன்னு, அங்கே போய் சொல்ல முடியாது... ஏன்னா... எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு!"

அழுத்தமான குரலில் கூறிவிட்டு வெளியே சென்றவனைப் பதைப்புடன் தொடர்ந்தன, அவள் விழிகள்!

பிறகு, நேராக அவன் காயத்ரியிடம், சென்றான்.

"எனக்கு உங்க பொண்ணை ரொம்பப் பிடிச்சிருக்கு ஆன்ட்டி! அவகிட்டயும் கேட்டுட்டு அப்புறமா தேதிய முடிவு பண்ணுங்க."

இதழ்களில் உறைந்திருந்த குறும்புப் புன்னகையுடன் கூறினான்.

அங்கிருந்த அனைவரின் முகமும், மகிழ்ச்சியில் உடனே மலர்ந்தது.

காயத்ரியும், வசந்தாவும் பரபரப்புடன் உள்ளே சென்ற போது, முகேஷுடைய பதிலைக் கேட்டு அதிர்ச்சி அடைந்து அமர்ந்திருந்தாள், நந்து.

காயத்ரி, அவளிடம் மாப்பிள்ளையைப் பிடித்திருக்கிறதா என்று கேட்டபோது, ஒரு கணம் யோசித்து விட்டு மெதுவாகத் தலையாட்டினாள், சம்மதம் என்று...!



மனம் குளுரைத்தது... "மிகவும் சாமர்த்தியமாக நடந்து, என்னை வென்று விட்டதாக இறுமாந்திருப்பவனே... இனிமேல்தான் நீ தோற்கப் போகிறாய்... பாவம்!"

ஹாலில் உடனே, தாம்பூலத் தட்டு மாற்றினர்.

டிபன் சாப்பிட்டு விட்டு அவர்கள் செல்வதற்கு முன், முகேஷ் தனியாக அவளிடம் வந்தபோது, கௌரி இங்கிதத்துடன் விலகிச் சென்றாள்.

அவளிடம் குனிந்தவன், "நந்து! சரின்னதுக்குத் தேங்க்ஸ்... ஆனா நான் உன்னை மாத்திக் காட்டுவேன்... என்னை நீ, நிச்சயமா விரும்புவே பார்..." மெல்லிய குரலில் சவாலாகக் கூறினான்.

அதே வேகத்தில் நிமிர்ந்தாள் அநந்திதா.

"பாவம் நீங்க! உங்களாலே முடியாது...! உங்களை என்ன... எந்த ஆணையுமே என்னால விரும்ப முடியாது! வாழ்க்கையில ரொம்ப ரிஸ்க் எடுக்கறீங்க" சுழித்த உதடுகளுடன் சீண்டலாகக் கூறினாள்.

"அதையும் பாப்போம்...! எனக்கு எப்பவுமே, ரிஸ்கியான விஷயமெல்லாம் ரொம்பப் பிடிக்கும்... நான் நினைச்சதை சாதிக்கிறவன்... தெரியுமா?"

முகேஷின் குரல் அழுத்தமாக வந்தது.

விதிர்த்துப் போய் நிமிர்ந்த நந்துவின் மனமும், "நானும் அப்படித்தான்!" என்று கூறியது!

விழிகள் கசப்பை உமிழ்ந்தன.

"என்ன...?" என்பது போல் ஒற்றைப் புருவத்தை ஏற்றி இறக்கியவனிடம், ஒன்றுமில்லை என்பது போல் மெல்லத் தலையசைத்தாள் அவள்.

உள்ளத்திற்குள், நீறு பூத்த தணலாய் கனன்ற பழி உணர்வு மெதுவாக இறுகியது.

# 7

பிறகு அடுத்து வந்த இரு மாதங்களும், புடவைக் கடையிலும், நகைக் கடையிலும், பத்திரிகை கொடுப்பதிலுமே சென்றன.

எந்தக் கனவுகளும் இன்றி நிர்மலமாக இருந்த நந்துவின் மனம், தன் அம்மாவிற்காகத் தன்னுடைய சுய விருப்பத்தைத் தொலைத்தது.

ஒரு கர்மயோகியைப் போல், கல்யாணத்தை ஏற்றுக் கொண்டது!

கும்பகோணத்தில், முகேஷுக்குள்ளோ நந்துவின் நினைவுகளே அதிகம் ஆக்ரமித்தன...

ஏனோ மறக்க முடியாமல் மனதில் மையம் கொண்டன.

நேயர் விருப்பம் போல், உறக்கத்தின் விருப்பமாய் வரும் கனவிலும், அவள் முகவரியே தெரிந்தது.

அந்த ஞாயிறு, முகேஷ் தன்னுடைய பெயிண்டிங் கேன்வாஸை எடுத்து, மனதில் பதிந்திருந்த அவள் உருவத்தை ஓவியமாக வரைய ஆரம்பித்தான்.

முதன் முதலில்... அவன் இதயச் சுவரிலும் புதிதாய் ஒரு பெண்ணின் ஓவியம்!



அன்று மாலையில் ஓவியத்தை வரைந்து முடித்த போது, அவன் நேசத்தின் விளைவோ என்னவோ, அவளுடைய உருவம் ஒரு புகைப்படத்தைப் போல் அற்புதமாய் வந்திருந்தது.

இரு விழித்தாமரை மலரச் சிரித்தது.

காதல் கொண்ட தன் மனதைப் போலவே, முகேஷ் அதையும் பீரோவில் பத்திரப்படுத்தினான்.

கல்யாணக் கனவுகள் அவன் மனதிலும் உலா வர, அவள் நினைவுகள் நெஞ்சு வானில் தேய மறுத்தன.

திருமணத்துக்கு இரு தினங்கள் முன்பே, ஊரிலிருந்து உறவினர்கள் அனைவரும் வந்து விட்டனர்.

எல்லோரும் கும்பகோணத்திற்குச் செல்ல, ஒரு பஸ் ஏற்பாடு செய்திருந்தார் காயத்ரி.

நாளை காலையில் பெண் அழைக்க வரும்போது, நந்துவுடன் காரில் பெண் வீட்டு சார்பில், அவளுடைய சித்தப்பாவும் சித்தியும் வருகிறார்கள்.

பஸ்ஸும் அவர்களுடனே கிளம்பிச் செல்ல ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

அதிகாலையில் எழுந்ததும், நந்துவுக்குப் பட்டுப் புடவையை உடுத்திய பிறகு நகைகளும், நெத்திச் சுட்டியும் அணிவித்து விட்டு, தலை அலங்காரமும் செய்து அழகாகத் தயார் செய்தனர்.

அநந்திதாவின் மனமோ, எதிலும் ஈடுபாடின்றி மரத்துப் போன ஒருவித உணர்வுடன் பெரிதும் அலைப்புற்றிருந்தது.

* * *

காலையில் எட்டு மணிக்கெல்லாம், மதுரையிலிருந்த முகேஷின் சித்தப்பாவும், சித்தியும் பெண் அழைக்க வந்து விட, டிபன் சாப்பிட்ட பிறகு எல்லோரும் இரு வாகனங்களில் கிளம்பினார்கள்.

கார் முன்னே செல்ல, பஸ் அதைப் பின் தொடர்ந்து வந்தது.

பல வருடங்கள் கழித்துத் தான் பிறந்து வளர்ந்த தாய் நிலம் செல்வது மனதுக்குப் பரவசமாக இருந்தாலும், மனதின் ஓரம் அனிதாவின் நினைவு அதை விட அதிகமாய் ஆக்ரமித்தது.

கும்பகோணத்துக்குள் கார் நுழையும் போதே, மனம் ஏனோ சிலிர்ப்புடன் பரபரத்தது.

ஊரைப் புதிதாக்கி, மனிதர்களைப் பழையதாக்கி இருந்தது, காலச்சக்கரம்!

பழைய அடையாளம் தொலையாமல் சில இடங்கள் மட்டும் அப்படியே தெரிந்தன.

ஊருக்குள் நுழைந்ததும், கும்பேசுவரர் கோவிலைப் பார்த்ததும், மனதினுள் உருகி வேண்டிக் கொண்டாள் அநந்திதா.

கடல் காதலனுடன் கை கோர்ப்பதற்காக, சந்தோஷமாய் சுழித்தபடித் தாவிவரும் காவிரிக் காதலியும்... குறிஞ்சியாய் மலரும் மகா மகமும்... வேத பாடசாலையின் வேத முழக்கங்களும்... தெருவோரம் தனை இழுக்க தவமிருக்கும் தேர்களும்... கல்லூரிப் பெண்களோடு கலகலத்துச் சிரித்தபடி ஓடும் அரசலாறும், மறக்காமல் நினைவுப் பரப்பில் வந்தன.



நட்புடன் கை கோர்த்த இல்லங்களும், நகரின் நாடித் துடிப்புகளாய் திரையரங்குகளும், எந்த திசை திரும்பினாலும் தெரிகின்ற தேவகோபுரங்களின் திவ்ய தரிசனமும், காந்தி பார்க்கில் சொற்போர் நடத்தும் மூத்த குடிமக்களும் மாறாமல் அப்படியே...!

பிறந்து வளர்ந்த மண்ணை மட்டும், நெஞ்சம் எந்த நாளும் மறக்காது என்று தோன்றியது, நந்துவுக்கு...!

அவர்களுடைய கார், நகரிலேயே பெரிய திருமண மண்டபத்தினுள் நுழைந்தது.

மாப்பிள்ளை வீட்டினர் அவளுக்கு ஆரத்தி சுற்றி மகிழ்வுடன் வரவேற்றனர்.

அப்போது, நந்துவைக் கைப்பிடித்து உள்ளே அழைத்துச் சென்ற பெண், தன்னை சந்தியா, முகேஷின் அண்ணி என்றும் அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

மண்டபத்தின் உள்ளே சென்று, அங்கிருந்தவர்களை வணங்கி விட்டுத் தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்றாள் நந்து.

மதியம் சாப்பிட்டு விட்டு ஓய்வெடுத்த போதும், ஏனோ உறக்கமே வரவில்லை.

ஏதோ ஒரு சிறைக்குள், தன்னை வலுக்கட்டாயமாக அனுப்பி சுதந்திரச் சிறகுகளை வெட்டி பூட்டி வைக்கப் போகும் ஒரு உணர்வு!

பெண் வீட்டினருக்கு, ஹோட்டலிலும் அறைகள் பதிவு செய்திருந்ததால், பாதிப்பேர் அங்கு சென்றிருந்தனர்.

மாலை நான்கு மணிக்கே அழகு நிலையத்திலிருந்து இரு பெண்கள் வந்து, ரிசப்ஷனுக்கு அவளை அலங்கரித்துத் தயார் செய்தனர்.

மாப்பிள்ளை வந்து விட்டதாகவும், மிகவும் நன்றாக இருக்கிறாரென்றும், சித்தி பெருமையுடன் அவளிடம் கூறினார்.

நிச்சயதார்த்த மேடைக்குச் சென்று, அவளுக்கென்று போடப்பட்ட இருக்கையில் அமர்ந்ததும் நிமிர்ந்து பார்த்தால், கீழே நேர் எதிரே... முகேஷ் அமர்ந்திருந்தான்.

கோட், சூட்டில் ஆண்மை அழகுடன் கம்பீரமாகத் தெரிந்தான்.

நந்துவின் விழிகள் தன்னையே நோக்குவதைக் கண்டதும், உதடுகளில் குறும்புச் சிரிப்புடன் அவளை அளவெடுத்து விட்டுப் பார்வையாலேயே அவளை ரசித்துப் பாராட்டிக் கண் சிமிட்டினான்.

அவனுடைய விழிகள் தன் மீது பட்டவுடனே, உள்ளுக்குள்ளே ஏதோ ஒன்று புதிதாய் உயிர்த்தெழுவது, அவளுக்கு புரியாத புதிராய்!

நந்துவின் உள்ளம் படபடத்து, முகம் குழம்பிச் சிவந்தது.

விழிகளை, அவசரமாக வேறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

பிறகு நிச்சயதார்த்தம் முடிந்து ரிசப்ஷனில் அவனருகே நின்ற போதும், அவளின் அடிவயிற்றில் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் பறப்பது போன்ற ஒரு விநோத உணர்வு!



தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, முகத்தில் போலியாக வரவழைத்த புன்னகையுடன் வருபவர்களை கவனிக்க ஆரம்பித்தாள் அவள்.

தங்க நிறத்தில் முழுவதும் ஜரிகைகள் நெய்யப்பட்டிருந்த புடவையில், ஒரு தங்கப் பதுமை போலிருந்தாள் நந்து.

தோளில் அணிந்திருந்த மாலை, சுமையாய் கனக்க, நெஞ்சம்அதை விடவும் அதிகமாய் கனத்தது.

மனதின் படபடப்பை மறைத்து, புன்னகையை இதழுக்குக் கொடுத்து சமாளித்தாள்.

அவன், தன்னை அடிக்கடி ஓரப் பார்வையில் கவனிப்பதை உணர்ந்தாலும், நந்து அவனை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை.

ஆனால், பார்வையால் மட்டுமே தன்னை அவன் தீண்டியது, ஏனோ அவன் மேல் ஒரு வித மதிப்பைக்கூட கொண்டு வந்தது.

அனாவசியமான வழிசலோ, உரசலோ இன்றி கம்பீரமான நிமிர்வுடன் நின்றிருந்தான் அவன்.

வரவேற்புக்கு இடையில், முகேஷின் அம்மா மீனாட்சி அவர்களுக்கு கூல்டிரிங்ஸ் கொண்டு வந்து கொடுத்து விட்டு, அவளைப் பாசமாகக் கன்னம் வருடிச் சென்றார்.

இவரிடம் தான் எப்படி நடந்து கொள்ளப் போகிறோம் என்பதே புரியாத புதிராய் இருந்தது, அவளுக்கு!

அனிதாவின் வாழ்க்கை இங்கு தொடர்கதையாகப் போகிறதோ என்ற பயம் பரவி, உடல் குலுங்கியது.

தொட்டாற் சுருங்கியாய், மனம் தன்னை சுருக்கிக் கொண்டது.

அப்போது, அவளருகில் வந்தாள் கௌரி.

"நந்து... முகத்தைக் கொஞ்சம் சிரிச்ச மாதிரி வச்சிக்க சொல்லி, அத்தை சொல்லச் சொன்னாங்க" என்று கிசு கிசுத்தாள்.

இருவரையும் கவனித்த முகேஷ் அவளிடம் குனிந்தான்.

"என்ன... எனக்குத் தெரியாத ரகசியம்... என்னைப் பத்தியா? அதை என்கிட்டயே சொல்லலாமே? அப்புறம்... உன்னைப் பாத்துட்டு வந்ததிலிருந்து... நீ தினம் என் கனவுலே வரே... தெரியுமா?"

ஒற்றைக்கண் சிமிட்டி கேட்டு விட்டு ஒற்றைப் புருவம் உயர்த்தி கேலியாகச் சிரித்தான்.

"ப்ச்...! எனக்குக் கனவே வரதில்லை..." என்றாள் நந்து சுவாரசியமின்றி!

"ஓஹோ... நானாவது தூங்கறேன்! நீ என் நினைப்புலத் தூங்கறதே இல்லைன்னு இப்பத்தானே தெரியுது!

"என் போட்டோ கூட இல்லியே உன்கிட்டே... என்னை மனசிலேயே பதிச்சிட்டியா?" சீண்டலாக வந்தது அவன் குரல்!

கோபத்தில் பற்களைக் கடித்துக் கொண்டு திரும்பி, வருபவர்களை அவள் கவனிக்க, அவனும் அனைவரையும் அவளுக்கு அறிமுகப்படுத்தினான்.

அப்போது சந்தியாவும் அவள் கணவன் வாசனும் மேடை ஏறி வந்தனர்.



முகேஷ் அவளிடம் "இவன்தான் என்னோடப் பெரியப்பா பையன் வாசன்! என் கூடவே பி.டெக். படிச்சவன்... என்னோட பெஸ்ட் ஃப்ரெண்ட் அப்படின்னு கூடச் சொல்லலாம்! இவங்க, அவன் ஒய்ஃப் சந்தியா" என்றான்.

சந்தியா, உரிமையுடன் நந்துவின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"என்னை அறிமுகப்படுத்த வேண்டாம்... நாங்க முன்னாடியே ஃப்ரெண்ட்ஸ் ஆயிட்டோம்... இல்லை நந்து? ஹேப்பி மேரீட் லைஃப்!" என்று வாழ்த்தினாள்.

ஒரு பக்கம் மேடையில் இசைக் குழுவினர் பாடிக் கொண்டிருக்க, அந்த மண்டபமே கோலாகலமாய் மகிழ்ச்சி நிறைந்து தெரிந்தது.

ஆனால், மகிழ்ச்சியில் திளைக்க வேண்டிய அவள் மனமோ, கலக்கத்தில் இருந்தது.

புதை குழிக்குள் மூழ்கியதைப் போன்ற ஒரு உணர்வுடன், கரையேற வழியின்றி தவிப்புடனிருந்தவளுக்குள், எதிர்காலம் பெரும் கேள்விக் குறியாய் எழுவதாய்!

## 8

இரவு ரிசப்ஷன் முடிந்து, எல்லோரும் சாப்பிடும் போது சந்தியாவும், வாசனும் அவர்களைக் கேலி செய்து கொண்டே இருந்தனர்.

எல்லாவற்றுக்கும் மௌனமாகத் தலை குனிந்து அமர்ந்திருந்தாள் அநந்திதா.

அதை, வெட்கம் என்று நினைத்தான் வாசன்.

"முகேஷ்... இன்னிக்குத்தான் இப்படி வெக்கப்பட்டுட்டுப் பேசாம தலையக் குனிஞ்சப்பாங்க...! அப்புறம் தாலி கட்டினப்புறம் அவங்க பேச ஆரம்பிச்சா, நம்மாலே தாங்க முடியாது" என்றான் கேலியாக.

"ஏய்... உன்னோட எக்ஸ்பீரியன்ஸா...?"

முகேஷ் கிண்டலாகக் கேட்டு விட்டு, ஓரக் கண்ணால் அவளை நோக்கி சிரித்தபோதும், அவளுடைய மௌனத்தின் அர்த்தம் அவனுக்கு மட்டுமே புரிந்தது.

இரு கண்களால் அவளை சிறை எடுத்தவன், தனக்குள்ளேயே ரகசியமாகப் புன்னகைத்துக் கொண்டான்.

உன்னை என் அன்பால், நேசத்தால் வீழ்த்திக் காட்டுவேன் என்ற உறுதி வந்தது அவனுக்குள்!

மறுநாள் காலையில் திருமணம் விமரிசையாக நடைபெற, அவன் தொட்டுத் தாலி அணிவிக்கும்போது, மேனி முழுவதும் கூசிச் சிலிர்த்தது நந்துவுக்கு!

ஒரு ஆடவனின் தொடுகைக்கு இவ்வளவு சக்தி உண்டு என்பதை அவள் இன்றுதான் புரிந்து கொண்டாள்.

பிறகு நடந்த சடங்குகள் எல்லாமே, ஒரு நீண்ட கனவு போலிருந்தன.

தான், திருமணமென்னும் பந்தத்தில் சிக்கி, விடுபட முடியாது சிறைப்பட்டிருப்பதைப் போல் ஒரு எண்ணம் எழ, உள்ளத்தைப் பெரும் ஆயாசமே ஆக்ரமித்திருந்தது.

* * *



பிறகு, மண்டபத்திலிருந்து அவர்களுடைய வீட்டுக்குச் சென்றபோது, ஒரு இறுக்கத்துடன் வந்தவளைத் திருப்பிப் பார்த்தவனின் மனதில், பல யோசனைகள்!

முகேஷின் வீடு, ஸ்ரீநகர் காலனியில், பெரிய தோட்டத்தின் நடுவே அழகாக அமைந்திருந்தது.

மீனாட்சி ஆரத்தி சுற்றி அவர்களை அன்புடன் வரவேற்று, பால் பழம் கொடுத்து விளக்கேற்றும்படிக் கூறினார்.

பிறகு பேசிக் கொண்டிருந்தபோது, முகேஷின் வீட்டில்தான் மூன்று நாட்கள் தங்க வேண்டும் என்று சந்தியா கூறியபோது, நந்துவின் மனம் அனிச்ச மலரானது.

எதையும் மனதார ஏற்க மனமின்றி இறுகிய இதயம்... மௌனக் கூக்குரலிட்டு விசும்புவதாய்!

காயத்ரியும் மற்றவர்களும், அன்று மாலையே மதுரைக்கு கிளம்பியபோது, அநந்திதாவுக்குக் கண்ணீர் கரை புரண்டு வழிய கட்டுப்படுத்திக் கொள்ளவே முடியவில்லை.

மாமாவும் மாமியும் துணைக்கு இருந்தாலும், திக்குத் தெரியாத காட்டில் தனித்து விடப்பட்டது போல் ஒரு உணர்வு!

இரவு நெருங்க நெருங்க, ஒருவித பயம் உடல் முழுவதும் பரவி, மனம் பதட்டத்தைத் தத்தெடுத்தது.

மாமியும், சந்தியாவும் அவளை அலங்கரித்துத் தயார்ப்படுத்தி, மாடி அறைக்கு அழைத்துச் சென்று நலங்கு வைத்து அவர்களிருவரையும் விட்டு வந்தனர்.

கதவை சாத்திய அறைக்குள், முதல் முறையாக ஒரு ஆணுடன் தனியே இருக்க நேர்ந்தது... உள்ளத்தில் பயத்தை விதைத்தது.

மனம் சோக அருவியில் நீராட, வெளிப் பார்வைக்கு இயல்பாக இருந்தாலும், உள்ளம் சருகாய் உலர்ந்து இருந்தது.

ஜன்னலருகில், கைகளைக் கட்டியபடி நின்று அவளையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த முகேஷைப் பார்த்தபோது, அப்படியே திரும்பி வெளியே ஓடிப் போய்விடலாமா என்றும் எண்ணினாள்.

ஒரு பெருமூச்சுடன் மெல்ல அவள் அருகில் வந்தவன், அவளை உட்காரும்படிக் கூறிவிட்டு, தானும் கட்டிலின் மறுபுறம் அமர்ந்து கொண்டான்.

## 9

இருவருமே சிறிது நேரம் மௌனமாக இருக்க... முகேஷ்தான் முதலில் பேசினான்.

"என்ன..? அப்படியே எழுந்திரிச்சி வெளியே ஓடிப் போவிடலாம்னு இருக்கா? என்னைப் பாத்து பயப்பட வேண்டாம்! உனக்கு விருப்பமில்லாத எதையுமே நான் செய்ய மாட்டேன்... உன் விஷயத்துல மட்டும்!

"உன்னோட வீடு மாதிரியே, நீ இங்கே சுதந்திரமா இருக்கலாம். எப்போ உன் அம்மாவப் பாக்கப் போகணும்னு விரும்பறியோ, போகலாம்! நான் அதிலெல்லாம்



தலையிட மாட்டேன்" என்று நிறுத்தியவன் தொடர்ந்தான்.

"நமக்குள்ளே இருக்கற இந்த உறவு, நட்பா மட்டுமே இன்னிக்கு ஆரம்பிக்கட்டும்! உன் மனசு மாறி, நிச்சயமா நீ என்னை நேசிக்க ஆரம்பிப்பே... எனக்கு அதுலே எந்த சந்தேகமும் இல்லை!

"ஆனா அது நமக்குள்ளே இருக்கணும்! வேற யாருக்கும் தெரிய வேண்டிய அவசியம் இல்லைன்னு நான் நினைக்கிறேன்...! நீ என்கிட்டே ஏதாவது சொல்லணுமா...?"

அவன் பேசி முடித்தபோது, தான் பேச நினைத்ததை எல்லாம் அவனே பேசி விட்டதை அவள் உணர்ந்தாள்.

பிறகு ஒன்றுமில்லை என்பது போல் தலையசைத்து விட்டு, கட்டிலில் இருந்து ஒரு போர்வையும் தலையணையையும் எடுத்துக் கீழே விரித்துப் படுத்துக் கொண்டாள் நந்து.

"நான் தரையிலப் படுத்துக்கறேன்... நீ வேணும்னா கட்டில்லே படுத்துக்க" என்றான் முகேஷ்.

"வேண்டாம்... எனக்கு இதுதான் வசதி... இங்கேயே படுத்துக்கறேன்" என்று படுத்தாள்.

ஏனோ வெகு நேரம் உறக்கம் வராமல் தவித்து, விடியும் முன்பு தான் உறங்கவே ஆரம்பித்தாள்.

முகேஷும், உறக்கம் வராமல் படுத்திருந்தான்.

சிறு வயதில் தேவதைக் கதை கேட்டுத் தான் தூங்கியதும், இன்று ஒரு தேவதையால் தன் தூக்கத்தைத் தொலைத்துத் தவிப்பதும் புரிவதாய்!

தன்னுள் புதைந்திருந்த அவள் நினைவுகளையே ஏணியாக்கி, அந்த நிலவைத் தொட மனம் விழைந்தது!

ஆனால், அந்த நிலவோ முகம் திருப்பி பனிச்சிற்பமாய் சயனித்திருந்தது.

* * *

இருவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது, அறைக்கதவு மெலிதாகத் தட்டப்பட்டது.

திடுக்கிட்டுக் கண் விழித்த நந்து, தான் இருக்குமிடம் புரிந்து வேகமாக கதவைத் திறந்தாள்.

வெளியே, மாமி புன்னகையுடன் 'குட்மார்னிங்' சொல்லி விட்டுத் தலை குளித்து விட்டு வரச் சொன்னார்.

நகைகளைக் கழட்டி, தன் பீரோவில் வைத்தவள், குளியலறைக்குச் சென்றபோது, அங்கு ஒரு ட்ரெஸ்ஸிங் ரூம் இருந்தது கண்டு நிம்மதியாக இருந்தது அவளுக்கு!

முகேஷ் இருக்கும்போது எப்படி உடைமாற்றுவது என்ற பயம் இனி இல்லை என்பதால், தன் பெட்டியை அங்கேயே கொண்டு வந்து வைத்தாள்.

குளித்து முடித்துத் தயாராகி, தலை காய்வதற்காக இருபுறமும் ஹேர்பின்களைக் குத்தி, கூந்தலை விரித்து விட்டபடி, வெளியே வந்தாள்.

முகேஷ் அப்போதுதான் விழிக்க ஆரம்பித்திருந்தான்.

அவளைக் கண்டதும் சோம்பலாக, ''குட்மார்னிங்'' என்று குறும்பாகக் கண்சிமிட்டியபடி, எழுந்து அமர்ந்தான்.

அவனுடைய இதயம் ஒரு நிமிடம் தடம் புரண்டு, மீண்டும் துடிக்க ஆரம்பித்தது.



யோசனையுடன் சென்று ஜன்னலருகே நின்றபோது, வாடிய மலர்களைக் கூந்தலிலிருந்து பிரித்து எடுத்துப் போட்டதைப் போல், ஏனோ அவனை மனதிலிருந்து சட்டென்று ஒதுக்க முடியவில்லை.

முகேஷ் அவளையே குறுகுறுவென்று பார்த்தபடி, அவள் அழகையே விழிகளால் பருகிக் கொண்டிருந்தான்.

அப்போது, தன்னை யாரோ உற்றுப் பார்ப்பது போல் நந்துவுக்குத் தோன்றியது.

முதுகில் ஊசியாய் உரசிய அவனுடைய பார்வை புரிந்து, நகைகளை எடுத்து அணிந்து கொண்டு வேகமாக வெளியே சென்றாள்.

அவள் போவதையே ஒரு நமட்டுச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தவன், துண்டை எடுத்துக் கொண்டு குளிக்கச் சென்றான்.

விடியலில், பூவனங்களில் வண்டுகள் மலர்களைத் தேடி சுற்றுலா போய்க் கொண்டிருந்தன.

சூரியன் தயக்கமாய், முகம் சிவக்க எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அறையை விட்டு வெளியே வந்த நந்து, எந்தப் பக்கம் செல்வதென்று புரியாமல் விழித்துக் கொண்டிருந்த போது, எதிரே வந்தாள் சந்தியா.

குறும்புடன் 'குட்மார்னிங்' கூறிவிட்டு, தோகையைப் போல் முதுகில் விரிந்திருந்த கூந்தலை ரசித்துப் பார்த் தாள்.

''என்ன நந்து... கண்ணெல்லாம் சிவந்திருக்கு... ராத்திரி தூங்கினீங்க இல்லை...?''

அவள் குரலில் இதமான கேலி தெரிய, தர்ம சங்கடத்துடன் தலை குனிந்து கொண்டாள் நந்து.

அவளை அழைத்துச் சென்ற சந்தியா, நந்துவின் மாமி தங்கி இருந்த அறையில் அவளை விட்டு விட்டுச் சென்றாள்.

"நந்தும்மா... இந்தக் காலத்துப் பெண்களுக்கு சொல்ல வேண்டியதில்லை! சந்தோஷமா இருக்கணும்... என்னவானாலும் மாப்பிள்ளையோட அனுசரிக்கப் போகணும்... சரியா?"

மாமி அறிவுரைகூற, மறுப்பாக ஒன்றும் கூறாமல், மௌனமாகத் தலையாட்டினாள் அவள்.

மனம் ஏனோ முகேஷிடமே பதிந்திருக்க, அன்று முழுவதும் உறவினர்கள், நண்பர்களின் வருகையால் வீடே கலகலப்பாய் இருந்தது.

முகேஷின் அம்மா, பொறுமையாக எல்லோரையும் வரவேற்று அன்புடன் கவனித்துக் கொண்டிருந்தார்.

இந்த வீட்டில் இயல்பாய் ஒன்றி தன்னால் இருக்க முடியுமாவென்ற யோசனையின் முடிவு மட்டும் இனிதாக இல்லை.

## 10

அன்றிரவு, அவள் தரையில் போர்வையை விரிக்கப் போனபோது முகேஷ் தடுத்தான்.



பீரோவிலிருந்து ஒரு அழகிய ரஸாய் மெத்தையை எடுத்துக் கொடுத்தவன், அதை விரித்துப் படுக்கச் சொன்னான்.

நந்துவுக்குப் படுத்து வெகு நேரமாகியும் உறக்கம் வராமல், மனதில் ஏதேதோ எண்ணங்கள் உலா வரத் தொடங்கின.

முகேஷைப் பற்றி எண்ணும்போது ஏனோ அவனைக் கெட்டவனாகவே உருவகப்படுத்த முடியவில்லை.

ஆனால், அனிதாவின் கணவனும் ஆரம்பத்தில் நல்லவனாகவே இருந்து, பிறகு பொய்த்துப் போனதை மனம் நினைவில் பதித்தது.

ஆண்களே மோசமானவர்கள்தான் என்ற எண்ணம் மனதில் உறுதியாய் நிறைய, உறங்கிப் போனாள் அவள்.

கனவுகளையும், ஏக்கங்களையும் தனக்குள் நிரப்பி விட்டு, சலனமின்றி உறங்குபவளைப் பார்த்தால், பொறாமையாக இருந்தது முகேஷுக்கு!

கண்களை மட்டும் மூடியபடி, நினைவுகளில் நடை பயின்ற முகேஷின் மனம் முழுவதும், காற்றடைத்த பந்தைப் போல் நந்துவின் நினைவு!

எப்படியும் தன்னை விரும்பி, அவள் தன்னிடம் வருவாள் என்ற தன்னம்பிக்கை நிலை பெற, அவனும் நித்திரையைத் தழுவினான்.

இரவு, இருவரையும் கவனித்தபடி பொழுதை நகர்த்திக் கொண்டிருந்தது.

மறுநாள் சந்தியாவும், மாமியும் துணை இருந்ததால், நந்துவுக்கு நன்றாகப் பொழுது போனது.

ஒரு ஆர்வத்துடன் சந்தியாவோடு அந்த வீட்டைச் சுற்றிப் பார்த்தபோதுதான், ஒவ்வொரு அறையிலும் மாட்டப்பட்டிருந்த விதவிதமான பெயிண்டிங்குகளை கவனித்தாள் அவள்.

எல்லாமே வித்தியாசமாய் அவள் கருத்தைக் கவர்ந்து விட, ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளையே கவனித்த சந்தியா "என்ன நந்து பாக்கறீங்க? எல்லாமே முகேஷ் மாமா வரைஞ்சதுதான்!" என்றாள் பெருமையாக.

பிரமிப்புடன் "ஓ...!" என்றபடி திரும்பியபோது, அங்கு வந்த முகேஷின் பார்வையில், ஏதோ ஒரு மாற்றம் தெரிந்தது.

சந்தியா இங்கிதத்துடன் அங்கிருந்து விலகிச் செல்ல, முகேஷின் குரல் வெகு அருகில் கேட்டது.

அவன் "எப்படி இருக்கு...?" என்றபோது, மெதுவாகத் தலையசைத்து விட்டு அவள் வேகமாகத் திரும்பினாள்.

"ஒரு நிமிஷம்! ஒருத்தரைப் பாராட்டறதுக்குக் கூட தனி மனசு வேணும்... அதுவும், நமக்குப் பிடிச்சவங்களா இருந்தாதான் முடியும் போலருக்கு... ஆனா, நான் அப்படி இல்லை. எதிரியா இருந்தாக் கூட, நல்லது செஞ்சா பாராட்டுவேன்" என்றான் முகேஷ், சிறு கேலியுடன்!

உடனே முகம் சுருங்கிவிடத் திரும்பிச் சென்ற நந்துவின் மனமும், ஓட்டுக்குள் சுருங்கும் நத்தையானது.

அங்கிருந்த மூன்று நாட்களும் மெதுவாக சென்று விட, அவர்கள் மதுரைக்குச் செல்லும் நாளும் வந்தது.



சந்தியா தம்பதியுடன் மாமா, மாமியும் உடன் வர இருவரும் கிளம்பினார்கள்.

மதுரையிலிருந்து, தேனிலவுக்கென தேக்கடிக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தான் முகேஷ்.

மதுரைக்குச் சென்றதிலிருந்து, நான்கு பேருக்கும் சுற்றிப் பார்க்கவே நேரம் சரியாக இருந்தது.

அன்று மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் சென்றபோது, அதன் விஸ்தீரணமும், சிற்பங்களின் அழகும் பிரமிப்பை ஏற்படுத்தின.

முகேஷின் விழிகள் அவளையே தொடர்ந்தன... அந்த சிற்பத்து மங்கை கூட, அவள் கடந்துபோனதும், ஒரு நிமிடம் நிறுத்தி... பிறகு பெருமூச்சுடன் சுவாசிக்க ஆரம்பிப்பதாகத் தோன்றியது.

அன்று திங்கட்கிழமை என்பதால் வைரகிரீடத்துடன் காட்சி அளித்த அம்மனும், சாமி கோவில் விமானத்தை யானைகளும், சிங்கங்களும், அறுபத்தி நான்கு கணங் களும் தாங்குவது போல் அமைக்கப்பட்டிருந்த விதமும் மெய் சிலிர்க்க வைத்தன.

உலக அதிசயத்துக்கு இந்தக் கோவில் தேர்வு செய்யப் படவேண்டுமென்ற ஆவலை அதிகப்படுத்தியது.

* * *

மறுநாள், திருப்பரங்குன்றம், அழகர் கோவில், பழமுதிர் சோலை, வைகை டேம் எல்லாம் சுற்றிப் பார்த்து விட்டு, அனைவரும் அணைக்கட்டருகில் அமர்ந்திருந் தனர்.

சந்தியாவுடன் இணைந்து பழகும் மனம், ஏனோ முகேஷுடன் இயல்பாய் ஒன்ற மறுப்பதை, நந்து புரிந்து கொண்டாள்.

வாசன் அவளிடம் பேச ஆரம்பித்தான்.

"நந்து... உனக்குத் தெரியுமா? உன் ஹஸ்பெண்ட் இருக்கானே... சரியான 'ஹோம் பேர்ட்'! ஹாஸ்டல்லே இருந்தப்போ, நாங்க எல்லாரும் ஜாலியா ஊர் சுத்து வோம்... அவன் மட்டும் ரூமிலயே இருந்து ஏதாவது பெயிண்ட் பண்ணிட்டே இருப்பான்.

"இப்ப பிசினஸ்லே போன உடனே அதெல்லாம் குறைஞ்சு போயிடுச்சி... இல்லை முகேஷ்!" என்றபோது ஏதோ யோசனையுடன் மெதுவாகத், தலையசைத்தான் அவன்.

"உங்க மாதிரி இல்லாம, மாமா ரொம்ப நல்லவரா இருந்திருக்காருன்னு உண்மையச் சொல்லுங்களேன்."

சந்தியா கூறியபோது, ஒருவரை ஒருவர் கேலி செய்ய, பேச்சு சுவாரசியமாய் பயணித்தது.

ஒருநாள், நந்தீஷ்வரன் வீட்டிற்கு விருந்திற்கு சென்ற போது, ஏனோ எவரிடமும் மனம் ஒன்ற மறுப்பதாய்..!

சந்தியாவும், வாசனும் மறுநாளே ஊருக்குக் கிளம்பினர்.

ஆனால், சந்தியாவிற்குத்தான் நந்துவைப் பிரியவே ஏனோ மனமில்லை.

நீண்ட நாட்கள் பழகிய தோழியைப் போல் மனதில் அவள் தனி இடம் பிடித்திருக்க, நெஞ்சம் கனத்துப் போயிருந்தது.



## 11

மறுநாள்... முகேஷும் நந்திதாவும் காரில் கிளம்பித் தேனிக்குச் சென்றனர்.

தூரத்தில் தெரிகின்ற மலைகளும், தொடர்ந்து வரு கின்ற திராட்சைத் தோட்டமும் மனதை அள்ளின.

கவிதையின் முகவரி அவள் மனதில் தெரிய ஆரம் பித்தது.

**தூரத்து**
**மஞ்சள் விளக்காய்...**
**சூரியன்!**
**தூரத்து**
**பச்சை விரிப்பாய்...**
**வயல்வெளி!**
**தூரத்துப்**
**படகாய்...**
**வான் மேகம்!**
**தூரத்து**
**மாங்கனிகளாய்...**
**மலைமகள்!**
**தூரத்து**
**வெள்ளிக்கம்பிகளாய்**
**சூரியக்கதிர்கள்!**

தூரத்து
புன்சிரிப்பாய்...
நெற்கதிர்கள்!
இயற்கை...!
எனக்கு...
கற்பனை கற்பித்த
குருகுலம்!

திடீரென்று சடன் பிரேக் போட்டு கார் நிறுத்தப்பட்டவுடன், திடுக்கிட்டு நிமிர்ந்தாள் நந்து... கவிதை உலகம் கலைந்து!

முகேஷ் இறங்கிச் சென்று புதிதாய் பறித்த திராட்சைகளை வாங்கிவர, இருவருமே அதை ருசித்துச் சாப்பிட்டபடி, மெதுவாகத் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தனர்.

திராட்சைகள்... கண்ணனின் கருநாவற்பழக் கண்களை நினைவுபடுத்தின.

திடீரென்று முகேஷ் அவளிடம் திரும்பினான்.

"ஹூம்... இதுவே உண்மையான ஹனிமூனா இருந்திருந்தா, இப்படியா தனித்தனியா சுத்திட்டிருப்போம்... ப்ச்... நான் கிழவனான பிறகுதான், நிஜமான ஹனிமூனுக்கு வரப் போறேன் போலருக்கு... அதோ அந்தத் தாத்தா மாதிரி, வாக்கிங் ஸ்டிக்கோட..." போலிப் பெருமூச்சுடன் கிண்டலாக நிறுத்தினான்.

உடனே சிரிப்பு வந்தாலும், அதை அடக்கியபடித் திரும்பிக் கொண்டாள் அவள்.

இவனால் எப்படி வாழ்க்கையை இவ்வளவு இலகுவாகக் கேலியும் கும்மாளமுமாக ஏற்றுக் கொள்ள முடிகிறதென்ற கேள்வி... வியப்பாய்!



அந்தத் தாத்தாவும் பாட்டியும் அவர்களைக் கடந்து சென்ற போது, முகேஷ் அவர்களை நிறுத்தினான்.

"தாத்தா... ஒரு நிமிஷம்! உங்களுக்கும், பாட்டிக்கும் எத்தனை பேரப்பசங்க...?" என்று விசாரித்தான்.

மனதுக்குள் யோசித்தவர், 'பதினாலு' என்றார்.

அவளைக் குறும்புடன் நோக்கிக் கண் சிமிட்டியவன், "இந்த மாதிரி நாம போகும்போது, உங்க பேரப் பசங்களான்னு எல்லாரும் கேக்கப் போறாங்க... ஆனா அதெல்லாம் நம்ம பசங்கன்னு அவங்களுக்குத் தெரியாது பாவம்!" என்றான் சிரிக்காமல்.

இப்படியே போனால், அவள் மனம் மாறி அவனுடன் இணைய, அவ்வளவு நாட்கள் பிடிக்கும் என்பதைக் கிண்டலாகக் கூறுகிறான் என்று புரிந்ததும் அவள் மனதில் ஊற்றாய் கோபம் சுரந்தது.

"அப்பக்கூட என் மனசு மாறாது... பாவம் நீங்க!" என்றவளின் குரலில் கடும் சீற்றம் தெரிவதாய்!

"எப்போ...? பேரப்பசங்கல்லாம் பிறந்தப்புறம் கூடவா...? கடவுளே."

சோர்வுடன் கூறிவிட்டுத் தோளைக் குலுக்கி கைகளை விரித்து அவன் சிரித்தபோது, வரிசையாய் பற்கள் மின்ன, ஏனோ அது மாயக்கண்ணனின் சிரிப்பாகவே...!

தறிகெட்டு ஓடும் மனதை அடக்கிய நந்து, அதற்குப் பிறகு மௌனமாகவே வர, அவனும் ஏதோ யோசனையுடனே வந்தான்.

* * *

மறுநாள் இருவரும் சுருளி அருவிக்குச் சென்றிருந்தனர்.

அவனுக்கு முன்பாக உடல் நனையக் குளிப்பதற்கு கூச்சமாக இருந்தாலும், ஒரு செட் சுடிதாரைக் கையில் எடுத்து வந்திருந்தாள்.

அங்கு சென்றதும், வெற்று மார்புடன் ஷார்ட்ஸ் மட்டும் அணிந்து முகேஷ் தயாரானபோது, தர்மசங்கடமாய் இருந்தது!

மலையின் உற்சாகக் கண்ணீராய் வழிந்த அருவியின் சாரலில் நனைந்தபோது, இனிய சுகமாகவே இருந்தது.

அருவியில் அதிகம் தண்ணீர் இல்லாததால், மெதுவாக சிதறலாக வழிந்ததும், மனதுக்கு இதமாய்!

நந்து நீண்ட நேரம் நீரில் நிற்க, முகேஷும் கிளம்ப மனமின்றிக் குளித்துக் கொண்டிருந்தான்.

சிரிக்கும் மலராய் அவள் முகம் புன்னகைக்க, ஏனோ அவனுக்குள் அவளை சீண்ட வேண்டும்போல் ஒரு உணர்வு!

இருவரும் உடைமாற்றிவிட்டுத் திரும்பி வரும்போது, வழியில் ஒரு குரங்கு மரக்கிளையில் தொங்கிக் கொண்டிருந்தது.

அதைக் கண்டவன், "நந்து... அங்கே பாரேன்!" என்றான் இயல்பாக!

என்னவென்று நிமிர்ந்தவள், "ஓ- உங்க ஃப்ரெண்டா?" என்றாள் குத்தலாக!

மறு நிமிடமே, தானும் அவனிடம் பதிலுக்கு பதில் கொடுத்த திருப்தி வந்தது.

முகேஷும் உடனே, "அச்சச்சோ... அது என் ஃப்ரெண்ட் இல்லை! என்னோட ஒய்ஃப்..! அவளுக்கு



எப்பவுமே இது மாதிரி எதையாவது பிடிச்சித் தொங்கிட்டே இருக்கணும்! ரொம்பப் பிடிவாதம்..! நந்து! பாத்து இறங்கும்மா... விழுந்துடப் போறே!" குறும்புடன், அந்தக் குரங்கைப் பார்த்துக் கூறினான்.

அவனுடைய நகைச்சுவை உணர்வு புரிந்து, அவளுக்கு வந்த கோபமும் உடனே விடைபெற்றுச் செல்ல தனக்குள்ளேயே புன்னகைத்தாள்.

திடீரென்று அவள் காதருகில் குனிந்தவன், "நீ கவிதை எழுதுவே தானே... கவிக்கு இன்னொரு பேர் குரங்கு தெரியுமா?" என்றான் உல்லாசமாக.

அவனையே கவனித்துக் கொண்டிருந்த நந்துவின் முகம், இளகி மென்மையைத் தத்தெடுத்து, சட்டென்று ரகசியச் சிரிப்பில் மலர்ந்தது.

சீக்கிரமே தான் அவளை மாற்றி விடுவோம் என்ற நம்பிக்கை வித்தாக விழுந்து, உறுதியான எண்ணங்களாக உருப்பெற்றது, முகேஷின் மனதில்...

தனக்குள்ளேயே புன்னகைத்துக் கொண்டான் அவன்.

'நாம்' என்பதன் அர்த்தமும், தன்னில் பாதியாய் அவள் நிறைந்திருப்பதும் புரிந்து அந்த நிமிடம் பெரும் நிறைவு வந்தது.

## 12

அன்று மாலையே, இருவரும் தேக்கடிக்குச் சென்றனர்.

மறுநாள் விடிகாலையில், படகுச் சவாரிக்கு முன்பதிவு செய்திருந்தான் முகேஷ்.

அன்றைய இரவின் தனிமையில், இரு மனங்களுமே தேனிலவுத் தம்பதியின் நெருக்கமின்றி தீவுகளாய்!

இணையாத தண்டவாளங்களாய் இருவரும் வீம்புடன் தனித்திருக்க, முகேஷ் மட்டும், அவளையே நினைத்தபடி உறங்க ஆரம்பித்தான்.

* * *

விடியல், இரு கரம் நீட்டி ஆதவனை வரவேற்றுக் கொண்டிருந்தது.

சில்லென்ற குளிர்க்காற்றின் தொடுகையும், கீச்கீச் சென்ற குருவிகளின் குரல் மொழியும், சல்லாத்துணியைப் போல் மென்மையாகப் படர்ந்த பனியும், மனதினுள் இன்பத்தை விதைத்து இருவரையும் எழுப்பின.

இருவரும் சீக்கிரமே படகுத் துறைக்குச் சென்றபோது, பெரிய மோட்டார் படகில் நிறைய ஜோடிகள் அமர்ந்திருந்தனர்.

நந்திதாவை ஓரத்தில் அமர வைத்துவிட்டு அருகில் அமர்ந்த முகேஷுக்கு, இன்னும் பலர் வரவும் நெருக்கி உட்கார வேண்டியது கட்டாயமாய்...!

அவனுக்கு எப்படி இருந்ததோ, நந்துவிற்கு மிகவும் கஷ்டமாய்! எவ்வளவு நேரம் இப்படி அமர்ந்திருக்க வேண்டுமோ என்று, மனம் தவிப்படைந்தது.

முகேஷ், அவளை ஏரிக்கரையோரம் பார்த்துக் கொண்டே வரும்படிக் கூற, சில இடங்களில் யானைகள் கூட்டமாய் நின்றிருந்தன.



மான்களும், காட்டுப் பன்றிகளும், காட்டெருமைகளும் கண்களைக் கவர்ந்ததே தவிர கருத்தில் பதிய மாட்டேனென்று மனம் சத்தியாக்கிரகம் செய்தது.

சுகமாக வருடிய காற்று, கண்களை செருக வைத்து உறக்கத்தை வரவழைத்தது.

அவன் மேல் சாய்ந்து உறங்கி விடுவோமோ என்ற பயத்திலேயே விழிகளை அகல விரித்துக் காட்சிகளில் பார்வையைப் பதித்தாள்.

படகுப் பயணம் முடிந்ததும், ஒரு வித மோன லயத்தில் நந்துவிற்கு தலை கிறுகிறுத்துப் போனாற் போன்ற ஒரு உணர்வு!

* * *

பொழுது மெதுவாகச் செல்ல, அன்றைய இரவு பௌர்ணமியின் ஆதிக்கத்தில் இருந்தது. நிலவுப் பெண் தன் மஞ்சள் கிரணங்களை உற்சாகமாக பூமியில் படர விட்டுக் கொண்டிருந்தாள்.

இருவரும் தோட்டத்திலிருந்த பிரம்பு நாற்காலியில் அமர்ந்து இரவின் அமைதியை ரசித்துக் கொண்டிருந்தனர்.

காற்றில் குளிரின் சீறல் அதிகமாக, தன்னைக் குறுக்கிக் கொண்டு கைகளைக் கன்னங்களில் பதித்தபடி அமர்ந்திருந்தவளைக் கண்டான் முகேஷ்.

"ஒரு நிமிஷம்... இங்கேயே இரு! இதோ வந்திடறேன்" என்று கூறி விட்டு உள்ளே சென்று, ஒரு சால்வையை எடுத்து வந்து அவளுக்கு இதமாகப் போர்த்தி விட்டான்.

நந்துவிற்குள் பரவ ஆரம்பித்திருந்த குளிர் அடங்கினாலும், உள்ளத்தின் குரல் மட்டும் அடங்க மறுத்தது.

தன்னிடம் அவன் காட்டும் அக்கறை பிடித்திருந்தாலும், ஏனோ மனம் அவனை அணுவளவும் நம்ப மறுப்பதாய்!

முகேஷின் மனதிலும், அவளை முதன் முதலில் கல்லூரி விழாவில் பார்த்த நிமிடம் கண்முன் வந்தது.

எத்தனையோ பெண்களைப் பார்த்திருந்தாலும், நந்துவைக் கண்டதும் இவள் எனக்காகவே பிறந்தவள்... என் துணை இவள்தான் என்று மனம் அவள் நினைவைத் தன்னுள் தக்க வைத்துக் கொண்டதும் நினைவில் படர்ந்து, ஒரு பெருமூச்சாய் வெளிவந்து காற்றை சூடாக்கியது.

மறுநாள், முகேஷையும் நந்துவையும், தேக்கடியிலிருக்கும் அவனுடைய நண்பன் ஒருவன் விருந்துக்கு அழைத்திருந்தான்.

அன்று அவர்களுடைய வீட்டிற்குச் சென்றபோதும், நந்து ஒருவித இறுக்கத்துடனே இருந்தாள்.

தனக்குள்ளேயே ஒரு கூடு கட்டிக் கொண்டு வெளி வர மறுத்தவள், அவர்களுடைய குழந்தையுடன் விளையாடிய நேரம் தவிர, மற்ற நிமிடங்கள் மௌனமாகவே கழிந்தன.

இருவரும் விடைபெற்றுக் கிளம்பும்போது, அந்த நண்பன் முகேஷிடம் வியப்புடன் விடை கொடுத்தான்.

''உன் ஒய்ஃப் ரொம்ப அமைதியா இருக்காங்க... நீ கொடுத்து வச்சவன்டா! அதுவே இங்கே பாரு... பேச ஆரம்பிச்சா நிறுத்தறதில்லை!''

தன் மனைவியிடம் பார்வையைப் பதித்தபடிக் கேலியாகக் கூறினான்.

ஒரு கணம் நந்துவையே கூர்ந்த முகேஷ், ''நீ வேற... புயலுக்கு முன்னே அமைதியாதான் இருக்கும்கிறது உனக்



குத் தெரியாதா? அது மாதிரிதான் இதுவும்!'' என்றான் நீண்டலாக.

பிறகு காரில் திரும்பி வரும்போது, மெல்ல ஆரம்பித்தான்.

''உனக்கு என் மேல ஏதாவது கோபமிருந்தா, அதை என்கிட்ட மட்டும் காட்டணும்... அங்கே இயல்பா இருந்திருக்கலாம்'' ஒரு மாதிரிக் குரலில் கூறினான்.

''எனக்கு எதுவுமே பிடிக்கலை!'' என்றாள் நந்து, ஒரே வார்த்தையாக!

''எனக்குக் கூடத்தான் பிடிக்கலை... நீ இப்படி உம்முன்னு முகத்தை வச்சிட்டு, எந்த உணர்ச்சியுமில்லாம 'எம்ப்ட்டி கேன்வாஸ்' மாதிரி இருக்கறது! என்ன பண்றது.. நான் இயல்பா இல்லை?''

''நீங்களே தேடிக்கிட்டதுதானே... நான் அப்பவே சொன்னேன், எனக்கு கல்யாணம்கிற விஷயமே பிடிக்கலை... வேண்டாம்னு! இப்ப கோபப் பட்டா என்ன செய்யறது? எனக்குப் பிடிக்காததை செஞ்சிட்டு... ப்ச்...!''

''போதும்!''

இடைமறித்த அவன் குரலில், புதிதாய் ஒரு கோபம்!

உடனே வேகமாகத் திரும்பிய அவன் முகத்தில், உணர்வுகள் சுத்தமாகத் துடைக்கப்பட்டிருந்தன.

பிறகு அவன் பேச ஆரம்பிக்கும்போது, அந்தக் குரலில் எஃகின் கடினம்!

''நான் விரும்பினதை அடையாம விடமாட்டேன் அந்திதா! உனக்கு மட்டும்தான் பிடிவாதம் அதிகம்னு நினைக்காதே... எனக்கும்தான்!

"என் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு... நீ மாறுவே... நான் உன்னை நிச்சயமா மாத்திக் காட்டுவேன்."

ஒரு கோபமூச்சுடன் கண்கள் சிவந்து, சீற்றத்துடன் கூறியவன், காரை முன்பை விட வேகமாகச் செலுத்த, செயலற்று உறைந்து போய் அமர்ந்திருந்தாள் நந்து.

அவனுடைய முதல் கோபம் அவளை மிகவும் பாதிப்பதாய்!

முகேஷிற்கு இவ்வளவு கோபம் வருமென்று அவள் எதிர்பார்க்கவே இல்லை.

அவனைக் கணவனாக ஏற்கா விட்டாலும், ஒரு நண்பனாகவாவது ஏற்றுக் கொள்ள மனம் முனைந்தபோது, அவன் வார்த்தைகளே அவளை முரண்பட வைத்து, இனம் புரியா சோகத்தில் ஆழ்த்தின.

பிறகு வந்த ஏகாந்த வேளைகளில், இருவரிடமும் மௌனமே பேச்சு வார்த்தையாய்!

ஏனோ, இருவருமே அதைக் கலைக்க முன் வரவில்லை.

## 13

மறுநாள் முழுவதுமே, பாராமுகத்துடன் பொழுது செல்ல, மாலையானதும் எப்போதும் போல் வாக்கிங் போகத் தயாரானான் முகேஷ்.

நந்துவும் உடன் கிளம்ப, அவளுடைய வேகத்திற்கு ஈடு கொடுத்தாற் போல், மெல்ல நடக்க ஆரம்பித்தான் அவன்.



நந்துவின் மனமோ பெரும் யோசனையில்...!

மிகவும் மென்மையானவனாக அவனைப் பற்றி மனதில் வேர்ப்பிடிக்க ஆரம்பித்திருந்த எண்ணம் மாறி, இவன் மிகவும் அழுத்தமானவனோ என்றும் தோன்ற ஆரம்பித்தது.

தன் பாண்ட் பாக்கெட்டில் கைவிட்டபடி, சந்தன நிற ஜீன்ஸிலும், வயலட் 'டி'சர்ட்டிலும் கம்பீரமாக நடந்து வருகின்றவனையே ஓரக்கண்ணால் கவனித்தபோது, முதன் முதலாக அவன் உருவம் ஏனோ மனதில் பதிவதாய்!

அவளுடைய இதயத்தில், அவனுடைய முதல் ஸ்பரிசம் தெரிவதாய்!

உடனே தலையைக் குலுக்கி, அவன் நினைவுகளையும் களைந்தாள் அவள்.

மறுநாள் காலை, அவளை அழைத்துக் கொண்டு குமுளிக்குச் சென்றான் முகேஷ்.

தன் அப்பா, அம்மாவிற்கும், அவளுடைய அம்மாவிற்கும், சால்வை, ஸ்வெட்டர், ரக் எல்லாம் வாங்கி விட்டு, புடவை செக்ஷனுக்கு அவளை அழைத்துச் சென்றான்.

பல புடவைகளைப் பார்த்தபிறகு ஒரு 'பிங்க்' கலர் புடவையை அவன் எடுத்தபோது, இது யாருக்காக இருக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்தவளின் கனவைக் கலைத்தது, அவன் குரல்!

"இந்தப் புடவை உனக்குப் பிடிச்சிருக்கா? எனக்கு எப்பவுமே பிங்க் கலர் ரொம்பப் பிடிக்கும்."

அவன் குரலில் ஆர்வம்!

தனக்கு மிகவும் பிடித்த ரோஜா நிறத்தில் அவன் தேர்ந்தெடுத்த புடவை மனதைக் கவர, மெதுவாகத் தலையசைத்தாள் அவள்.

"இது யாருக்குத் தெரியுமா?"

அவன் கேட்டபோது, மனம் ஒரு கணம் சுருங்கி விடப் புரியாமல் நிமிர்ந்து பார்த்தாள் நந்து.

"அன்னிக்குப் பார்த்தமே மரத்தில... அதுக்குத்தான்! ஆனா, அது இன்னும் பிடிவாதமா அங்கேயே தொங்கிட்டு இருக்கா? இல்லை... மரத்திலயிருந்து இறங்கி சமத்தா இருக்கான்னு தான் தெரியலை" என்றான் குறுகுறுத்த விழிகளுடன்!

முகம் மட்டும் எந்த பாவமும் இன்றி இருக்க, அவன் கண்கள் கேலியாகச் சிரித்தன.

"ம்... ம்...! அது தன்னோட கூட வந்தவங்களை நாலு சாத்து சாத்தலாமான்னு யோசிச்சிட்டு இருக்கு!" சிரிக்காமல் கூறினாள் அவள்.

கண்ணோரம் சுருங்க, குறும்புடன் "தேங்க்ஸ்!" என்றான் அவன்.

"எதுக்கு...?" என்றாள் நந்து. ஒன்றும் புரியாமல்!

"குரங்குன்னு, உண்மையை ஒத்துக்கிட்டதுக்கு!"

அவன் கூறவும், உடனே அடக்க முடியாமல் சிரிக்க ஆரம்பித்தாள்.

தடைகள் விடைபெற்றுச் செல்ல, உற்சாகத்துடன் அவள் சிரிப்பதையே, அவன் விழிகள் அளவெடுத்தன.

சொந்தமாய் ஒரு வானம் செய்ய வேண்டும் போல, ஏக்கத்துடன் மனம் விழைந்தது.



அவள் புன்னகை, அவன் இதயத்தை சாரலாய், சுகமாய் நனைக்க, பார்வை மட்டும் அவள் உதட்டின் மேலிருந்த சிறு மச்சத்தில் படிந்தது.

நிலவின் களங்க நிழல் போல், அந்த மச்சம் தனியாய்... ஆனால் பேரழகாய்...!

அவனிடமிருந்து எந்த சத்தமும் இல்லாததால், சிரிப்பினூடே நிமிர்ந்து பார்த்தவள், ஏனோ அந்தப் பார்வையின் பொருளை அறிய முடியாமல் சட்டென்று தலை குனிந்து கொண்டாள்.

அந்த விழிகளின் கூர்மை, அவளை ஏதோ செய்வதாய்! அந்த நிமிடத்திலிருந்து, அவர்களுக்குள் இனிய நட்பு, மென் துளிர் விட்டு மலர்ந்தது.

* * *

மறுநாளே இருவரும் மதுரைக்குக் கிளம்பிச் சென்றனர்.

காரில் செல்லும்போது, இனிமையான பாடல்களைக் கேட்டபடிச் செல்ல முகேஷுக்கு மிகவும் பிடிக்கும்.

அவளும் அதை ரசிப்பது போல் தோன்றியது.

"நந்து... உனக்கு என்ன மாதிரிப் பாட்டு பிடிக்கும்?"

அவன் கேட்டபோது, ஆர்வத்துடன் திரும்பினாள்.

"எப்பவுமே மென்மையான மெலடீஸ் எனக்கு ரொம்பப் பிடிக்கும்!" என்றாள் உற்சாகத்துடன்!

தன்னைப் பற்றி அவன் விசாரித்ததும்... இனிமையாக ஒருவித சிலிர்ப்பாய் உணர்ந்தாள்.

இருவரின் ரசனையும் பாட்டு விஷயத்தில் ஒத்துப் போவதை எண்ணி, அவன் மனமும் லேசானது.

"இவன் ரசனை உள்ளவன்தான்... மனதால் இறுகிய பாறை இல்லை... இவளைத் தன் வசப்படுத்துவது எளிதாகத் தான் இருக்கும்" நெஞ்சம் கணித்தது!

முகேஷ், அவளுக்காக மதுரையில் நிறைய சி.டிக்கள் வாங்கினான்.

அவளின் வீட்டுக்குச் சென்றவுடன், மதியம் சாப்பிட்டு விட்டு, காரை ஓட்டி வந்த அலுப்பில் வெகுநேரம் உறங்கி விட்டான்.

## 14

அன்று மாலையில் மாமா, மாமி, கௌரி மூவருமே வந்திருந்தார்கள்.

எல்லோரிடமும் பேசிக் கொண்டிருந்த நந்து, கௌரியை மட்டும் மொட்டை மாடிக்கு அழைத்துச் சென்று மனம் விட்டு எல்லாவற்றையும் கூறினாள்.

"நந்து... நீ ரொம்பத் தப்பு பண்றேன்னு நினைக்கிறேன்! உன் ஹஸ்பெண்ட் பாவம்டி... எந்தத் தப்பும் செய்யாமலே அவருக்கு ஏன் தண்டனை கொடுக்கறே?

"உங்க அக்காவுக்கு நடந்த அநியாயத்துக்கு, ஒரு நல்லவரைப் பழி வாங்காதே நந்து! உனக்கே இது பாவமாத் தெரியலை... இதுலே உன் வாழ்க்கையையும் சேர்த்துப் பாழாக்கிக்கறே நீ! நான் சொல்றது சரின்னு, நல்லா யோசிச்சிப் பாத்தா புரியும்" தவிப்புடன் அறிவுறுத்தினாள்.



"போடி... கிழவியாட்டம் பேசாதே! என்னால நிச்சயமா என்னை மாத்திக்க முடியாது!

"ஆண்கள் எல்லாருமே மோசம்தான்... நான் நம்ப மாட்டேன்... இன்னொரு தடவை சூடு பட்டுத் தீயிலக் குளிக்க என்னால முடியாது."

வீம்பாக வந்தது நந்துவின் குரல்!

"அப்புறம் உன் இஷ்டம் நந்து! ஆனா இப்ப நான் சொன்னதுதான் சரின்னு உனக்கு ஒரு நாள் புரிய வரும்!" என்றவள் பேச்சை மாற்றினாள்.

பிறகு, தங்கள் கல்லூரி நாட்களைப் பற்றிய பேச்சில், இருவருக்கும் நேரம் போனதே தெரியவில்லை.

வானம் இருட்டத் தொடங்கவும், திடீரென்று அவளுக்கு முகேஷின் நினைவு வர, உடனே கீழே இறங்கிச் சென்றாள்.

மாமாவும் மாமியும் கிளம்பிப் போய் விட்டிருக்க, ஹாலில் அமர்ந்து காபியைப் பருகிக் கொண்டிருந்தான் முகேஷ்.

அவளைக் கண்டதும் மலர்ந்து, "நந்து! நீ டிபன் சாப்பிடலை...?" என்றான்.

பின்னால் வந்த கௌரியைப் பார்த்தவன், "ஹலோ!" என்று புன்னகைத்தான்.

அவளும் இயல்பாக அவனிடம் நலம் விசாரிக்க, அவனும் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தான்.

நந்து, உள்ளே சென்று முகம் கழுவித் தயாராகி சமையல் அறைக்குச் சென்றாள்.

"என்ன... ஃப்ரெண்ட்ஸ் ரெண்டு பேரும் பேசி முடிச்சாச்சா? மாப்பிள்ளை எழுந்தவுடனே, உன்னைத் தான் தேடினார்...

"நீ மாடியில கௌரியோடப் பேசிட்டு இருக்கேன்னு சொன்னேன். மாமாதான் இவ்வளவு நேரம் அவர்கிட்டப் பேசிட்டிருந்தாரு... இப்பதான் ரெண்டு பேரும் போனாங்க..." என்றபடி டிபனைக் கொடுத்தார் காயத்ரி.

கௌரிக்கும் எடுத்துக் கொண்டு ஹாலுக்கு வந்த போது, இருவரும் இயல்பாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

இது போல், தன்னிடம் அவன் இவ்வளவு நேரம் பேசியதில்லையே என்று நந்துவின் மனதில் திடீரென்று ஒரு நெருடல் வந்தது!

ஆனால், தான் அவனிடம் இயல்பின்றி இருக்கும் விதம் மட்டும் நினைவில் வர மறுத்தது.

ஏதோ ஒரு ஞாபகத்தில் அவளருகில் வந்து அமர்ந்து கொண்ட நந்துவை, ஒரு கணம் வியப்புடன் நோக்கிய முகேஷ், தன் பேச்சைத் தொடர்ந்தான்.

அவன் தன்னைக் கண்டு கொள்ளாதது வேறு, மனதில் கோபத்தை வரவழைக்க, கௌரியிடம் திரும்பினாள்.

"நீ ஏதோ கிளாஸுக்குப் போகணும்னு சொன்னியே... கிளம்பலையா?" என்றாள் மெதுவாக.

கௌரியும் மணியைப் பார்த்து விட்டு எழுந்தாள்.

"நான் வர்றேங்க... கிளம்பறேன் நந்து" விடைபெற்று வெளியே வந்தாள்.

தன் பின்னாலேயே வந்த நந்துவிடம், "உனக்கு நல்ல கணவர் கிடைச்சிருக்காருடி... வீணான பயத்தினாலயும், தேவையில்லாத பிடிவாதத்தாலேயும் நல்ல வாழ்க்கையக் கெடுத்துக்காதே நந்து... நான் அவ்வளவு தான் சொல்வேன்" என்று கூறிவிட்டுப் போனாள்.



அவள் கூறியதையே மனதில் அசை போட்டுக் கொண்டு நின்றிருந்த நந்து, அனிதாவைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள்.

மனம் இறுகிப் போக... திடீரென்று அனிதாவின் வாழ்க்கை மீது, யாரோ கல்லெறிந்து கலைத்த உணர்வு!

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட நிலை மாறி, இப்போதெல்லாம் ரொக்கத்தில் நிச்சயிக்கப் படுவதால்தான் பெண்களுக்கு இந்த முடிவு வருகிறதோ...? அது ஏன் மருமகளுக்கு மட்டுமே ஸ்டவ் வெடிக்கிறது...? பல கேள்விகள் வரிசையாய் மனதில் சரம் கோர்த்தன.

பெண்ணை... ஒரு மகா சக்தியாய் பெண்ணுக்கே அறிமுகப்படுத்திய பாரதி, ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் யுத்த சக்தியாய் வர வேண்டுமென்று தோன்றியது.

அப்போது, அவளைக் காணாமல், தேடி பின்புறம் வந்து நின்ற முகேஷை, அவள் கவனிக்கவில்லை.

நீங்காமல் மனதின் ஓரம் அவள் நினைவுகள் அவனை ஆட்படுத்த, ஒரு பெண்ணுக்காகத் தான் இவ்வளவு அலை பாய்வது அவனுக்கே ஆச்சர்யமாய்....!

எத்தனை பெண்களைப் பார்த்திருக்கிறான்... இவள் மட்டும் என்ன தனி என்று இதயம் கேள்வி கேட்டது.

'தனிதான்!' என்றது, புதிதாய் நேசம் வந்த மனது!

தன் நெஞ்சில் தோன்றிய காதல், அவளிடம் சிறிதளவாவது எதிரொலிக்குமா என்று, ஏக்கமாய் இருந்தது.

உடனே, "அன்பாய் நேசித்தவளுடன் இணைந்த மகிழ்ச்சியில், ஒரு மனிதன் பலசாலியாகிறான்" என்ற பொன்மொழி ஏனோ அந்த நிமிடம் நினைவுக்கு வந்தது.

அவனுடைய தனிமைத் தவத்தை. சொல்லெறிந்து கலைக்க மனமின்றி மெதுவாகத் திரும்பி யோசனையுடன் உள்ளே சென்றான் அவன்.

## 15

மறுநாள் இருவரும் கும்பகோணத்துக்குக் கிளம்பினர்.

காயத்ரியும், மாமியும் அழுகையுடன் வழியனுப்ப, கௌரி அவள் கையைப் பிடித்து மெல்ல அழுத்தி விடை கொடுத்தாள்.

கஷ்டப்பட்டு கண்ணீரை அடக்கிக் கொண்டாள் நந்து.

"அம்மா... நீங்களும் கும்பகோணத்துக்கு ட்ரான்ஸ்ஃபர் கேட்டு வாங்கிட்டு வந்திடுங்கம்மா! இங்கே தனியா இருக்க வேணாம்... எனக்கும் நீங்க பக்கத்துல இருந்தா லோன்லியா இருக்காது" என்றாள் கம்மிய குரலில்.

"மாப்பிள்ளை இருக்கறப்ப உனக்கு என்னம்மா தனிமை... காயத்ரியை நாங்க பாத்துப்போம்... நீ கவலைப் படாதே!"

மாமாவின் வார்த்தைகளால் பெரும் தைரியம் வந்தது.

"நீங்க எல்லாரும் தான் அம்மாவைப் பாத்துக்கணும்!"

அவள் கூறும்போதே, காயத்ரி அவளின் கையைப் பிடித்துக் கொண்டாள். "நானும் பேங்க்ல கேட்டிருக்கேன் நந்து... பாக்கலாம்" என்று தைரியம் கூறி அவளை அனுப்பி வைத்தாள்.



திரும்பிப் பார்த்துக் கையசைத்துக் கொண்டே வந்தவளுக்கு, வழியெல்லாம் அம்மாவின் நினைவுகள் அதிகமாய்...!

இருக்கையின் பின்புறம் சாய்ந்து கண் மூடியபோது, விழிகளில் நீரின் சாரல்!

"நந்து... சீட் பெல்ட்டைப் போட்டுட்டு, சீட்டைப் பின்னாடித் தள்ளி சாய்ஞ்சு படுத்துக்கோ!"

அவனுடைய கரிசனத்தில், கண்கள் இன்னும் அதிகமாய்க் கரித்துக் கொண்டு வந்தது.

ஊருக்குச் செல்லும் வழியில் சாப்பிட நிறுத்திய போது, மனம் சிறிது தெளிந்து விட, அவனுடன் இயல்பாகப் பேச ஆரம்பித்தாள் நந்து.

வீட்டிற்குச் சென்றபோது இருவருமே சோர்ந்திருந்தனர்.

மகேஷ்வரனிடமும், மீனாட்சியிடமும் பேசிவிட்டு ஊரிலிருந்து வாங்கி வந்த பொருட்களைக் கொடுத்தவள், ஓய்வெடுக்க எண்ணி மாடிக்குச் சென்றாள்.

மிகவும் களைப்பாக உணர்ந்ததால், படுத்ததுமே அவள் உறங்கிவிட, சிறிது நேரத்திற்குப் பிறகு அறைக்குள் வந்த முகேஷின் பார்வை... அவளிடமே!

வானத்து நிலவு கூட, மனிதன் தொட்டு விடும் தூரத்திலிருப்பது போல்... அவள் அருகிலிருந்தாலும் தொலை தூரத் தொடுவானமாய் விலகி நிற்பது போல் ஒரு உணர்வு!

பிறகு, நந்து விழித்தெழுந்த போது அவன் அந்த அறையில் இல்லை.

கீழே வந்தால், ஹாலில் தன் அப்பாவுடன் பேசிக் கொண்டிருந்தான்.

அவளைக் கண்டதும், "நந்து... எனக்கு ஒரு கப் காபி கிடைக்குமா? அப்பா... உங்களுக்கு?" திரும்பி அவரிடமும் கேட்டான்.

"எனக்கும் அரை கப் வேணும்மா... சர்க்கரை இல்லாம!" என்றவரிடம் தலையசைத்து விட்டு அவள் உள்ளே சென்றாள்.

தானே காபியைக் கலந்து எடுத்து வந்து கொடுத்த போது மீனாட்சியும் பூஜையை முடித்துவிட்டு வந்து, அவர்களுடன் அமர்ந்து கொண்டார்.

கல்யாண ஆல்பமும், சி.டி.யும் வந்திருக்க, நான்கு பேரும் ஆர்வத்துடன் திருமண நிகழ்ச்சிகளைப் பார்க்க ஆரம்பித்தனர்.

முகேஷ் மட்டும், தன்னருகில் அமர்ந்திருந்தவளை வேண்டுமென்றே கலாட்டா செய்து, வார்த்தைகளால் சீண்டிக் கொண்டிருந்தான்.

தண்ணீரில் அலைபாயும் ஓடம் போல் நிலையின்றி ஆடிய மனதை அடக்கியபடி இறுகிப் போய் அமர்ந்திருந்தாள் அவள்.

* * *

மறுநாள், காலையில் நந்து கீழே இறங்கி வந்ததுமே, மீனாட்சி அவளை முகேஷைக் கவனிக்கச் சொல்லி மீண்டும் மாடிக்கு அனுப்பினார்.

அவன் இன்று தொழிற்சாலைக்குப் போக வேண்டும் என்று நேற்றே கூறியது, அவளுடைய நினைவுப் பக்கங்களில் வரிகளாய்!



அப்போதுதான் கீழே சென்றவள், உடனே திரும்பி வரவும், என்ன என்பது போல் ஒற்றைப் புருவம் உயர, ஏறிட்டான் அவன்.

தயக்கத்துடன், "அத்தைதான் உங்களைக் கவனிச்சிக்கணும்னு சொல்லி அனுப்பினாங்க" என்றாள் அவள்.

சட்டென்று அவனுக்குள் எதுவோ மலர்வது போல்...!

உடனே, "ம்.. ம்... எப்படி? என்னைக் குளிக்க வச்சு, தயார் பண்ணி, சாப்பிட வச்சு... இதெல்லாமா? சாரி... அதெல்லாம் நானே பண்ணிப்பேன்... நான் ஒன்னும் குழந்தை இல்லை! நீ முதல்லே உன்னை கவனிச்சிக்க... ஓகே!"

புரியாத குரலில் கூறிவிட்டுக் குளிக்கச் சென்றான்.

என்ன செய்வதென்று புரியாமல் தன்னுடைய துணிகளை அடுக்கி வைத்துவிட்டு, சிட்-அவுட்டில் சென்று அமர்ந்தாள் அவள்.

இப்படியே இருந்தால், தான் சோம்பேறியாகி விடுவோம் என்று தோன்றியது.

நினைவுக் கூட்டிற்குள்... நிகழ்வுப் பறவையின் மௌனச் சடசடப்பு!

ஏதாவது ஒரு வேலையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் கீழே சென்று சமையலுக்கு உதவி செய்ய ஆரம்பித்தாள்.

அவன் குளித்துவிட்டு வருமுன், டிபனை எடுத்துத் தயாராக மேசையில் வைத்தவளுக்குள், அனிதாவின் நினைவில் சில்லென்று ஒரு குளிர் பரவியது.

முகேஷும், மகேஷ்வரனும் சாப்பிட்டு விட்டு கிளம்பி விட அன்றைய பொழுது அமைதியாகச் சென்றது.

அன்று மதியம், அவளை ஃபோனில் அழைத்தான் முகேஷ்.

அவனுடைய நண்பன் வினோத் அமெரிக்காவிலிருந்து வந்திருப்பதாகவும், அன்றிரவு டின்னருக்கு வீட்டுக்கு வருவானென்றும் கூறினான்.

இரவு டின்னருக்கென, அவளும் மீனாட்சியும், சமையல் காரம்மாவுடன் சேர்ந்து சமைத்தனர்.

புட்டு, இடியாப்பம், பணியாரம், வடை, மசால் தோசை என்று வெளிநாட்டில் கிடைக்காத உணவு வகைகளைச் செய்தனர்.

வினோத் எல்லாவற்றையும் ரசித்துச் சாப்பிட்டு விட்டு, மீனாட்சியிடம் நன்றி கூறினான்.

"ரொம்பத் தேங்க்ஸ் ஆன்ட்டி! அங்கே கிடைக்காதது, அதுவும் எனக்குப் பிடிச்ச ஐட்டம்ஸா செஞ்சிருக்கீங்க... ரொம்ப நல்லா இருந்தது!" என்று பாராட்டினான்.

"இது எல்லாமே நந்துவோட ஐடியாதான்... அவதான் இது மாதிரி செஞ்சா நல்லா இருக்கும்னு சொன்னா!" மீனாட்சி கூறியபோது, முகேஷ் அவளைக் கண்களாலேயே பாராட்டினான்.

"ஓ! முகேஷ்... லக்கி பர்ஸன்டா நீ! என்னைப் போல அவசரப்படாம, பாத்து நல்லா செலக்ட் பண்ணி இருக்கே... தேங்க்ஸ் நந்து" என்றான் அவன் இயல்பாக.

அவள் "வெல்கம் என்று முறுவலித்தாள்.



"நந்து... நான் உங்களை அப்படிக் கூப்பிடலாமில்லை? எனக்கும் சிஸ்டர்ஸ் இல்லை! அநந்திதா உங்க பெயரே வித்தியாசமா இருக்கு.

"எங்க செட்டிலயே இவன்தான் ரொம்ப ஜாலியா பேசுவான்... ஆனா பேச்சோட சரி! நாங்க எல்லாரும் எல்லா விஷயமும் பழகிப் பாத்துருவோம்... களவும் கற்று மறம்பாங்களே... அது மாதிரி! வாசனும் எங்களோட சேந்துப்பான்...!

"சினிமா பீச்சுன்னு ஒரு இடம் விடறதில்லை. அதெல்லாம் ஒரு காலம்... இல்லையாடா?

"நாங்க எல்லாரும் டிரிங்க்ஸ் எடுத்தாக்கூட இவன் கூல்டிரிங்க்ஸ் தான் குடிப்பான்...

"ஜாலியா லேடீஸ் காலேஜ் பக்கம் போகலாம்... வாடான்னா வரமாட்டான்... பெயிண்டிங் பண்றேன்னு உக்காந்துப்பான்!

"இவனை சாமியார்னு தான் கிண்டல் பண்ணுவோம்... அப்போ! ஆனா இவன் உங்களை விரும்பிக் கல்யாணம் பண்ணிக்கிட்டான்னு வாசன் சொன்னப்ப, என்னால நம்பவே முடியலை...!" கூறிவிட்டுச் சிரித்தான்.

நந்து அவனிடம், "உங்க ஒய்ஃப் வரலையா?" இயல்பாகக் கேட்டாள்.

"இல்லை... எனக்கு டிவோர்ஸ் ஆயிடுச்சி" அவன் கூறியதோடு ஒரு கணம் இறுகிப் போனது அவள் மனது!

ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாழாக்கி விட்டு, எவ்வளவு சுலபமாகப் பதட்டமின்றிப் பேசுகிறான் என்ற எண்ணம், நெஞ்சுக்குள் நீறு பூத்த நெருப்பாய்!

அந்த நிமிடத்திலிருந்து, ஏனோ அவனிடம் இயல்பாகவே அவளால் பேச முடியவில்லை.

அவன் சென்ற பிறகு முகேஷிடம், "ஒரு பெண்ணோட வாழ்க்கையைப் பாழாக்கிட்டு, இந்த ஆண்களால எப்படித்தான் சிரிக்க முடியுதுன்னே தெரியலை...!" என்று பொருமினாள்.

"நீ நினைக்கறது தப்பு நந்து! ஒரு பொண்ணாலதான் பாவம்... அவன் வாழ்க்கையே வீணாப் போயிடுச்சி! அதுவும் அவளை விரும்பிக் கல்யாணம் செஞ்சிக்கிட்டான்.

"வினோத்துக்குக் குடிக்கிற பழக்கம் இருக்கலாம்... ஆனாலும் ரொம்ப நல்லவன்!

"அமெரிக்கா போனதும், அவனோட மனைவிக்கு வேற ஒருத்தன் மேலக் காதல் வந்துடிச்சி... இவனை விட்டுப் பிரிஞ்சி போய் அவனோடக் குடுத்தனம் நடத்த ஆரம்பிச்சுட்டா...

"அவன் பெரிய பணக்காரனாம்! போன வருஷம் டிவோர்ஸ் கேட்டா... இவனும் குடுத்துட்டான் பாவம்!"

ஒரு பெருமூச்சுடன் அவன் நிறுத்தியபோது, மனதில் ஏதோ ஒரு வெற்றிடம் வந்தது, அவளுக்கு!

ஒட்டு மொத்தமாக ஆண்களே மோசமானவர்கள் என்று கூறுவது தவறோ என்றும், ஒரு கணம் தோன்ற ஆரம்பிப்பதாய்...!

ஆனாலும், ஆண்களின் மீது நம்பிக்கை வைப்பது... முடியாத ஒன்றாய்... குழப்பச் சிதறல்கள் உள்ளமெங்கும் பரவின.



# 16

நாட்கள் காற்றெனக் கடுகிச் சென்றன.

நந்துவின் மனதில் புதிதாய் எந்த மாற்றமுமின்றி தெளிந்த சிற்றோடையின் மௌன ஓட்டம் போல், அவர்களிடையே சிறு நட்புணர்வு மட்டும் கை கோர்த்திருந்தது.

ஏனோ, அவனிடம் அதற்கு மேல் ஒன்ற, மனதின் ரணங்கள் இடம் தர மறுத்தன.

வானின்றி வெண்ணிலா இங்கில்லை என்பதை உணர மறுத்தது அந்த நிலவு!

அன்று சாரங்கபாணி கோவிலுக்குச் செல்லலாம் என்று மீனாட்சி காலையிலேயே கூறி இருந்தார்.

மாலையில் கோவிலுக்குச் சென்று நீண்ட நாட்கள் கழித்துப் பெருமாளை தரிசித்தபோது, மனம் நிறைந்து போனது.

அவர்களுடைய குடும்பத்தினர், கோவிலில் அனைவரும் அறிந்த பிரபலமானவர்களாக இருந்தது... அன்றுதான் தெரிய வந்தது அவளுக்கு!

ஒவ்வொரு சன்னிதியிலும் மாலை மரியாதைகள் செய்ய, பெருமாளைக் கும்பிட்டு விட்டு வெளியே வந்த போது, மஹேஷ்வரனுடைய நண்பரின் குடும்பமும் கோவிலுக்கு வந்திருந்தனர்.

அவர்களுடன் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம் பும் போதுதான், இரவு ஹோட்டலிலேயே சாப்பிட்டு விட்டுச் செல்லலாம் என்றான் முகேஷ்.

நேரம் இருக்கவே, அப்படியே கும்பேசுவரர் கோவிலுக் கும் சென்று தரிசித்து விட்டு, ஹோட்டலுக்குச் சென் றனர்.

சாப்பிட்டு விட்டு வெளியில் வந்து காரில் ஏறப் போகும் போதுதான் அவள் அங்கு அனிதாவின் கணவன் கோபாலைச் சந்தித்தாள்.

அவனையும், அவனருகில் செல்லும் ஒரு பெண்ணை யும் பார்த்தபோது, மீண்டும் அவள் மனது ரௌத்ரமாகி, எரிதழலாய் எரிய ஆரம்பித்தது.

அவள் மனதின் சீற்றம் அப்படியே முகத்தில் எதி ரொலித்தது.

அவளைத் திரும்பிப் பார்த்த முகேஷ், நந்துவின் திடீர் மாற்றத்துக்குக் காரணம் புரியாமல் தவித்துப் போனான்.

வீட்டுக்கு வந்து சேரும் வரை கூட அவள் கோபம் தணியாமலிருக்க, ஒன்றுமே பேசாமல் மாடிக்குச் சென்ற வள், உடனே படுத்து விட்டாள்.

உறங்கவில்லை என்றாலும், இறுக மூடிய விழி களுக்குள் நினைவு மேகம் மையம் கொள்ள, கண்ணீர் துளிகள் சரம் கோர்த்தன.

அனிதாவின் மரணம், மனதில் கோரத் தாண்டவமாட ஆரம்பித்தது.

மஹேஸ்வரனிடம் பேசி விட்டுப் படுப்பதற்காக வந்த முகேஷும், அவள் நிலை கண்டு அவளிடம் எதுவும் கேட்கவில்லை.



வெளியே வானம் தன் சோகத்தை கண்ணீராகப் பொழிந்து கொண்டிருந்தது.

* * *

அந்த வாரம் முழுவதும், நந்து அவனிடம் முகம் கொடுத்துக் கூடப் பேசவில்லை.

கோபாலின் மேல்... ஆண் வர்க்கத்தின் மேலிருந்த கோபத்திற்கு வடிகாலாய் அவன் அமைந்துவிட... வாழ்க்கையின் மீது பெரும் வெறுப்புடனும், சீற்றத்துடனும், பூவுக்குள் பூகம்பமாய் அமைதி காத்தாள் அவள்.

மொழி புரியா அமைதியோடு அவள் ஒதுங்கிப் போக, .... அவனும், ஏதோ புரிந்த மாதிரி மௌனமாகவே இருந்தான்.

அந்த வெள்ளிக்கிழமையன்று, அலுவலகத்திலிருந்து வந்தவுடனே அவளைத் தேடி வந்தான்.

"ஒரு நிமிஷம் கீழே வர்றியா நந்து?" என்று அழைக்க, மௌனமாகவே பின் தொடர்ந்தாள் அவள்.

பூஜையறையிலிருந்து ஒரு தாம்பாளத்தில் வெற்றிலை பாக்கு பழத்துடன் ஒரு திருமாங்கல்யமும் பட்டுப் புடவையும் வைத்து எடுத்து வந்தார் மீனாட்சி.

அதை அவளிடம் கொடுத்தவர், "இதக் கொண்டு போய் நீயும் முகேஷுமாக் குடுங்க" என்றபோது, அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

அவனைப் பின் தொடர்ந்து ஹாலுக்குச் சென்றபோது, அங்கு காத்திருந்த ஒரு தம்பதியிடம் அந்தத் தட்டைக் கொடுக்கச் சொன்னார் மஹேஸ்வரன்.

கொடுத்து விட்டு அவர்கள் வாழ்த்தையும் ஏற்றுக் கொண்டு திரும்பியவள், ஒன்றும் புரியாமல் மாமியாரை நோக்கினாள்.

அவருக்கு, மருமகளின் கேள்வி புரிந்தது.

இந்த வீட்டு வழக்கத்தைப் பற்றி அவள் அறிய வேண்டுமென்று தோன்ற, "இது நம்ம வீட்டு வழக்கம்மா! நம்ம தொழிற்சாலையில வேலை செய்யறவங்க வீட்டுக் கல்யாணத்துக்கு இது மாதிரி செய்யறது நம்ம வழக்கம். அதுவும் பையனோட கல்யாணமா இருந்தாதான்! என்னா பொண்ணுக்குன்னா அவங்க மாப்பிள்ளை வீட்டு வழக்கப்படிதானே தாலி செய்வாங்க. அப்போ, பணமும் புடவையும் கொடுப்போம்" என்றார்.

அந்தக் குடும்பத்தின் மீது, முதன் முதலாய் ஒரு நல் வித்து மனதில் விழுந்தது.

அன்றிரவு ஏதோ சிந்தித்தபடியே சிட் அவுட்டில் அமர்ந்திருந்தாள் நந்து.

சில் வண்டுகள் ஓயாமல் தாலாட்டுப் பாடி சப்தமிட்டுக் கொண்டிருந்தன... நிலவைத் தூங்க வைக்க!

ஆனால் மாதத்தில் ஒரு நாள் மட்டுமே அது கைவசப் படுமென்று, அவைகளுக்குப் புரியவில்லை.

## 17

முகேஷ், அந்த ஞாயிறன்று மகேஸ்வரனின் நண்பர் வீட்டுக்கு விருந்துக்குச் செல்ல வேண்டுமென்று நினைவு படுத்த அவளைத் தேடி வந்தான்.



அவளெதிரில் அமர்ந்தவனுக்கு... அந்த நிமிடம் நந்துவைப் பார்த்தபோது, தீண்டப்படாத ஒரு பனிச் சிற்பம் போல் தோன்றியது.

"நந்து... இந்த ஒரு வாரமா ஏதோ ஒரு விஷயம், உன்னை ரொம்பப் பாதிச்சிருக்கு...

"அன்னிக்கு ஹோட்டல்லேருந்து வரப்பவே கவனிச்சேன்! உடனே கேட்டு, உன்னை அப்செட் பண்ண வேண்டாமேன்னு விட்டுட்டேன்...

"இந்த அளவு நீ ஒடுங்கிப் போக ஏதாவது காரணம் இருக்கணும்...

"என்னாச்சு...? என்ன ப்ராப்ளம் உனக்கு...? அப்பா அம்மா, ரெண்டு பேருமே நிச்சயமா எதுவும் சொல்லி இருக்க மாட்டாங்க! நானும் ஒண்ணும் சொல்லலை!

"பின்னே உன் பிரச்னைதான் என்ன நந்து? என்கிட்டே ஷேர் பண்ணிக்கக் கூடாதா?"

அவன் குரலில் நிஜமான அக்கறை தெரிந்தது.

நந்திதா, சிறிது நேரம் அமைதியாக இருந்தாள்.

"அன்னிக்கு ஹோட்டலுக்கு வெளியே காரில ஏறினப்போ, அனிதக்காவோட கணவரைப் பார்த்தேன்... யாரோ ஒரு பொண்ணோட ஜாலியாப் போயிட்டு இருந்தாரு...

"எங்களை அழ வச்சு... எங்க குடும்பத்தையே சிதறடிச்சிட்டு, அவர் மட்டும் எந்தக் குற்றவுணர்ச்சியும் இல்லாம சந்தோஷமா நடந்து போனதைப் பாத்தப்ப, என் மனசே தகிக்க ஆரம்பிச்சிடுச்சி!

''அவராலதானே அக்காவும் அப்பாவும் இறந்து, அம்மாவும் நானும் தனியா நின்னு, இப்பக்கூட எதையுமே மறக்க முடியாம என் வாழ்க்கையையும் பாழாக்கிட்டு இருக்கேன்'' கூறிவிட்டு விம்ம ஆரம்பித்தாள்.

முகேஷ், ஆறுதலாக அவள் கையைப் பிடித்து மெதுவாக அழுத்தினான்.

அவனுடைய கை அழுத்தப்பட்ட விதத்திலிருந்து, அவனுக்குப் புரிகிறது என்ற அந்த மௌனப் பரிபாஷையில் ஒரு அன்புப் பாலத்தை உணர்ந்தவள், அந்தக் கையை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

அவனுடைய கை... பிடிமானமாய், ஊன்று கோலாய் பெரும் பலம் தந்தது.

மெல்ல மெல்ல அவளுடைய அலைப்புறுதல் குறைந்து, மனதில் ஒருவித அமைதி வந்தபோது, ஒரு கையின் தொடுகைக்கு இத்தனை சக்தி உண்டா என்று, மனதில் ஒரு பிரமிப்பு வருவதாய்!

• • •

ஞாயிறன்று மதியம் அவர்களிருவரும் மகேஷ்வரனின் நண்பர் சுகுமாரின் வீட்டுக்கு விருந்துக்குச் சென்றார்கள்.

அவருடைய மகள் ரேகா, அவளைத் தன் அறைக்கு அழைத்துச் சென்று பேசிக் கொண்டிருந்தாள்.

அவளுடைய பார்வைகள் பிரமிப்புடன் தங்கள் இருவரிடமும் பதிந்ததை நந்து உணர்ந்திருந்தாள்.

பிறகு பேச ஆரம்பித்தவளின் கருப்பொருளாய்... இமயமாய் முகேஷே நிறைந்திருந்தான்.



''நீங்க ரொம்ப லக்கி! இந்த மாதிரி ஒரு நல்ல ஹஸ்பெண்ட் கிடைக்கக் குடுத்து வச்சிருக்கணும் நந்துக்கா!

''நான் ப்ளஸ் ஒன் படிச்சிட்டிருந்தப்போ, நாலு வருஷத்துக்கு முன்னாடி எனக்கு முகேஷ் அண்ணா மேல ஒரு ஆர்வம் வந்தது... ப்ரெண்ட்ஸ் எல்லாம் ஏத்தி விட, நேராவே அவர்கிட்ட சொன்னேன்'' என்றபோது நிமிர்ந்து சுவாரசியமாகக் கேட்க ஆரம்பித்தாள் நந்து.

''ஆனா முகேஷ் அண்ணா என்னைக் கண்டிச்சார். படிக்கற காலத்துல மனசை வேற எதுலயும் சிதற விடக் கூடாது... முதல்ல படிப்பை முடி! நானே ஒரு நல்ல மாப்பிள்ளையாப் பாக்கறேன்... என்னால உன்னை ஒரு குட்டித் தங்கையாதான் நினைக்க முடியுது! சின்ன வயசுல இருந்தே அப்படித்தான் நினைச்சிட்டிருக்கேன்.

''நல்ல பொண்ணா இருக்கணும்... இங்கே நடந்ததைப் பத்தி யார்கிட்டயும் எதுவும் நீ பேச வேண்டாம்! இந்த வயசு அப்படித்தான் அலை பாயும்! நான், லவ் பண்றது தப்புன்னு சொல்லலை. ஆனா, படிச்சி முடிச்சி டிகிரி வாங்கிட்டு அப்புறமா வந்து, நான் இவரைக் காதலிக்கிறேன்னு சொல்லு.

''அது, இப்போ மாதிரி இனக்கவர்ச்சியா இல்லாம ஒரு மெச்சூர்டு டெசிஷனா நிச்சயமா இருக்கும். நானே அப்ப உனக்காக அங்கிள்கிட்டப் பேசுவேன் அப்படின்னு அட்வைஸ் பண்ணி என்னைத் தெளிய வச்சார்!

''அப்பதான் எனக்குப் புரிஞ்சது... அவர் எவ்வளவு உயர்ந்தவர் அப்படின்னு'' என்றபோது, இமைக்க மறந்த விழிகளுடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் நந்து.

"நான் ஒருத்தி! அவர் உங்ககிட்ட எல்லாத்தையும் சொல்லி இருப்பாரு... இல்லைக்கா?"

ரேகா கேட்டபோது 'இல்லை' என்று தலையசைத்தாள் அவள்.

"முகேஷ் அண்ணா கிரேட்...! உங்ககிட்டக் கூட என்னைப் பத்தி எதுவும் சொல்லலைன்னா...! எனக்கு ரொம்ப கில்டியா இருக்குக்கா!" என்ற போது அவளை சமாதானப்படுத்தும் விதமாகப் புன்னகைத்தாள் நந்து.

"பழைய விஷயங்களெல்லாம் எதுக்குப் பேசணும்னு விட்டிருப்பாரு ரேகா... அது சரி! நீ இப்ப யாரையாவது லவ் பண்றியா...?"

நந்து கேட்டபோது, "இல்லை" என்று தலையசைத்தாள் அவள்.

வாழ்க்கையைப் பற்றி புரிந்துகொண்டு அவள் மாறியது பெரும் நிம்மதியைத் தர, அவளுடைய குரல் தொடர்ந்தது.

"முகேஷ் அண்ணாவுக்கு எவ்வளவோ வரன் வந்தப்ப, அவர் வேண்டாம்னு மறுக்கறதா ஆன்ட்டி அம்மாகிட்ட ரொம்ப வருத்தப்படுவாங்க!

"ஆனா உங்களைப் பாத்துட்டு வந்தப்புறம் 'இந்தப் பொண்தாம்மா எனக்கு மனைவி! நீங்க பெண் கேட்டு அனுப்புங்கன்னு சொல்லிட்டாராம்...

"அதனால, எனக்கும் உங்களைப் பாக்கணும்னு ரொம்ப ஆசையா இருந்தது! ஆனா, ரிசப்ஷன்லே உங்களைப் பாத்தப்புறம் தான் தெரிஞ்சது... அண்ணாவோட செலக்‌ஷன் சூப்பர்ப் அப்படின்னு!" என்று முடித்தாள் ரேகா.



சிறு முறுவலுடன் அவள் கூறியதையே யோசித்தபடி அமர்ந்திருந்தவளுக்குள்... சிறு மாற்றம்!

மனதில் ரேகா கூறியவற்றையே பதியன் போட்டபடி வெளியே வந்தபோது, சுகுமாரிடம் பேசிக் கொண்டிருந்த முகேஷின் முகமும் பாவனைகளும், முதன் முதலாக அவளுக்குள் சிறு சலனத்தை ஏற்படுத்துவதாய்!

முதன் முதலாக, அவன் மீது நட்பையும் தாண்டி ஏதோ ஓர் உணர்வு படர்ந்தது.

எதேச்சையாகத் திரும்பிய அவனுடைய விழிகளில் தெரிந்த நேசக் கவிதைகள் கண்டு, ஒரு நிமிடம் நின்று பிறகு துடிக்க ஆரம்பித்தது நந்துவின் மனது.

## 18

நாட்கள் சக்கரம் கட்டிச் செல்ல, தீபாவளியும் நெருங்கியது.

தலைதீபாவளி என்பதால், முகேஷும் அவளும் மதுரைக்குக் கிளம்பிச் சென்றனர்.

காயத்ரி, ஆள் வைத்து பலகாரங்கள் எல்லாம் தயார் செய்திருந்தார்... இருவருக்கும் உடைகளும், நகைகளும் வாங்கி வைத்திருந்தார்.

எண்ணெய் தேய்த்துக் குளித்து, புதுத் துணிகளும், நகைகளும் அணிந்து, மாமா, மாமி, கௌரியும் வந்து விடப் பட்டாசு வெடித்துக் குதூகலமாகக் கொண்டாடினார்கள்.

அசுரன் என்றாலும், ஒருவரது இழப்பைக் கொண்டாடுவதா என்ற கேள்விக்குப் பதிலின்றி, நரகாசுரனின் அழிவை தீபாவளியாக்கி ஊரே திருவிழாக் கோலம் பூண்டிருந்தது.

தீப ஒளிகளால் இரவைப் பகலாக்குவது போல வண்ண வண்ண வான வேடிக்கைகளும், காதை அடைக்கும் வெடிச் சத்தங்களும், இதமான சூழ்நிலையை அறிமுகப்படுத்த, அவள் மனம் லேசாகி உலகமே ரம்யமாகியது.

நரகாசுரனால், நகரே புத்தொளி பெற்று கோலாகலமாய்!

அவளையே கவனித்துக் கொண்டிருந்த முகேஷுக்கு, அவளைப் பற்றி நினைத்தாலே பிரமிப்பாய்...!

வைராக்யமாகத் தன்னுடன் மண வாழ்வை மறுத்தவள், சிறு விஷயங்களுக்கெல்லாம் உணர்ச்சி வசப்படுவதும்... அழகாய் கவிதை எழுதுவதும்... மென்மையான ரசனைகளில் மனம் இழப்பதையும் கண்டபோது, மனிதர்களே இரண்டானவர்களோ என்ற எண்ணத்தை அவனுள் விதைப்பதாய்...!

மனம் உறுதிப்பட்டாலும், சில மெல்லிய எல்லைக் கோடுகள் இரு வடிவமாக்குவதைப் புரிந்த கொள்ள முடியவில்லை.

ஆனால் அந்த நதியிடம் மானசீகமாகக் கோரிக்கை விடுத்தபடி இருந்தது அந்தக் கடல்.

தன் முகம் தொலைந்து போகும் முன் வந்து, அணை உடைத்துத் தன்னுடன் சேரும்படி...!

* * *



அவர்கள் கும்பகோணத்துக்குத் திரும்பி வந்து ஒரு மாதம் ஓடியதே தெரியவில்லை.

வாழ்க்கை, எந்த மாற்றமுமின்றி செல்ல, காயத்ரி தினமும் ஃபோன் செய்து பேசிக் கொண்டிருந்தார்.

மஹேஷ்வரனும், மீனாட்சியும் அவளை, ஒரு சொந்த மகள் போல் பார்த்துக் கொண்டனர்.

ஒரு நாள் மாலையில் அழகிய பெண் ஒருத்தி, கல்யாண இன்விடேஷனோடு வந்திருந்தாள்.

அவளை வரவேற்று அமரச் செய்தபோது, தன் அக்காவின் கல்யாணத்திற்காக அழைக்க வந்திருப்பதாகக் கூறினாள் அந்தப் பெண்.

டிபன் கொடுத்து விட்டு மீனாட்சியும் அவளும் பேசிக் கொண்டிருந்தபோது தொழிற் சாலையிலிருந்து வந்த முகேஷும் அவளிடம் இயல்பாகப் பேசியபடி, நந்துவை அறிமுகப்படுத்தினான்.

அவள் அவனுடைய செக்ரட்டரி என்று அப்போதுதான் தெரிந்தது அவளுக்கு!

பத்திரிகையைக் கொடுத்துவிட்டு அவள் கிளம்பும் போது, வெளியில் அதுவரை சாரலாய் பன்னீர் தெளித்த மழை... நன்றாகப் பொழிந்து வலுக்க ஆரம்பித்தது.

தானே அவளை வீட்டில் கொண்டு விட்டு வருவதாகக் கூறிய முகேஷ், உடனே காரை எடுத்துக் கொண்டு கிளம்பிச் சென்றபோது, ஏனோ அவள் மனதில் சிறிதாய் ஒரு சலனம்!

ஒரு கணம் நெஞ்சம் படபடத்து விட, அதே ஞாபகத்தில் அவன் திரும்பி வரும்வரை தத்தளித்துத் துடித்தது.

ஏதோ ஒரு வேதியல் மாற்றம் தனக்குள் நிகழ்வது புரிந்தது... ஆனால் என்னவென்று மட்டும் இனம் கண்டு கொள்ள முடியவில்லை.

* * *

பொங்கலும் வந்து செல்ல, பிறகு வந்த நாட்களில் என்னதான் மறக்க நினைத்தாலும், பத்திரிகைகளில் அடிக்கடி வரும் வரதட்சணை சாவுகள், அனிதாவை மீண்டும் மீண்டும் நினைவு படுத்துவதாய்!

செய்திகளைப் படித்த அன்று, மனம் கனத்துப் போய் உள்ளுக்குள்ளேயே கனன்று எரியும் தீயாய் மனம் தகிக்கும்!

''அக்னிக் குஞ்சொன்றை ஆங்கோர் பொந்திடை வைத்தேன்... வெந்து தணிந்தது காடு!'' என்ற பாரதியாரின் பாடல் வரிகள் நிஜமாய்!

அவளை தீயாய் தகிக்கச் செய்வதற்கு, சிறு செய்திகளே போதுமானதாய்...!

நந்து, அன்று முழுவதுமே ஒரு விதமான மௌனத்திலிருப்பாள்.

மீனாட்சியும் அவளுக்குத் தாயின் ஞாபகம் வந்து விட்டதோ என்று நினைத்து, அவள் போக்கிலேயே விட்டுவிட்டு, இரவு காயத்ரிக்கு போன் செய்து பேசச் சொல்வார்.

* * *

அன்றும் நந்துவின் மனநிலை அப்படியே இருக்க, அவளையே கவனித்த மீனாட்சி முகேஷுக்கு போன் செய்தார்.



''முகேஷ்... நான் அம்மா பேசறேன்ப்பா! நந்துவுக்கு என்னவோ மனசு சரி இல்லை போலருக்கு! நீ அவளை எங்கேயாவது வெளியே அழைச்சிட்டுப் போயேன்.

''சினிமா, கோவில்னு எங்கயாவது போனா அவ மனசு கொஞ்சம் மாறும் இல்லையா? நீயும் வேலை தான் முக்கியம்னு இருந்திடாதே!'' என்றவரின் குரல் வாஞ்சையுடனிருந்தது.

அன்று மாலை வீட்டுக்கு போன் செய்து நந்துவிடம் பேசினான் முகேஷ்.

சினிமாவுக்கு டிக்கெட் வாங்கி இருப்பதாகவும், அவளைத் தயாராக இருக்கும்படியும் கூறினான்.

அவளுக்கும் ஒரு மாற்றம் தேவையாக இருந்தது.

முகேஷ் வருவதற்குள், அவன் வாங்கித் தந்த புடவையையே அணிந்து, தயாராக இருந்தாள்.

மீனாட்சியிடம் சென்று அவரையும் திரைப்படத்திற்கு அழைத்தபோது, அவர் வர மறுத்து விட்டார்.

''இல்லைம்மா! நான் சினிமாவுக்கெல்லாம் போறதே இல்லை. இப்ப அதிலெல்லாம் ஆசை போயிடுச்சி... சீரியல் பாக்கறதோட சரி! நீங்க சின்னஞ்சிறுசுங்க... போயிட்டு வாங்க'' புன்னகையுடன் கூறினார்.

முகேஷ் வீட்டிற்குள் வரும் போதே, தான் விரும்பி வாங்கித் தந்த புடவையில் அவள் அழகு இன்னும் அதிகமாகி ஒளிர்ந்ததை ஓரக்கண்ணால் கவனித்து விட்டு, மாடிக்குச் சென்று தயாராகி வந்தான்.

காரில் போகும்பொழுது, ''உனக்கு இந்த ஸாரி ரொம்ப நல்லாருக்கு'' இயல்பாகக் கூறினான்.

"உங்களுக்கு ரெண்டு தேங்க்ஸ்... ஒண்ணு இதை வாங்கித் தந்ததுக்கு... இன்னொன்னு அது பெஸ்ட் சாய்ஸா இருந்ததுக்கு!"

மெதுவாக முறுவலித்தபடிக் கூறினாள் அவள்.

"என் சாய்ஸ் எப்பவுமே பெஸ்ட்டாதான் இருக்கும்! ம்... சில சமயங்களிலேதான் கொஞ்சம் சொதப்பிடுது!" என்றான் கேலியுடன் அவளையே ஓரக்கண்ணால் பார்த்தபடி!

ஆனால், அவள் புரிந்து கொள்ளவில்லை!

"என் சாய்ஸ் கூட எப்பவுமே நல்லாருக்கும்."

அவள் பெருமையாகக் கூறிய மறு நொடியே, "அது என்னைப் பாத்தாலே தெரியுமே... நான் உன்னோட சாய்ஸ்தானே...?" முகேஷ் குறும்புடன் கூறினான்.

மனதிற்குள் மலர்ந்து வெளித் ததும்பிய புன்னகையை மறைத்து ஒன்றும் கூறாமல் வெளிப்புறம் திரும்பிப் பார்வையைப் பதித்தாள் அவள்!

"மொழி..." அந்தத் திரைப்படம், சப்தங்களற்ற மௌன மொழியாய், சைகை சங்கீதமாய் மனதை இனிதாய் நிறைத்தது.

திரைப்படம் முடிந்து அவர்கள் திரும்பி வரும்போது, மழை மரங்களுக்கு உயிர்த் தண்ணீரைப் பரிசளித்துக் கொண்டிருந்தது.

போர்டிகோவில் சென்று கார் நின்றதுமே இறங்கிய நந்து, மழையில் இறங்கி முகம் நிமிர்த்தி பூஞ்சிதறலாய் சிதறிய துளிகளை சாதகப் பறவையாய் உள் வாங்கிக் கொண்டாள்...!



வானுக்கும் பூமிக்கும் இடையே நெய்யப்பட்ட வெள்ளி இழையில் சுகமாய் நனைந்தபோது, ஜீவனுக்குள் சில்லென்ற ஒரு சிலிர்ப்பு ஓடியது.

சிறு குழந்தையின் உற்சாகத்துடன் நின்றிருந்தவளை, வியப்புடன் ஏறிட்டான் முகேஷ்.

கார் சப்தம் கேட்டு உள்ளிருந்து வந்த மீனாட்சி, பதறிப் போய் குடையுடன் ஓடி வந்தார்.

அவளை உள்ளே அழைத்துச் சென்று, தலையைத் துவட்டிக் கொள்ளும்படிக் கூறினார்.

ஏனோ தன் தாயின் பரிவு சட்டென்று அவளுக்கு நினைவு வந்துவிட விழிகளில் இதமான மழைச் சாரல்!

## 19

இரவு. சாப்பிட்டுவிட்டு அறைக்கு வந்து ஈரமாயிருந்த கூந்தலை விரித்துக் காயவைத்துக் கொண்டிருந்த போது, போன் ஒலித்தது.

யாரென்று பார்த்தால் காயத்ரிதான் பேசினார்.

"நந்து... சினிமாவுக்குப் போயிருந்தீங்களா? ஒன்பது மணிக்கு போன் பண்ணி இருந்தேன்... சம்பந்தியம்மா சொன்னாங்க! நல்லா இருக்கியாடா?"

பிரிவின் பாதிப்பு வெகுவாய்த் தெரிந்தது அவர் குரலில்!

"நான் நல்லாருக்கேன்மா... நீங்க ஒழுங்கா சாப்பிட றீங்களா? எனக்கு உங்க கவலைதான்...! எப்போ ட்ரான்ஸ்பர் கிடைக்கும்னு ஏதாவது தெரிஞ்சதாம்மா?"

"அதப்பத்தி சொல்லத்தான் நந்து பண்ணேன். ரெண்டு மாசத்துல, கட்டாயமா கிடைச்சிடும்னு மேனேஜர் சொல்லி இருக்காரு! அப்புறம் நாளைக்கு திண்டுக்கல் லேருந்து கௌரியைப் பொண்ணு பாக்க வராங்க... நாளைக்கு நைட் நான் பேசறேன்... உடம்பைப் பாத்துக்க" என்று வைத்தார்.

மனதிற்குள் மகிழ்ச்சிப் பூக்கள் மலர்ந்தன.

உற்சாகத்துடன் ஜன்னலருகே சென்று நின்றாள்.

அங்கு மேகத்தை இழுத்து முக்காடு போட்டுக் கொண்டு மறைகின்ற வெண்ணிலவைப் பார்த்தபோது, மனதில் கவிதை உதயமானது.

"வான்மதியே! ஏன், மேகங்களை இழுத்து மூடி, முகம் மறைக்கிறாய்..? நட்சத்திர ரோமியோக்கள் கண் சிமிட்டு வதாலா...? ஏன், மாதத்தில் ஒரு நாள் மட்டும் முழுமை யாகப் பிரகாசிக்கிறாய்..? உன் பெருமையை, இம்மண் ணின் மைந்தர்கள் உணர்ந்து கொள்வதற்கா? ஏன், உன் மேல் இத்தனை காயங்கள்? மனிதர்கள் உன் மேல் தங்கள் காலடிச் சுவடுகளைப் பதித்ததாலா...?"

அவளுடைய கேள்விக்கு பதிலாக, உடனே விலகி நிலவை முகம் காட்டச் செய்த மேகக் கூட்டமும், அவற்றுக்குள் தற்காலிகமாக மறைந்து, புகை படிந்து கண் சிமிட்டிய விண்மீன்களும்... வானத்தில் பல ஆச்சர்யங் களையும் அற்புதங்களையும் அறிமுகப்படுத்தின.



கற்பனை உலகம் கலைந்தது... யாரோ நடந்து வரும் காலடி ஓசையைக் கேட்டு!

முகேஷ், அவளைக் காணாமல் தேடி விட்டு சிட் அவுட்டுக்கு வந்தான்.

நிலவொளியில் தங்கச் சாயம் பூசிய ஒரு சிலையைப் போல் அவள் நின்றிருந்த கோலம், அவனை ஒரு நிமிடம் பிரமிக்க வைத்தது.

இந்த மௌன தவத்தின் பின்னணி என்று கலையும் என்ற ஏக்கம் படர்ந்தது அவனுக்குள்..!

இந்த சிலைக்கு உயிர் வருமா... எனக்கு உயிர்ப்பைத் தருமாவென்ற தவிப்பு முகேஷிடம் தெரிவதாய்!

மெல்லத் திரும்பியவள், அவனைக் கண்டதும் உற்சாகமானாள்.

காயத்ரி போன் செய்த விஷயத்தைப் பற்றி, பள்ளியில் நடந்தவைகளை வீட்டுக்கு வந்து சலுகையுடன் தாயிடம் பகிர்ந்து கொள்ளும் சிறு பிள்ளையைப் போல், கண்கள் மின்னக் கூறினாள்.

அவளையே ரசித்துக் கொண்டிருந்தவன், "அத்தை நேத்தே சொல்லி இருந்தா, நாம இன்னிக்குப் போயிருந் திருக்கலாமே?" என்றான் மென்மையாக.

"இல்லை... பரவாயில்லை! பொண்ணு பாக்கத் தானே வராங்க... நிச்சயதார்த்தம் செஞ்சாங்கன்னா அப்பப் போகலாம்."

குரலில் ஒரு விதத் துடிப்போடு பகர்ந்தவளையே இமைக்காமல் ஒருவித ரசனையோடு அளவிட்டான் அவன்.

அவள் இன்றுதான், முதல் முறையாகத் தன்னிடம் மனம் விட்டு ஒரு விஷயத்தைப் பற்றி இயல்பாகப் பேசி இருக்கிறாள் என்பதை, மனம் உள் வாங்கிக் கொண்டது.

அவளுடன் நின்று நிலவை ரசிக்க ஆரம்பித்தான் அவன்.. மனதிற்குள்ளோ முழு நிலவாய்... அவள் உருவமே!

"இரவு.... பெண்களையும் நட்சத்திரங்களையும் மேலும் அழகாக்கி சிறப்பாக்கிக் காட்டுகிறது."

எப்போதோ படித்த கவிஞர் பைரனின் வரிகள் நினைவில் படர்ந்தன... மெல்லச் சிலிர்த்தது இதயம்!

* * *

மறுநாள் முழுவதும், அவளுக்கு கௌரியைப் பெண் பார்க்க வருவார்களே... என்ன சொல்வார்களோ என்ற நினைவே, மனதில் முகாமிட்டிருந்தது.

மாலையில்தான் அவர்கள் வருவதால், இரவு கட்டாயம் போன் செய்து பேச வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

அன்று மதியம், முகேஷ் அதிசயமாக வீட்டுக்கு வந்திருந்தான். அவளை மாடிக்கு வருமாறு அழைத்தவன், கையில் ஒரு கவருடன் சென்றபோது, அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

அறைக்குள் சென்றதும், "ஹாப்பி வேலன்டைன்ஸ் டே!" என்றபடி ஒரு அழகிய பார்சலை அவளிடம் அளித்தான்.

முழுவதும் இதயத்தின் படம் போடப்பட்டு மேலே சுற்றி இருந்த கிஃப்ட் பேப்பரைப் பிரித்து உள்ளே இருந்த பரிசைப் பார்த்தாள் நந்து.



பெரிய கண்ணாடிக் குடுவையின் உள்ளே திரவத்துக்குள் அழகான வெண்மை நிறத்தில், 'தாஜ் மஹால்' சிப்பிக்குள் அழகிய முத்தைப் போல் பிரகாசித்தது.

நீல யமுனை நதிக்கரையில் கவிதையாய், இன்றும் காதலைக் கூறிக் கொண்டிருக்கும் தந்தப் பேழையைப் பார்த்து மனம் மகிழ்ந்தாலும், புரியாமல் நிமிர்ந்தாள்.

''இத ஏன் எனக்குக் குடுக்கறீங்க?''

''வேற யார்கிட்டயாவது குடுத்தா உதைப்பாங்க... தெரியுமா? காதல் சின்னத்தை பொண்டாட்டி கிட்டக் குடுக்காம, வேற எங்கே குடுக்கச் சொல்றே?'' என்றபோது, அவன் குரலில் குறும்பு கலந்த கேலி!

''இது காதலிக்காகக் கட்டப்பட்டது! அதான், காதலர் தினத்தன்னிக்கு எனக்கு ஏன் குடுக்கறீங்கன்னு கேட்டேன்'' என்றாள், அவளும் விடாமல்!

''ஒரு சின்னத் திருத்தம்... காதலிக்காக இல்லை! அன்புக் காதலியா இருந்த மனைவிக்காக எழுப்பப்பட்டு, அவங்க மறைஞ்ச போனப்புறமும், காதலோட மறையாத சின்னமா இருக்கற ஒரு உலக அதிசயம்! எனக்கு என்னவோ, இன்னிக்கு உனக்குக் குடுக்கணும்னு தோணிச்சி... குடுத்தேன்!''

ஆழ்ந்த குரலில் கூறியபோது, அவன் பார்வை அந்த உதட்டு மச்சத்தின் மேலிருந்தது.

எதுவோ புரிய மெதுவாக அவனை நிமிர்ந்து பார்த்த போது, அந்தப் பார்வையில் மனம் தடதடத்து முகம் குப்பென்று சிவந்து விட, நந்து உடனே தலை குனிந்து கொண்டாள்.

புதிதாய் வெட்கம் வந்து, அழையாத தோழியாய் முகத்தில் ஒட்டிக் கொண்டது.

தன் மேல் எவ்வளவு காதல் இருந்தால், தாஜ் மஹாலைப் பரிசாகக் கொடுத்திருப்பான் என்ற எண்ணத்தில், அவளுக்குள் உறைந்திருந்த பெண்மை மெல்ல இளகி, முகம் நாணத்தில் சிவந்தது.

இமைக்காமல் அவளையே கவனித்துக் கொண்டிருந்த முகேஷுக்கோ, அவள் முகம் கோடி மின்னல்களை அறிமுகப்படுத்துவதாய்!

எங்கிருந்தோ வந்து சரசமாய் வருடி உயிர் தீண்டும் வெண்பனியாய்...!

முகேஷ் அன்று மனதில் புதிய உற்சாகத்துடன் அலுவலகத்துக்குச் சென்றான்.

மாலையில் மஹேஷ்வரனும் மீனாட்சியும் ஒரு உபன்யாசச் சொற்பொழிவுக்குச் சென்றிருந்தனர்.

## 20

இன்று, ஏனோ மனம் முகேஷை எதிர்பார்த்து தவிப்புடன் காத்திருந்தது... இதற்குப் பெயர் என்னவென்று யோசித்தபோது, விடை மட்டும் தெரியவில்லை.

இரவு ஏழு மணியாகியும் அவன் வீட்டுக்கு வரவில்லை என்றவுடனே, அவள் மனம் பரிதவிக்க ஆரம்பித்தது.



எப்போதுமே வரத் தாமதமானால், போன் செய்து கூறி விடுவது அவன் வழக்கம் என்பதால், நெஞ்சுக் கூட்டுக்குள் பயச்சிறகுகள் படபடத்தன.

திடீரென்று, போன் செய்து பார்த்தால் என்னவென்று தோன்ற, தொழிற்சாலைக்கு போன் செய்தாள்.

மேனேஜர்தான் பதட்டத்துடன் பேசினார்.

''நம்ம பேக்டரியில ஒரு தீ விபத்தும்மா... முதலாளி இங்கே...'' என்பதற்குள் ரிஸீவர் அவள் கையிலிருந்து நழுவியது.

போனை சரியாக வைப்பதற்குள் இருட்டிக் கொண்டு வர, சமையல்காரம்மாவிடம் கூறிவிட்டு, ஓடிச் சென்று டிரைவரை அழைத்தாள்.

அப்போதுதான் நினைவு வந்தது... காரை எடுத்துக் கொண்டு மஹேஷ்வரனும், மீனாட்சியும் கோவிலுக்குச் சென்றிருப்பது!

உடனே வீட்டைப் பூட்டியவள், சமையல்காரம்மாவைத் துணைக்கு அழைத்துக் கொண்டு, ஆட்டோவில் புறப்பட்டாள்.

பேக்டரியின் பெயர் கூறியவுடனே, அவன் புரிந்து கொண்டு வேகமாக ஓட்டிச் சென்றான்.

தீ விபத்து பெரிதாக இல்லாமல் அணைத்து விட்டிருந்தனர்.

தன் அறைக்கு அப்போதுதான் வந்து அமர்ந்த முகேஷ், விழிகளில் கண்ணீருடன் அங்கு வந்து நிற்கும் அநந்திதாவை, நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை.

பதறிப் போய் எழுந்தவன், "நீ எதுக்கு இங்கே வந்தே?" என்றான் கோபமாக.

"இல்லை... உங்களுக்கு... இங்க ஃபயர் ஆக்சிடண்ட்டுன்னு." வார்த்தைகள் சிக்கித் தவித்தன.

அவளையே யோசனையோடு கூர்ந்தவன், "எனக்கு ஒண்ணும் இல்லை... இங்க சின்னதா ஒரு ஃபயர் ஆக்சிடண்ட்... எல்லாம் சரி பண்ணியாச்சி!. ரெண்டு பேருக்குக் காயம்... அவங்களையும் ஹாஸ்பிடலுக்கு அனுப்பியாச்சு...

"நல்ல வேளை! வொர்க்கிங் ஹவர்லே நடக்காததாலே இதோடப் போச்சு... உன்கிட்ட யார் இதச் சொன்னா! நான் அப்பாகிட்டே கூட சொல்ல வேணாம்னு சொன்னேனே!" என்றவனின் குரலில் மெலிதான சீற்றம் தெரிந்தது.

"வீட்டிலே, மாமா அத்தை இல்லை! நீங்க வர லேட்டாயிடுச்சேன்னு... நானதான் போன் பண்ணேன்."

வார்த்தைகள் திணறியபடி வந்தன.

சட்டென்று, அவன் இதயம் லேசாகி முகம் மென்மையானது.

அவனுக்கு எந்த ஆபத்துமில்லை என்று தெரிந்தாலும், தீக்காயங்கள் எதும் இல்லாமலிருக்கிறதா என்று, அவள் விழிகள் அவனையே பரபரப்புடன் ஆராய்ந்தன.

ஒரு நீண்ட பெருமூச்சுடன் ஓய்ந்து போனவளைப் பார்த்து நெகிழ்ந்து போனான் முகேஷ்.

"நீ முதல்ல கிளம்பி வீட்டுக்குப் போ... நம்ம டிரைவரைக் காரை எடுக்கச் சொல்றேன். நீ தனியாவா வந்தே...?" யோசனையுடன் கேட்டான்.



"இல்லை... வீட்டைப் பூட்டிட்டு சமையல்காரம்மாவோட வந்தேன்."

தயக்கத்துடன் அவள் கூறியபோது, அவனுக்குள்ளும் சிறு புன்னகை!

மெதுவாக குனிந்தவன் "நந்து... என்ன பயம் உனக்கு? யாருக்கும் எதுவும் ஆகலை! என் பொண்டாட்டி பெரிய வீராங்கனைன்னு நினைச்சிட்டிருந்தேன். ஒரே நிமிஷத்திலக் கவுத்திட்டியே...?" கேலியாகக் கூறினான்.

"ம்... நானே பயந்து போய் ஓடி வந்தா, கிண்டலா உங்களுக்கு...! சே... நான் வந்திருக்கவே கூடாது!"

கோபமாகக் கூறிவிட்டு வேகமாகத் திரும்பிச் செல்ல ஆரம்பித்தாள் நந்து.

"ஏய்... இரு நானே வரேன்... உன்னை வீட்டுல விட்டுட்டு ஒரு குளியல் போட்டுட்டு, அப்புறமா திரும்பி வரேன்." என்றவன் மேனேஜரை அழைத்தான்.

அவரிடம் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு, அவளையும் சமையல்காரம்மாவையும் வீட்டுக்கு அழைத்து வந்தான்.

அவள் டிபன் எடுத்து வைக்கும்போது, கோவிலில் இருந்து பெரியவர்கள் இருவரும் வந்துவிட, எல்லாவற்றையும் அவர்களிடம் கூறினாள் நந்து.

"ஏம்மா... நேரா கோவிலுக்கு வந்து எங்களையும் அப்படியே அழைச்சிட்டுப் போயிருக்கக் கூடாதா?" பதட்டத்துடன் கேட்டார் மீனாட்சி.

அப்போதுதான், குளித்துத் தயாராகி வந்தான் முகேஷ்.

"ஆமாம்... ரெண்டு ஃபயர் சர்வீஸ் லேடிங்களும் வந்துதான் அங்க எல்லாரையும் காப்பாத்தணும்..." கிண்டலாக வந்தது அவன் குரல்.

உடனே "பாருங்கத்தை... இப்படித்தான் வந்ததி லேருந்து கிண்டல் பண்ணிட்டே இருக்காரு" நந்து சலுகையாகச் சிணுங்கினாள்.

"எம்பா இப்படிப் பண்றே? பொண்டாட்டிக்குதான் புருஷனைப் பத்தின கவலை இருக்கும்... வேற யார் கவலைப்படுவா?" மீனாட்சி அவனிடம் கேட்டார்.

குறும்புடன் "அப்படியா... அச்சச்சோ... எனக்குத் தெரியாதே! மாமியாரும் மருமகளும் ஒண்ணா சேந்தாச்சா... அப்பா...! இனிமே நம்ம பாடு அவ்வளவுதான்!

"அதான்... நிறைய வீட்டுலே, மாமியார் மருமக சண்டையக் கண்டுக்காம விட்டுட்டு, ஆம்பிளைங்க தப்பிச்சிடுறாங்க போலருக்கு!" குறும்புடன் கூறியபடி சாப்பிட்டுவிட்டுத் தொழிற்சாலைக்குச் சென்றான்.

* * *

அன்றிரவு அவளுக்கு ஏதோ புரிந்தும் புரியாதது போல்!

முகேஷின் மேல் அக்கறை இல்லை என்றால், தான் ஏன் அவ்வளவு பதட்டப்பட்டோம் என்ற கேள்விக்கு அவளிடம் பதில்தான் இல்லை.

அவன் வரும் வரை விழித்திருந்தபோது, மனதில் முதல் காதல் இதமாய் இம்சை செய்தது.

என் மனதில் மாற்றம் தந்தவன் நீதானே என்று, நெஞ்சம் துடித்துத் தவிப்பதாய்!



எண்ணங்களுக்குத் தூது விட்டு, கவிதை வரக் காத்திருந்தபோது, அப்படியே உறங்கி விட்டவளின் கனவில் கூட, அவன் நினைவுகளின் தாலாட்டு!

மறுநாள் காலையில் எழுந்ததுமே, கௌரியைப் பெண் பார்த்துவிட்டுப் போயிருப்பார்களே என்ற ஞாபகம் வந்தது.

உடனே அம்மாவுக்குப் போன் செய்தாள்.

அவரும், கௌரிக்கு கல்யாணம் பேசி முடித்து விட்ட சந்தோஷமான செய்தியைக் கூறினார்.

உடனே கௌரிக்கும் போன் செய்து வாழ்த்துக்களை தெரிவித்தவளுக்கு, மனதில் இன்று உற்சாகம் ஊஞ்சல் கட்டி ஆடியது.

## 21

அன்று காலையிலேயே, எதிர்பாராத விருந்தாளியாய் முகேஷுடைய மாமா, தன் மகனுடன் ஊரிலிருந்து வந்திருந்தார்.

அவர்களுடன் ஒரு பெண்ணும் வந்திருந்தாள்.

அனைவரையும் வரவேற்று விருந்தினர் அறையில் தங்க வைத்துவிட்டு வந்தபோதுதான் நந்துவுக்கு உண்மையே விளங்கியது.

அந்தப் பெண் ஒரு பெரிய தொழிலதிபரின் மகளென்றும், முகேஷின் மாமா மகனும் அந்தப் பெண்ணும்

ஒருவரை ஒருவர் உயிராய் விரும்புவதாகவும் தய... சங்கடத்துடன் கூறினார் மீனாட்சி.

"இதிலே என்னத்தை தப்பு? ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பறாங்க... இதிலே அவங்களை சேர்த்து வைக்கணும்னு முடிவெடுத்து இங்கே அழைச்சிட்டு வந்திருக்காங்களே... உங்க அண்ணா... அவங்களோட பெருந்தன்மையையும் துணிச்சலான முடிவையும்தான் நாம பாராட்டணும்" இயல்பாகக் கூறினாள்.

அப்போது, அதைக் கேட்டபடி சமையலறைக்குள் வந்த மீனாட்சியின் அண்ணன் சாரங்கன், நந்துவின் கைகளை நன்றியுடன் பற்றிக் கொண்டார்.

"ரொம்ப நன்றிம்மா! நீ என் பொண்ணு மாதிரி! இந்த விஷயத்தை நீங்க எப்படி எடுத்துப்பீங்களோன்னு கூனிக் குறுகிதான் நான் இங்கே வந்தேன்... ஆனா, மத்தவங்க எப்படி நடந்தாலும் நீ அதை எவ்வளவு இயல்பா, எத்துக்கிட்டு என்னைப் பத்தியும் பெருமையாப் பேசினே பாரு... உன் நல்ல மனசு இப்பதாம்மா புரியுது."

நெகிழ்ந்து போய்க் கூறியவரிடம் மெதுவாக முறுவலித்தவள், அங்கு சமையல்காரம்மா இருப்பதை உணர்ந்து அவரை ஹாலுக்கு அழைத்துச் சென்றாள்.

இது ஒரு பெண்ணின் வாழ்க்கை... அது நாலு பேர் வாயில் சிக்கி வீணாகச் சீரழிவதில் அவளுக்கு விருப்பமில்லை.

அங்கு அமர்ந்திருந்த சாரங்கனின் மகன் முருகனும், அந்தப் பெண்ணும் மரியாதையுடன் எழுந்து நிற்க, மீனாட்சி எல்லோரையும் விருந்தினர் அறைக்கு அழைத்துச் சென்றாள்.



பிறகு, "என்னண்ணா ஆச்சு? உங்களுக்குதான் தெரியுமே... உங்க மாப்பிள்ளைக்கு எந்த விஷயமா இருந்தாலும் பர்ஃபெக்டா நடக்கணும். கல்யாணம் பண்ணாம ஒரு சின்னப் பெண்ணை அவங்க வீட்டாரோட விருப்பமில்லாம நீங்க அழைச்சிட்டு வந்ததுல அவங்களுக்கு வருத்தம்னு நினைக்கிறேன். அதான் எதுவுமே பேசாம பேக்டரிக்குப் போயிட்டாங்க... நீங்க தப்பா நினைச்சிக்காதீங்க... நான் வந்ததும் அவர்கிட்டே பேசறேன்!"

மீனாட்சி கூறியதும், சாரங்கனின் முகம் சிறிது தெளிந்தது.

"மீனா! எனக்குப் புரியுதும்மா! ஆனா எனக்கு வேற வழி தெரியலை! உள்ளூரிலே இருந்தா, இவன் உயிருக்கே ஆபத்தானாலும் ஆகிடும்! அதனாலதான் இங்கே அழைச்சிட்டு வந்தேன்...

"இன்னும் ஒரு வாரத்துல இந்தப் பொண்ணு தவமணிக்கு பதினெட்டு வயசு முடிஞ்சிடும். மேஜர் ஆகிடுவா! அப்புறம் கவலை இல்லை!" ஓய்ந்து போய்க் கூறினார்.

நந்து அனைத்தையும் பொறுமையாய் கவனித்திருந்தாள்.

"இதை அவர்கிட்டே எப்படிச் சொல்றதுன்னுதான் தெரியலை... இது தப்புன்னு எகிறிக் குதிப்பாங்களோன்னு பயமா இருக்கு... ஆனா, முகேஷ் சொன்னா அவங்கப்பா கேப்பாங்க!"

தவிப்புடன் கூறிய மீனாட்சியின் விழிகளில் சிறு நம்பிக்கை ஒளி!

உடனே நந்துவிடம் திரும்பியவர், ''நந்து... இது உன்னால முடியும்மா! நீ சொன்னா இப்போ முகேஷ் கேப்பான்... அவனால அவங்கப்பாவை சமாதானப் படுத்த முடியும்... எனக்காக செய்வியா?'' மெதுவாகக் கேட்டார்.

தலை குனிந்து நின்றிருந்த முருகனையும் தவ மணியையும் ஒரு முறை ஏறிட்டாள் அவள்.

''நான் சொன்னா... அவர் கேப்பாரா அத்தை? எனக்குத் தெரியலையே...?'' சிறு சஞ்சலத்துடன் கூறினாள்.

''இல்லைம்மா... நிச்சயமாக் கேப்பான்... உன்னால தான் இது முடியும்...! அவன்கிட்ட மதியம் பேசிப் பாரு! அப்புறமா சாயந்திரம் அவனே தன் அப்பாவோடப் பேசட்டும்.''

மீனாட்சி முடிவாகக் கூறினார்.

மெல்லிய தலையசைப்புடன் வெளியேறியவளைத் தொடர்ந்து வந்தார் சாரங்கன்.

''நான் முருகனை அழைச்சிட்டுப் போயிடுறேம்மா! அந்தப் பொண்ணை மட்டும் இங்கே தங்க அனுமதிச்சாப் போதும்... முருகனை என் நண்பன் வீட்டுல பக்கத்து ஊரிலே தங்க வெச்சிடுறேன்!'' கண்ணீருடன் கை கூப்பினார்.

''இதுக்கெல்லாம் எதுக்கு கும்பிடறீங்க? நான் இவர் கிட்ட பேசிப் பாக்கறேன்... உறவுக்காரங்கன்னு இருந்து இந்த உதவியைக்கூடச் செய்யலைன்னா எப்படி?''

''அதில்லைம்மா! சும்மாக் காதலிச்சிருந்தாக் கூட பரவாயில்லைம்மா... விட்டுடலாம்...! அந்தப் பொண்ணும் தினம் காலேஜுக்குப் போறேன்னு கிளம்பி வந்



திருக்கு... இவனும் வேலைக்குப் போறதா சொல்லிட்டு எங்களை ஏமாத்தி யிருக்கான்மா!

''பக்கத்து ஊரிலே ஒரு வீடு எடுத்து தங்கி ஒரு மாசமாக் குடித்தனம் நடத்தியிருக்காங்க... சாயந்திரமானா அவங்கவங்க வீட்டுக்குத் திரும்பி வந்திட்டதாலே எங்களுக்கு சந்தேகம் வரலை...

''இப்ப உண்மை தெரிஞ்சப்புறம், அந்தப் பொண்ணு எக்கேடோ கெடட்டும்னு விட மனசில்லைம்மா! எனக்கும் வீட்டுக்குப் பெரியவன்கிற பொறுப்பும், தப்பை ஏத்துக்கிட்டு சரிப்படுத்தற தார்மீகக் கடமையும் இருக்கில்லையாம்மா? அதான் அதுங்களை அழைச்சிட்டு இங்கே ஓடி வந்திட்டேன்.''

கலங்கிய விழிகளுடன் அவர் கூறியபோது, அவருடைய உணர்வுகள் புரிந்தன.

அதிகம் படிக்காதவராக இருந்தாலும், பெரும் பண்புள்ளவராய் தோன்றியது... தன்னால் முடிந்த உதவியைச் செய்ய வேண்டுமென்று ஒரு உறுதி வந்தது!

சட்டென்று பூத்த ஒரு மனித நேயத்துடன், ''கவலைப் படாதீங்க! எல்லாம் நல்லபடியா முடியும்!'' என்று கூறி விட்டுத் தன் அறைக்குச் சென்றாள்.

* * *

அன்று மதியம் சாப்பிட வந்திருந்த முகேஷ், சாரங்கனிடம் எதுவுமே கேட்கவில்லை.

எல்லாவற்றையும் மகேஷ்வரன் பார்த்துக் கொள்வாரென்ற நம்பிக்கையுடன், அமைதியாக சாப்பிட்டுவிட்டு மாடிக்கு வந்தான்.

உடனே அவனைப் பின் தொடர்ந்து வந்த நந்துவிற்கு அவனிடம் எப்படிப் பேசுவதென்றே தெரியவில்லை.

இதுவரை, எதற்காகவும் அவனிடம் சென்று நிற்க வேண்டிய நிலை வந்திராததால், பெரும் தயக்கமும் வெட்கமும் அவளை ஆக்ரமிப்பதாய்!

ஆனால், அவனுடைய முகத்திலிருந்தே உணர்வு களைப் படித்தவன், "என்ன... என்னவோ பேசணும்னு நினைக்கிறே போலருக்கு... கேட்டுட வேண்டியது தானே... என்கிட்டே என்ன பயம்?" ஒற்றைப் புருவம் உயர்த்தி இயல்பாகக் கேட்டான்.

சட்டென்று ஒரு விதிர்ப்பு வர, இவன் என்ன மைண்ட் ரீடிங் அறிந்தவனோவென்ற வியப்பு, அவளிடம்!

மீண்டும் அவள் மௌனமாக இருக்கவும், "நந்து! நான் ஆபீசுக்குக் கிளம்பணும்... இவ்வளவு தயக்கம் ஏன்? என்னைப் பாத்தா அவ்வளவு பயமாவா இருக்கு?" யோசனையாக வந்தது அவன் குரல்!

"இல்லை... சாரங்கன் மாமா, ஒரு விஷயம் சொன் னாங்க..." தயங்கியபடி ஆரம்பித்தாள் அவள்.

வியப்புடன் அவளையே பார்த்திருந்தவனிடம், "மிஸ்டர் முருகனும், அந்தப் பொண்ணும் ஒருத்தரை ஒருத்தர் உயிரா விரும்பறாங்களாம். அந்தப் பொண் ணுக்கு இன்னும் ஒரு வாரத்துல பதினெட்டு வயசு முடியுதாம்! அதுவரைக்கும்..."

அவள் முடிக்கும் முன்பே இடைமறித்தான் அவன்.

"ராஸ்கல்... இன்னும் மேஜர் ஆகாத ஒரு பொண்ணை அவன் இழுத்துட்டு வந்திருக்கானா? அதுக்கு அவங்கப்



பாவும் கூட்டு... இதுக்கு என்னைத் தூது போகச் சொல் றியா?"

சீற்றத்துடன் வந்தது அவன் குரல்!

அவனுடைய கோபம்... அவளை வாய் மூடி மௌனி யாக்கியது.

மிரட்சியுடன் விழித்தபடி அசையாது நின்று விட்ட வளைக் கண்டதும்... அவனுடைய இறுக்கம் மாறி, முகம் மாறி கனிந்தது.

"என்ன நந்து... முதன் முறையா என்கிட்டே ஒரு ஆப்ளிகேஷனோட வந்திருக்கே! ஆனா, அதை... சரி நான் என்ன செய்யணும்?

"இதெல்லாம் அப்பாவும் அம்மாவும் முடிவு பண்ண வேண்டிய விஷயம். நான் பொதுவாத் தலையிடற தில்லை... ஆனா, சொல்ல வந்ததை முடிச்சிடு! அந்தப் பொண்ணுக்கு பதினெட்டு வயசு முடியற வரைக்கும்... ம்?" அவளை ஊக்கினான்.

"ம்... அதுவரைக்கும் அவ மட்டும் இங்கே இருக்க அனுமதிச்சா போதும்னாங்க... அவங்கப்பா பெரிய தொழிலதிபராம்! அதனாலதான் அவங்க ஊரிலே தங்க வைக்க முடியலையாம்...

"அத்தைக்கும் பாவம் என்ன செய்யறதுன்னே தெரியலை... அதான் உங்ககிட்ட சொன்னா நீங்க மாமா வோடப் பேசி ஒரு முடிவெடுப்பீங்கன்னு...!" தயக்கத் துடன் நிறுத்தினாள்.

விசித்திரமான முறுவலுடன் அவளையே நோக்கிய வன், "ஓஹோ! அதான் மகாராணி தூது வந்தீங்களோ?

சரி... நான் பாத்துக்கறேன்...'' என்றவுடனே பெரும் நிம்மதி வந்தது அவளுக்கு!

சிறு உற்சாகத்துடன் திரும்பியவளிடம், ''ஒரு நிமிஷம்! இதை செஞ்சா, எனக்கு என்ன கிடைக்கும்? என்னோட முயற்சிக்கு என்ன கூலி தருவே? சும்மா கிடைக்கறது உலகத்துல எதுவுமே இல்லை... தெரியுமா?''

குறும்புடன் ஒற்றைக் கண் சிமிட்டியபடிக் கேட்டான்.

மனதிற்குள் சிலீரென்று ஒருவிதக் குளிர் ஊடுருவ, நந்து சிலையாய் சமைந்து நின்று விட்டாள்.

அவளையே ஒரு கணம் ஊடுருவியவன், ''ஏய்... என்ன பயந்திட்டியா? அதிகமா ஒண்ணும் கேக்கமாட்டேன்... ஒரே ஒரு முத்தம் தான்!'' சீண்டலாகக் கூறினான்.

திக்கென்று உடலும் மனமும் அதிர்ந்து விட பதறிப் போய் அவள் நிற்கும்போதே, ''நான் கேட்டதைக் குடுக்க ரெடியா இரு! பை!'' சிறு கேலியுடன் கூறிவிட்டு வெளியேறினான்.

இதயம் வாய்க்கு வந்து துடிக்க, தொண்டை உலர்ந்து, மூச்சுக் காற்றுக்காய் தவிக்க ஆரம்பித்தாள் அவள்.

அவனிடம் இது பற்றி ஏன் பேசினோம் என்று தோன்ற, உடனே தன்னையே கடிந்து கொண்டாள்.

## 22

மதியம் சாப்பிட்டு விட்டு ஓய்வெடுத்தபோது, மனம் முழுவதும் அவனுடைய கேலிக்கையும், ஒற்றைக் கண் சிமிட்டலுமே வலம் வந்தன...



புதிதாய் காதல் கொண்ட மனது, தத்தளித்துத் தவித்தது.

மனதிற்குள் அவனைப் புக அனுமதித்திருந்த போதும், அவனுடைய எதிர்பார்ப்பும் வேட்கையும், சிறு சஞ்சலத்தையும் கலக்கத்தையுமே வரவழைத்தன.

மாலையில், அவன் வந்ததும் டிபனையும் காபியையும் கொடுத்தவள், பிறகு மாடிக்கே வரவில்லை.

இரவு சமையலுக்கு உதவிவிட்டு ஹாலுக்கு வந்த போது, அங்கு சாரங்கன் மட்டும் அமர்ந்திருந்தார்.

டி.வி. ஓடிக் கொண்டிருந்தது.

மகேஷ்வரனையும், மீனாட்சியையும் எதிர்பார்த்து வந்தவளுக்கு அவருடன் என்ன பேசுவதென்று புரியவில்லை.

அவளைக் கண்டதும், உற்சாகத்துடன் எழுந்து வந்தார் சாரங்கன்.

''அநந்திதா! ரொம்ப தேங்க்ஸ் மா! நீ முகேஷ் கிட்டே சொன்னியா? இப்பதான் அவன் வந்து மச்சானை அழைச்சிட்டுப் போறான்... அவங்களே பேசி ஒரு முடிவெடுக்கட்டும்... அப்புறம் பகவான் விட்ட வழி!''

சிறு முறுவலுடன் தலையசைத்தவளுக்கு, ஏனோ வெளிக் காற்றை சுவாசிக்க வேண்டும் போல் ஒரு உணர்வு!

''நீங்க டி.வி. பாருங்க.... நான் தோட்டத்துக்குப் போயிட்டு வந்திடறேன்'' என்றபடி வெளியே வந்தாள்.

அந்தி நேர வானம்... கரு நீலமாய் மாறத் துவங்கியிருக்க, மெதுவாக விழி திறக்க ஆரம்பித்திருந்தன விண்மீன்கள்.

கார் கால மேகத்தின் ஊடலாய்... அவள் மனமும் மூட்டத்துடனிருந்தது.

இதுவரை, அவள் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகள், நீரில் மிதக்கும் பனிக்கட்டியாய் மெல்ல மூழ்கி மேலெழும்பின.

ஞாபகங்கள் ஆழ்கடலாய் புதைந்திருந்தாலும், ஒவ்வொரு முறை மூழ்கும்போதும், ஒருவித வேதனையையும், சிறு பரவசத்தையும் அறிமுகப்படுத்தின.

அந்த நேரம், காற்றின் தாக்குதலில், சுருதி லயத்தோடு உதிர ஆரம்பித்த கொன்றை மலர்கள்... அவளை வருடி மண் மீது விழுந்தன.

மெதுவாக நிமிர்ந்து பார்த்தாள்... இப்போதெல்லாம் மரங்களைப் பார்த்தால் பரிதாபமும் இரக்க உணர்வுமே வருவதாய்!

என்றாவது ஒரு நாள்... இவை வெட்டுப்பட்டு, கதவாகப் போகிறதா கட்டிலாகப் போகிறதாவென்ற எண்ணம் ஜனித்து, சிறு விரக்தியைத் தந்தது.

சிறு வயதில்... பயணிப்பவர் வெரென்று அறியாமலே, ஓடி மறையும் ரயிலுக்காக, உற்சாகமாகக் கையசைத்து சந்தோஷித்த நாட்கள், நினைவுப் படலத்தில் மிதந்தன.

அந்த நாட்கள்தான் எவ்வளவு இனிமையானவையென்று தோன்ற, வளராமல் அந்தப் பருவத்திலேயே இருந்திருக்கக் கூடாதாவென்ற ஏக்கம் வந்தது.

வெகு நேரம், பலத்த யோசனையுடன் தோட்டத்திலிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்திருந்தவளை, ஒரு உறுதியான காலடியோசை கலைத்தது.



நினைவுலகம் கலைந்து நிமிர்ந்தபோது, அங்கு நின்றிருந்தான் அபிமுகேஷ்!

சட்டென்று எழுந்தவளை அமரும்படி சைகை செய்தான்.

''அப்பாகிட்டே பேசிட்டேன்... முடிவெடுக்க வேண்டியது அவங்கதான்! பாப்போம்...'' என்றான் யோசனையுடன்!

அவளுக்குதான் பெரும் தர்ம சங்கடமாய்... ஊசி முனையில் தபஸ் செய்தவளைப் போன்ற ஒரு வித அவஸ்தை உணர்வு!

''என்ன.... சத்தத்தையே காணோம்... நான் கேட்டது கிடைக்கும் இல்லை...?'' கேலியாகக் கேட்டான்.

அவளுக்கு திடுக்கென்று தூக்கிப் போட, அந்த அதிர்வை ஓர விழியால் ரசித்தவன், தோளைக் குலுக்கியபடி உள்ளே சென்று விட்டான்.

இருதலைக் கொள்ளி எறும்பாய் தவித்துப் போனவள், மெதுவாக வீட்டிற்குள் நுழைந்தபோது, ஓடி வந்து அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டாள், அந்தப் பெண் தவமணி.

''அக்கா! ரொம்ப தேங்க்ஸ்க்கா! மாமா நான் இங்கே இருக்கறதுக்கு சரின்னுட்டாங்க... முகேஷ் அண்ணா சொன்னதாலதான் ஒத்துக்கிட்டதா சொன்னாங்க!

''வேற ஏதாவது போலீஸ் ப்ரச்னை அது இதுன்னு வந்தா தான் பாத்துக்கறதா முகேஷ் அண்ணா சொல்லிட்டாங்களாம்... எல்லாம் உங்களாலதான்னு முருகன் சொன்னாரு... தேங்க்ஸ்க்கா!'' என்றாள் கலங்கிய விழிகளுடன்!

"அழக்கூடாது... தைரியமா இருக்கணும்! எல்லாம் நல்ல விதமா முடியும்." என்றவள், மெதுவாக உள்ளே சென்றாள்.

சாரங்கனும், முருகனும், மாற்றி மாற்றி வந்து நன்றியுரைக்க, மீனாட்சிக்கு மருமகளை நினைத்தால், பெருமையாக இருந்தது.

இரவுச் சாப்பாட்டிற்குப் பிறகு, தவமணியை அங்கு ஒப்படைத்து விட்டு சாரங்கனும், முருகனும் கிளம்பி விட்டனர்.

பெரும் தயக்கத்துடன், நந்து தங்களுடைய அறைக்குச் சென்றபோது, முகேஷ் குளியலறையில் இருந்தான்.

'அப்பாடா' என்ற நிம்மதியுடன், ஈஸாய் மெத்தையை விரித்துப் படுத்தவள், அவன் குளியலறைக் கதவைத் திறக்கும் சப்தம் கேட்டதும், உறங்குவது போல் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

பால் டம்ளர் மேசை மேலிருக்க, அவள் அசையாது படுத்திருந்ததைக் கவனித்தவனின் உடல், மௌனச் சிரிப்பில் குலுங்கியது.

அவளுடைய பயமும் தவிப்பும் புரிய, வேண்டுமென்றே அவளைச் சீண்ட வேண்டும் போலத் தோன்றியது.

விழிகள் உதட்டோர மச்சத்தில் தாபத்துடன் படிந்தன.

கிசுகிசுப்பான குரலில், "நந்து... 'பெட்'லே உன் பக்கத்துல ஒரு சின்ன பூரான்..." கண்ணோரங்கள் இடுங்கக் கூறினான்.



"அய்யோ...!"வென்று அலறியபடி எழுந்தவளைக் கண்டதும், குலுங்கிக் குலுங்கிச் சிரிக்க ஆரம்பித்தான் அவன்.

தன்னுடைய நடிப்பைப் புரிந்து கொண்டு, அவன் பயமுறுத்தியது புரிய... உடலுடன் சுருங்கியது, இதயம்!

அவளுடைய முகவாட்டத்தைக் கண்டவுடன், "ஏய்... ஜஸ்ட் ஃபார் ஃபன்! நீ என்னை ஏமாத்திட்டே! நான் அதுக்கு பதிலா உன்னைக் கொஞ்சம் பயமுறுத்தினேன்!"

விழிகள் மின்னலாய் ஒளிரக் கூறினான்.

உடனே தெளிந்தவள், பெரும் தயக்கத்துடன், "தேங்க்ஸ்" என்றாள்.

"ம்... என்ன? சரியாவே கேக்கலை... உனக்குள்ளேயே பேசிக்கிட்டா எனக்கு எப்படிப் புரியும்?" நமட்டுச் சிரிப்புடன் கேட்டான்.

செல்லக் கோபத்துடன் நிமிர்ந்தவள், "ம்... தேங்க்ஸ்ன்னு சொன்னேன்!" சிறு கேலியுடன் கூறினாள்.

"ஓ! ஆனா, நான் இதை ஒத்துக்க மாட்டேன்... நான் கேட்டதே வேற! நீ என்னை ஏமாத்த முடியாது... என்னிக்கிருந்தாலும் என் கடனைத் திருப்பித் தந்துதான் ஆகணும்... தெரியுமா?"

அவன் குரலே அவளை விதிர்க்கச் செய்ய, உடனே எழுந்து குளியலறைக்குள் தஞ்சம் புகுந்தாள்.

கதவை சாத்தியதும் கண்மூடிச் சாய்ந்தவளின் இதயம், காற்றிலாடும் பட்டமாய் படபடக்க, அவள் அமைதியடைய சிறிது நேரம் ஆனது.

பிறகு வியர்த்திருந்த முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டு அவள் வெளியே வந்தபோது, அவன் படுக் கையில் படுத்தபடி ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான்.

வில்லிலிருந்து எய்த அம்பாய் நேராகச் சென்று, தன்னுடைய படுக்கையில் படுத்துக் கொண்டாள் அவள்.

ஓரக்கண்ணால் அவளையே பார்த்திருந்தவனின் முகத்தில், சிறு யோசனையும், ஊடுருவும் கேள்விகளும்!

அன்றிரவு முழுவதும், அவளால் சரியாகவே உறங்க முடியவில்லை!

பெரும் அலைப்புறுதலுடன் தவித்தவள், நடு இரவில் தான் உறங்க ஆரம்பித்தாள்.

## 23

காலையில், அவள் கண் விழித்தபோது அவன் நல்ல வேளையாக அறையில் இல்லை.

குளித்து விட்டுக் கீழே வந்தால், அவளுக்காகவே காத்திருந்ததைப் போல், ஓடி வந்து ஒட்டிக் கொண்டாள் தவமணி!

பிறகு அவளுடன் பொழுது இயல்பாகச் செல்ல, முகேஷின் அருகாமையைத் தவிர்ப்பதிலேயே குறியாக இருந்தாள்.

அவனும், அவளைப் புரிந்தாற்போல் பேக்டரிக்குக் கிளம்பி விட்டான்.



அன்று முழுவதும், அவளுடனே சுற்றியபடி வளவளத்துக் கொண்டிருந்த தவமணியைப் பார்த்தால், ஏனோ கௌரியின் நினைவுதான் வந்தது.

இருவரும்... அன்று மாலையில் தோட்டத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தபோதுதான், தங்களுடைய காதலைப் பற்றிக் கூற ஆரம்பித்தாள் அவள்.

''நானும், முருகனும் ஒருத்தரை ஒருத்தர் உயிரா விரும்பறோம்க்கா! எங்கப்பா என்ன... வேற யார் வந் தாலும், என்னை அவர் கிட்டேருந்து பிரிக்க முடியாது!

''இந்த ஒரு வாரம் போகட்டும். அதுக்கப்புறம், எனக் காகவே கஷ்டப்பட்ட முருகனுக்கும் எனக்கும் நல்ல காலம் தான்! அவரை உயிராப் பாத்துப்பேன்'' உணர்ச்சிப் பெருக்குடன் கூறினாள்.

அவளுடைய காதல் ஜெயிக்க வேண்டுமென்று, நந்துவின் மனதிலும் புதிதாய் ஒரு உத்வேகம் வந்தது.

ஆனால், இது காதலுக்கான வயதில்லையே என்ற தவிப்பும் வருவதாய்!

ஒரு வாரம் ஓடிச் செல்ல, இங்கிருந்த நாட்களில், தவமணி அவளுக்கு ஒரு இனிய தோழியாகிப் போனாள்.

அவளுடைய அப்பாவின் புகாரின் பேரில், முரு கனைப் போலீசார் கைது செய்திருப்பதாக, சாரங்கன் அன்று காலையில் தான் போன் செய்திருந்தார்.

இன்று மாலையே, அவளை வந்து அழைத்துச் செல்வ தாகவும் கூறினார்.

மாலையில் அவள் கண்ணீருடன் விடைபெற்று எல் லோருக்கும் நன்றி கூறிக் கிளம்பியபோது, நந்துவிற்குத் தான் எதுவோ அடைப்பது போல்!

இதயம் கனத்துவிட, அன்றிரவு உறக்கம் வராமல் சிட்அவுட்டில் அமர்ந்து வானத்தைப் பார்த்தபோது, அங்கு நிலவும் அவளைப் போலவே தனித்திருந்தது.

ஒரு கரிய நிழல் அவள் மேல் விழ, பதறித் திரும்பியபோது, அங்கு முகேஷ் வறண்ட முறுவலுடன் நின்றிருந்தான்.

"ஹும்! அந்தப் பொண்ணு வந்து ஒரு வாரம் தான் ஆச்சு! அதுக்குள்ளே அவ உன்னை இந்த அளவு பாதிச்சிருக்கா... இல்லை?" பெரும் விரக்தியுடன் வந்தது அவன் குரல்!

அவள் எந்த பதிலும் கூறாமல் அமைதியாக இருக்கவே, விருட்டென்று விலகிப் போனான் முகேஷ்.

ஆனால், மறுநாளே அவளுக்கு அதிர்ச்சி தரும் செய்தியாய், தவமணி முருகனை மறுத்து விட்டு, தன் தந்தையுடனே சென்று விட்டதை, சாரங்கனே போன் செய்து பதட்டத்துடன் கூறினார்.

பதறிப் போனவளிடம், "என்னன்னே தெரியலைம்மா! அந்தப் பொண்ணு வரப்பல்லாம் நல்லாத்தான் இருந்தது... போலீஸ் ஸ்டேஷன்லே தான் வெச்சு விசாரிச்சாங்க...

"அவங்க அப்பாவும் அம்மாவும் தனியா அழைச்சிட்டுப் போய் ரொம்ப நேரம் பேசினாங்க... என்ன சொன்னாங்களோ தெரியலை... அதிலேருந்து வித்தியாசமாப் பேச ஆரம்பிச்சிடுச்சி!

"தன் அப்பா அம்மா சொல்றவனைத் தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு சொல்லிட்டு முருகன் மேல போட்-



டிருந்த கேஸை வாபஸ் வாங்கிட்டு திரும்பிப் பாக்காம அவங்களோடவே போயிடுச்சி!

"பாவம்... முருகன்தான் உடைஞ்சு போயிட்டான்! நாம பட்ட கஷ்டமெல்லாம் வீணாயிடுச்சேன்னு அழுவறான்... என்ன செய்யறது... நம்ம தலையெழுத்து! மீனா இருந்தாக் குடும்மா!" என்றார்.

ரிசீவரைக் கொடுத்து விட்டு தங்கள் அறைக்கு வந்த போது, அவளால் எதையுமே ஜீரணிக்க முடியவில்லை.

ஒரு மாதம் ஓருயிர் ஈருடலாய் வாழ்ந்து விட்டு... இங்கு வந்து தங்கியிருந்த ஒரு வாரத்திலும் அவனைப் பிரிய மாட்டேனென்று சத்தியம் செய்தவளால், ஒரே நாளில் அவனை உதறி விட்டுச் செல்ல எப்படி முடிந்ததென்ற கேள்வி புதிராய்!

முருகனை நினைத்தால் பரிதாபமாய்... தவமணியின் இந்த துரோகத்தை தன்னாலேயே மன்னிக்க முடியாதெனும்போது அவனால் எப்படி முடியுமென்று பரிதாபப் பட்டது மனது!

சிலீரென்று முகத்தில் யாரோ அறைந்தாற் போல் ஒரு உணர்வுடன் நிமிர்ந்தவளுக்குள், ஒரு ஆண் பாதிக்கப் பட்டிருப்பதும்... அதற்கு தன்னைப் போல் ஒரு பெண் காரணமாய் இருப்பதும், புதிதாய்!

முதன் முதலாகத் தான் ஒரு ஆணிற்காகப் பரிதாபப் பட்டதையும், பரிந்து வந்ததையும் உணர்ந்த போதுதான், தவறுகளுக்கு பெண்களும் விதிவிலக்கில்லை என்பது புரிவதாய்!

அறையில் விளக்கே போடாமல் அவள் யோசித்தபடி அமர்ந்திருக்க, திடீரென்று பாய்ந்த ஒளி வெள்ளம் அவளை விதிர்க்கச் செய்தது.

நிமிர்ந்தால் முகத்தில் எந்தவித உணர்ச்சியுமின்றி... அவளையே ஏறிட்டபடி அங்கு நின்றிருந்தான் முகேஷ்.

குற்றவுணர்ச்சியுடன் எழுந்தவளையே கூர்ந்தவன், "ஹூம்! யாரை நம்பலாமோ... அவங்களை சிலர் நம்பறதில்லை! தகுதியில்லாதவங்களைத் தான் பலர் நம்பறாங்க... அவங்களுக்காக வருத்தமும் படறாங்க... சே!" சலித்தபடிக் குளியலறைக்குச் சென்றான்.

வாழ்க்கையில் தவறு செய்வது ஆண்களென்றும், பாதிக்கப்படுவது பெண்களென்றும் ஒரு மாய உணர்விலிருந்தவள், மெல்ல அதிலிருந்து விடுபடும் வேளையில், அவனுடைய வார்த்தைகள் முட்களாய் கிழித்தன.

அதன் பிறகு அவனும் எதுவுமே பேசாததால், மௌனமாக இறுக்கத்துடனே படுத்தவள், இரவு முழுவதும் கண்ணீரில் கரைந்தாள்.

ஏதோ, தானே தவறு செய்தது போல்... தவமணியின் துரோகச் செயல் அவளை உறுத்த... உடைந்து போனது உள்ளம்!

தன்னுடைய மனதை மெல்ல மெல்ல உணர ஆரம்பித்தவளின் உணர்வுகள்... மழைக்கு ஏங்கிய தளிராய் அவனுக்காக ஏங்கின.

மெல்ல மெல்லத் தன் மனதிற்குள் அவன் நுழைந்து விட்டதை இதயம் ஏக்கத்துடன் அறிவித்தது.



# 24

அநந்திதாவின் மனதில், நேச விதை ஆழமாய் விழுந்து துளிர் விட்டு, இப்போதெல்லாம் அதில் காதல் மலர்ந்து மணம் பரப்ப ஆரம்பித்திருந்தது.

தனக்குள், முத்தை மூடி வைத்துப் பாதுகாக்கும் சிப்பியைப் போல், அவள் மனதில் பொக்கிஷமாய் அவன் நினைவுகளை சேமிக்க ஆரம்பித்து, பத்து நாட்களாகி விட்டன.

மனம் தயக்கமெனும் பனிப் போர்வைக்குள் தத்தளிக்க... ஆனால் எதையுமே வெளிப்படையாகப் பேச முடியவில்லை.

முகேஷும், அவள் மனதில் வந்திருந்த மாற்றத்தை உணர்ந்ததாகவே தெரியவில்லை.

அந்த வாரத்தில் ஒருநாள், காலை ஐந்தரை மணிக்கே போன் ஒலித்து நந்துவை உசுப்பி எழுப்பியது.

ஆழ்ந்த உறக்கத்திலிருந்து சோம்பலுடன் விழித்தவள், மெதுவாக எழுந்து சென்று ரிசீவரை எடுத்தாள்.

தூக்கக் கலக்கத்துடன் அவள், "ஹலோ...!" என்றபோது மறுமுனையில் கேட்ட அம்மாவின் குரல், உணர்வுகளைப் புதுப்பித்தன.

"அம்மா..." அவள் ஆச்சர்யத்துடன் முணுமுணுத்தாள்.

"ஹாப்பி பர்த்டே நந்தும்மா...! இப்பதான் எழுந்திரிச்சியாடா...?" என்றவரின் குரலில், தன் பிறந்த நாள் இன்று தான் என்று, அப்போதுதான் நினைவு வந்தது.

''தேங்க்யூம்மா... நானே மறந்து போயிட்டேன். நீங்க விஷ் பண்ணின உடனே தான் பர்த்டேங்கறதே ஞாபகம் வருது!'' குதூகலமான தொனியுடன் உரைத்தாள்.

தன்னை இந்த உலகத்துக்கு அறிமுகப்படுத்திய அம்மாவின் மேல், பாசம் ஊற்றாய் சுரந்து, அவரைப் பார்க்க வேண்டும் போல் மனதில் ஒரு ஏக்கம் படர்ந்தது.

போன் ஒலித்ததில் விழிக்க ஆரம்பித்திருந்த முகேஷின் செவிகள், அவள் பேச்சில் உடனே பதிந்தன.

காயத்ரி அவளிடம் தன் தோழியிடம் புடவை வாங்கி அனுப்பி இருப்பதாகவும், காலையில் கொண்டு வந்து தருவாள் என்றும் கூறினார்.

''தேங்க்யூம்மா...!''

ரிசீவரை வைத்து விட்டுத் திரும்பும்போது, சப்தமின்றிப் பின்னால் வந்து நின்றிருந்தான் முகேஷ்.

அவன் காதுகளில் ''ஹாப்பி பர்த்டே நந்து...!'' என்றான் கிசுகிசுப்பாக.

உடனே பதறித் திரும்பியவளைத் தாங்கிப் பிடித்து ''என்கிட்ட ஏன் சொல்லவே இல்லை...?'' ஆதங்கத்துடன் கேட்டான்.

''எனக்கே மறந்து போச்சு... இப்ப அம்மா பேசின உடனேதான் ஞாபகமே வந்தது.''

மெலிதாக முறுவலித்தாள் நந்து.

''ம்... இன்னிக்கு எங்க போகலாம் சொல்லு! ஆனா மதுரைக்குப் போகணும்னு மட்டும் கேட்டுடாதே... ஒரு மீட்டிங் இருக்கு! ஈவினிங் எங்கே போகலாம்?''



உற்சாகமாகக் கேட்டவனிடம், ஏனோ மறுக்கத் தோன்றவில்லை.

''கோவிலுக்குப் போகலாங்க...'' என்றாள் ஆர்வத்துடன்.

''ஓகே...'' என்று கூறிவிட்டு ஒரு கணம் இமைக்காமல் அவளையே பார்த்தான் அவன்.

என்னவென்று கேள்வியாக உயர்ந்த நந்துவின் பார்வையில், அவன் கண்கள் எதையோ சொல்லத் துடிப்பது போன்ற ஒரு பாவனையை ஏற்படுத்தின.

இதயம்... மெல்லச் சரிந்தது அவனிடம்!

தன் மனதை அவனுக்கு எப்படிப் புரிய வைப்பதென்ற சஞ்சலம் பெரிதாய்!

''என்ன அப்படிப் பாக்கறீங்க... புதுசா?'' ஆச்சர்யம் கசிந்தது அவள் குரலில்.

''ம்... புதுசுதான்! இன்னிக்குத் தானே புதுசா பிறந்திருக்கே! இந்த பர்த் டே பேபிக்கு, இப்ப உடனே ஒரு பரிசு கொடுக்கலாமான்னு பாக்கறேன்... தரலாமா?''

அவன் கேட்டவுடன் மெல்லத் தலையசைத்தாள் நந்து.

''வித் யுவர் பர்மிஷன்...!'' என்றபடி மெல்ல மிக அருகில் வந்தவன், அவள் முகத்தை இரு கைகளால் ஏந்தி, முன் நெற்றியில் மென்மையாய் தன் உதடுகளைப் பதித்தான்.''

தென்றலினும் இனிதாய், சிறகாய் சாமரம் வீசிச் சென்றது, அந்த மென்தொடுகை... அவளுக்குள்!

லட்சம் மின்னல் உடலில் பாய, உள்ளம் முழுவதும் ஏதோ பரவசமாய்...!

ஒரு கோடி கொடுத்தாலும் வராத நிறைவு, அந்த மெலிதான நேசத்தின் வெளிப்பாட்டில் வந்தது!

அவளுக்குத்தான், தன்னை சுதாரித்துக் கொள்ள, சிறிது நேரம் தேவைப்பட்டது.

அவளையே கவனித்துக் கொண்டிருந்த முகேஷுக்கோ, அவள் முகம்... பல புரியாத செய்திகளை வாசிப்பதாய்!

அவள் வேகமாகத் திரும்பி, குளியலறைக்குள் சென்று விட, திரும்பவும் படுத்துக் கொண்டான் முகேஷ்.

இருவரின் மனமும்... ஒரே நினைவில்!

குளித்து விட்டுத் தன்னிடமிருந்த வேறு ஒரு புதுப் புடவையை அணிந்து தயாராகி அறைக்குள் வந்தால், முகேஷை அங்கு காணவில்லை.

கீழே இறங்கிச் சென்றபோது, மஹேஸ்வரன் அவளை வாழ்த்தினார்.

"ஏம்மா... இன்னிக்கு தான் உன் பர்த்டேன்னு எங்ககிட்ட சொல்லவே இல்லையே?" என்றார்.

"எனக்கே ஞாபகம் இல்லை மாமா!" என்றபோது மீனாட்சியும் வந்து வாழ்த்தவும், இருவரையும் நிற்க வைத்து நமஸ்கரித்தவள், பூஜை அறைக்குச் சென்று விளக்கேற்றினாள்.

"எனக்கு அன்பானவர்களை அளித்திருக்கிறாய்... இது மாறிவிடாமல் இருக்க வேண்டும்" என்ற மௌன வேண்டுதல், மனதின் கோரிக்கையாய்...!

முதன் முதலில், அவர்களைத் தன் உறவுகளாக உளமார ஏற்றுக் கொண்டது இதயம்!



சாமி கும்பிட்டு விட்டு மலர்ச்சியுடன் வெளியே வந்தவளை, ஓரக்கண்ணால் பேப்பர் படிப்பது போன்ற பாவனையுடன் பார்த்த முகேஷுக்கு, அவள் சீக்கிரமே மாறி விடுவாள் என்ற எண்ணம், உறுதியாய் மனதில் நிலை பெற்றது.

## 25

காலையில், அம்மாவின் தோழி வந்திருந்தார்.

அவர் மதுரையிலிருந்து காயத்ரி கொடுத்தனுப்பிய பார்சலைக் கொடுத்துவிட்டு பிறந்த நாள் வாழ்த்துச் சொன்னார்.

அவருக்கு டிபன் கொடுத்து அனுப்பியவள், பார்சலைப் பிரித்தாள்.

உள்ளே அவளுக்கு மிகவும் பிடித்த வெண்பட்டுப் புடவை இருக்க, முகேஷ் அதைப் பார்த்து விட்டு மிகவும் நன்றாக இருக்கிறதென்று பாராட்டினான்.

பிறகு அவளிடம் குனிந்தவன், "என் புத்திசாலி மனைவியோட அழகிய உதடுகள், 'முத்தம்'கிற வார்த்தையை மட்டும் உச்சரிக்க மறந்துடுதே... அதை நினைச்சா தான் கஷ்டமா இருக்கு." குறும்புடன் கூறினான்.

பெரும் தவிப்புடன், வீணையின் தந்தியாய் அதிர்ந்தது தேகம்!

மதிய விருந்தை தடபுடலாக ஏற்பாடு செய்திருந்தார் மீனாட்சி.

லஞ்சுக்கு வீட்டுக்கு வந்த முகேஷ் அவளிடம் ஒரு நகை டப்பாவைக் கொடுத்தான்.

அதை என்னவென்று திறந்து பார்த்தால், அழகான முத்து செட் ஒன்று அதில் இருந்தது.

முத்துக்கள் என்றால் எப்போதுமே அவளுக்கு மிகவும் பிடிக்கும் என்பதால், மகிழ்ச்சியுடன் நிமிர்ந்து 'ரொம்பத் தேங்க்ஸ்' என்றாள்.

''வெல்கம்...!'' என்றவனின் பார்வை அவள் உதட்டு மச்சத்திலேயே இருந்தது.

'அந்த அழகு மச்சத்தை ஸ்பரிசிக்கும் தருணத்தை... என்று நீ எனக்குப் பரிசளிக்கப் போகிறாய்...?'

செல்லமாய் கேள்வி கேட்டது அவன் மனது!

* * *

அன்று மாலை, அம்மா வாங்கித் தந்த புடவையும், அவன் வாங்கித் தந்த முத்து செட்டையும் அணிந்து, அவனுக்காகக் காத்திருந்தாள் நந்து.

அன்று சீக்கிரமே வந்து விட்ட முகேஷுக்கு அவளைப் பார்த்ததுமே, இதயம் ஒரு முறை தடம் புரண்டு துடிக்க, விழிகளாலேயே அவளைப் படம் பிடித்தான்.

இருவரும் அபிமுகேஷ்வர் ஆலயத்துக்குச் சென்று சாமி கும்பிட்டு விட்டு அமர்ந்தனர்.

'ஆலயம்' என்றால் ஆன்மா லயிக்கும் இடம் என்று எப்போதோ படித்தது நினைவு வர, அது மிகவும் சரியென்று தோன்றியது.

மனம் லேசாகி விட, புதிதாய் காதல் வந்த மனது சிறகுகள் விரித்துப் பறந்தது.



அங்கிருந்து ஹோட்டலுக்குச் சென்று சாப்பிட்டு முடித்து விட்டு வெளியில் வந்தனர்.

''நந்து...'' என்று யாரோ அழைப்பது கேட்டு, அவள் திகைத்துத் திரும்பினாள்.

எதிரே, அவளுடன் படித்த தோழி சுமதியின் அண்ணன் சுந்தர், நின்றிருந்தான்.

''என்ன நந்து... கல்யாணம் ஆயிடுச்சின்னு கேள்விப்பட்டேன். நல்லா வசதியாதான் இருக்கே போலருக்கு... நாம ரெண்டு பேரும் காதலிச்ச விஷயத்தை சார் கிட்ட சொல்லிட்டியா?''

ஒரு மாதிரிக் குரலில் அவன் கேட்டபோது விதிர்த்துப் போய் நிமிர்ந்தாள் அநந்திதா.

உடலெங்கும், திராவகம் பட்டாற் போல் அக்னியாய் தகித்தது.

விழிகளில் சீற்றத்துடன், ''ஏய்... சுந்தர்! என்ன பேசறே?'' என்றபோது, அலட்சியமாகக் கையமர்த்தினான் அவன்.

''என்னம்மா ரொம்ப தான் கோபப்படறே? கௌரி, நீ. நான் எல்லாரும் ஒண்ணா சினிமாவுக்குப் போனது... நான் உன்னையே சுத்திச் சுத்தி வந்தது... அதெல்லாம் மறந்து போயிடுச்சா?'' என்றான் விஷமத்தனத்துடன்.

அவள் விழிகளிலிருந்து, கண்ணீர் சரம் கோர்த்து இறங்கின.

''பாவி... பொய்யாடா சொல்றே? நாங்க ரெண்டு பேரும் சினிமாவுக்குப் போனப்ப, நீயும் அங்க வந்து உன் ஃப்ரெண்ட்ஸோட கிண்டல் பண்ண ஆரம்பிச்சி, நாங்க

பாதியிலேயே எழுந்து போனதை இப்படி மாத்திச் சொல் றியா?'' பெரும் பரிதவிப்பு தெரிந்தது அவள் குரலில்.

வேகமாக அவளருகில் வந்து அவளை, அணைத்தான் முகேஷ்.

''ஏய்... இப்ப நீயாப் போறியா...? இல்லை... நான் போக வச்சா, அப்புறம் நீ பத்து நாளைக்கு எழுந்திரிக்க முடியாது... எது வசதி?'' என்றபோது அவன் குரலில் தெரிந்த சினத்தைக் கண்டு வேகமாகத் திரும்பிச் சென்றான் சுந்தர்.

அவள் தோளைப் பற்றி அணைத்தபடி அழைத்துச் சென்று காரில் அமர வைத்து விட்டுத் தானும் ஏறினான் முகேஷ்.

''நந்து... முதல்லே கண்ணைத் துடைச்சிக்க...''

மென்மையாக அவன் கூறியபோது பயத்துடன் அவனை ஏறிட்டாள் அவள்.

''நான்... நீங்க என்னை...'' முடிக்க முடியாமல் திணறினாள்.

''அவன் சொன்னா, நான் நம்பிடுவேனா நந்து!'' முகேஷ் கேட்டபோது பிரமிப்புடன் நிமிர்ந்தாள்.

''உனக்குத்தான் ஆண்களைலே பிடிக்காதுன்னும், கல்யாணம் முடிஞ்சப்புறமும் என்கிட்ட எப்படிப் பழகு றேன்னும் எனக்கு நல்லாவே தெரியும்.

''அவன் ஏதோ ஒரு காரணத்துக்காக வேணும்னே பொய் சொல்றான்னு தெரிஞ்சது... சரி போகட்டும்னு விட்டுட்டேன்... எனக்கு உன்னைப் பத்தி நல்லாத்



தெரியும் நந்து!'' என்றபோது அவள் விழிகளில் கண்ணீர் மல்கியது.

''ஒரு நிமிஷம், நீங்க என்னைத் தப்பா நினைச்சிடு வீங்களோன்னு பயந்துட்டேன்... காலேஜ் படிக்கிறப்ப, அவன் என்னையே சுத்திச் சுத்தி வந்து தன் காதலைச் சொன்னான்.

''உடனே முடியாதுன்னு சொல்லி சுமதிகிட்ட நான் வார்ன் பண்ணினேன்...

''ஒரு நாள் நானும் கௌரியும் சினிமாவுக்குப் போயிருந் தப்போ, எதேச்சையா அவனும் ஃப்ரெண்ட்ஸோட வந்து...''

அவள் முடிக்கும் முன்பே ஒற்றை விரலால் அவள் உதடுகளை மூடினான் முகேஷ்.

''நீ எந்த விளக்கமும் சொல்ல வேணாம் நந்து! நான் உன்னைத் தப்பா நினைச்சேன்னா, அது என்னையே நான் தப்பா நினைச்சிக்கறதுக்கு சமம்!

''அவன் பேசும்போதே, அந்தக் கண்ணுலத் தெரிஞ்ச திருட்டுத் தனமே அவன் தப்பானவன்னு எனக்குப் புரிய வச்சிடுச்சி.''

அவன் முடித்தபோது, பிரமிப்புடன் நிமிர்ந்தாள் நந்து.

தடுமாற்றத்துடன், ''அப்ப நீங்க...!'' என்றாள்.

''நான் எந்தக் காலத்துலயும் உன்னைத் தப்பா நினைக்க மாட்டேன் நந்து! ஜூலியஸ் சீசரோட மனைவி சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவளோ என்னவோ... ஆனா என் நந்து ரொம்ப நல்லவன்னு எனக்குத் தெரியும்'' என்றான் முகேஷ் மென்மையான குரலில்.

உடனே, தன் உயிரையே யாரோ பிடுங்கி வீசியது போன்ற ஒரு உயிர்வலி, அவள் கண்களில்...!

மனசு இவ்வளவு அழகாக இருக்கும் ஒருவனைத் தான் துணையாக அடைந்ததை நினைத்தால், இது தனக்கு அளிக்கப்பட்ட பெரும் வரமாய்...!

விழிகளில் பிரமிப்புடன், "என் மேல நீங்க எவ்வளவு நம்பிக்கை வச்சிருக்கீங்க... இதுல, ஒரு பர்சன்ட் கூட நான் உங்க மேலே' வைக்கலையேன்னு நினைச்சா, ரொம்ப கில்டியா இருக்கு... சாரி...!" என்றாள் உணர்ச்சிகள் நிறைந்த குரலில்... கண்ணீர் கசிய!

ஒரு நொடி அவள் கையைப் பிடித்து இதமாக அழுத்தியவன், திரும்பி காரை ஸ்டார்ட் செய்தான்.

* * *

அன்றிரவு முழுவதும் கண்ணீரில் கரைந்தாள் நந்து. மனமோ, இருதலைக் கொள்ளி எறும்பாய்...!

ஒரு கணம் கையில் கிடைத்த சொர்க்கத்தை ஏற்றுக் கொள்ள மனம் வர மறுத்தது... மறுகணம் அதை தவற விட்டு விடுவோமோ என்ற பயம் அவளை விதிர்க்கச் செய்தது.

காதலின் ரசவாதம் அவள் மனதை மாற்ற ஆரம்பிக்க, மனம் தவித்துத் துடித்தது.

ஆனாலும் அனிதாவின் இறப்பு மட்டும் மறக்க முடியாமல், நெஞ்சத்தின் ஓரம், சிறு நெருஞ்சி முள்ளாய் உறுத்தியது.

ஆனாலும் அதையும் மீறிக் கவிதை அரும்பியது.



நான்...
உன்னை
உனக்காகவே...
நேசிக்கிறேன்!
உன்னிடம்
பகரமுடியாமல்...
தயக்கமெனும்
பனிப் போர்வைக்குள்...
தத்தளிக்கிறேன்!
இந்த
மொழி புரியா...
மௌனக் கவிதையின்
பூரணத்துவத்தை...
படிக்க வார்த்தையின்றி
தவிக்கிறேன்!
உன்
நிஜத்தை நேசித்து...
உனக்காகவே
காத்திருக்கிறேன்!
இனி...
நீயின்றி நான்...
உயிர்க் கூடின்றி
ஒலிச் சிறகை மட்டுமே
விரிக்கும்
பாடற்பறவை!

# 26

மறுநாள் காலையில் சிவந்திருந்த முகம் சூடேற ஆரம்பிக்க, எழுந்து நடக்கவே முடியாத அளவுக்கு நந்துவுக்குக் காய்ச்சல் அதிகமாகியது.

மனதுடன் சேர்ந்து உடலும் சோர்ந்து போக, அப்படியே சுருண்டு படுத்து விட்டாள்.

காலையில் கிளம்பி தொழிற்சாலைக்குச் சென்ற முகேஷ், அவளைப் பற்றி மீனாட்சி போன் செய்த உடன், மதியமே கிளம்பி வந்து விட்டான்.

டாக்டர் வந்து பார்த்து விட்டு, எல்லா டெஸ்ட்டும் செய்யும்படிக் கூறி, மாத்திரைகளும் எழுதிக் கொடுத்தார்.

மறுநாள் காய்ச்சல் அதிகமாகி, நந்துவால் ஒன்றுமே சாப்பிட முடியாமல் போக மெலிதாக அரற்றத் தொடங்கினாள்.

இரண்டு நாட்களில் 'டைபாய்ட்' என்று ரிசல்ட் வர, அவளை கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படிக் கூறினார், டாக்டர்.

அலுவலக வேலைகளை வீட்டுக்கே கொண்டு வந்து செய்ய ஆரம்பித்த முகேஷ், அவளைப் பொறுமையாக கவனித்துக் கொண்டான்.

காயத்ரிக்கு வருடக் கணக்கு முடியும் நேரமென்பதால் உடனே வரமுடியவில்லை.



மீனாட்சி, அடிக்கடி வந்து பார்த்துக் கொண்டு, கஞ்சி, ஜூஸ், வெஜிடபிள் சூப் எல்லாம் செய்து தந்தார்.

அவளுக்கு நேரத்துக்கு மாத்திரைகளைக் கொடுப்பது, காய்ச்சல் அதிகமானால் யூடிகோலனின் துணியை நனைத்து நெற்றியில் பற்றுப் போடுவது, காய்ச்சல் வேகத்தில் அரற்றும்போது, அவள் கையைப் பிடித்துக் கொண்டு துணையாய் அமர்ந்திருப்பது, என்று எல்லா வற்றையும் அவனே கவனித்துக் கொண்டான்.

எப்போதும் போல், அன்றும் அவளருகில் வந்தவன், "ஆ... காட்டு!" என்று கூறிவிட்டு தெர்மா மீட்டரை நாக்குக்கு அடியில் வைத்துவிட்டு, வாட்சில் நேரத்தைப் பார்த்தான்.

காய்ச்சல் அதிகமிருந்ததால் மூன்று மணி நேரத்துக்கு ஒரு முறை மருந்தைக் கொடுத்துக் கொண்டே அருகில் இருந்தான்.

மீனாட்சியும் அதிக நேரம் அவளுடனே இருக்க, அவளுக்குதான் தர்ம சங்கடமும், குற்றவுணர்வும் பாடாய்ப் படுத்துவதாய்!

தன்னுடன் அன்பாய் பழகி இணைந்து வாழாத தன்னை, இவன் எப்படி கவனித்துக் கொள்கிறான் என்ற எண்ணத்தில் இதயத்தின் கண்ணீர் விழிகளின் வழியே கசிந்தது.

மனம் அவனைப் பற்றியே சிந்தனை வலை பின்ன, கண்கள் மூடி இருந்தாலும், உணர்வுகள் மட்டும் விழித்திருந்தன.

விழித்தவுடன், பார்வை அவன் செல்லுமிடமெல்லாம் பின் தொடர்ந்தது.

அவன் மனம் போகும் வழியை அவள் விழிகள் தொடர, அவனுடைய நெஞ்சம் போகும் போக்கை அவள் அறியவில்லை.

'கருமமே கண்ணாக' என்பது போல், அவளுக்கு எல்லா விதமான உதவியும் செய்து கொண்டிருந்தான்.

இரவிலும், கம்பெனி ஃபைல்களையும், கணக்கு விபரங்களையும் டேபிள் லேம்ப் வெளிச்சத்தில் சரி பார்ப்பவன், அவள் உறக்கம் கெடாமல் மெதுவாக நடந்து வந்து அவளை கவனிப்பான்.

அவள் உறங்குவது போல் கண் மூடி இருந்தாலும், நெற்றியில் பதியும் அவனுடைய விரல்களின் ஸ்பரிசம்... நீங்காத பதிவாய் அவள் நெஞ்சிலும் பதிந்து விடும்.

முகேஷ் தன் நலம் விடுத்து, ஒரு தாயாய் சேவை செய்கையில், இப்போதெல்லாம் நந்துவின் மனம் அவன் மடி தேடி சரணடைய ஆரம்பித்தது.

இரவு, அவன் கோதிவிட்ட தன் கேசத்தில் அவனுடைய விரல்களின் சுவடுகளை தேடி மனம் அலைபாய்வதாய்...!

வாழ்க்கையில் பல நேரங்களில், சில கேள்விகளுக்கு பதில் தாமதமாகத்தான் கிடைக்கிறது!

தான் பலவீனமாக இருப்பதால், அவன் செயல்கள் மனதையும் பலவீனப்படுத்துகிறதோ என்று ஒரு நிமிடம் நினைத்தாலும், இல்லை என்பதை அவன் அன்பும் அனுசரணையும் மெய்ப்படுத்தின.



அன்றிரவும், காயத்ரி போன் செய்திருந்தார்.

பாங்கில் வருடாந்தரக் கணக்கு முடியும் நேரம் என்பதால், உடனே வரமுடியவில்லை என்று மீனாட்சியிடம் வருத்தம் தெரிவித்தார்.

பிறகு முகேஷிடம் பேசியபோது, நந்துவைத் தான் பார்த்துக் கொள்வதாக அவன் கூறவும், இன்னொரு மகனை ஈன்ற பெருமிதம் வந்தது அவருக்குள்!

நந்துவிடமும் நலம் விசாரித்து வைத்தவர், ''கடவுளே... என்னுடைய இந்தக் குழந்தையையாவது நிம்மதியாக வாழ வைப்பா...!'' உருக்கத்துடன் இறைவனிடம் வேண்டினார்.

* * *

மஹேஷ்வரன் தினமும் அலுவலகத்துக்குச் செல்ல, முகேஷுக்கும் நிறைய வேலைகள் இருந்ததால், அன்று தொழிற்சாலைக்குப் போக வேண்டி இருந்தது.

ஆனால், அங்கிருந்து ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை, தவிப்புடன் போன் செய்து விட்டான்.

அருகிலிருந்த மீனாட்சி ரிஸீவரை எடுத்துப் பேசி விட்டு, ''உன்னைப் பத்திதாம்மா அவனுக்குக் கவலை... உடம்புதான் அங்க இருக்கு. மனசு பூரா இங்கதான்...

''அவன் இப்படித் தவிச்சிப் போய், இதுவரைக்கும் நான் பாத்ததே இல்லை! உன் மேலத் தன் உயிரையே வச்சிருக்கான்னு நினைக்கிறேன்...

''உன்னைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு என் கிட்ட வந்து சொன்னப்பவே, நான் இதப் புரிஞ்சிக்கிட்டேன். அவன் கொஞ்சம் கோபக்காரன்தான்... முரடு

தான்! ஆனா ரொம்ப நல்லவன்மா! நீதான் அவனைப் புரிஞ்சி நடந்துக்கணும்'' என்றார் ஆதரவான குரலில்!

அவளைப் பற்றிய நினைவுகளால், பிடிவாதமாகத் தன்னுள் இறுகி இருந்த எதுவோ ஒன்று, மெல்ல விடுபட்டுச் செல்வது புரிவதாய்...!

பொதுவாகவே பையனைத் தன் வசமே பிடித்து வைத்துக் கொள்ள நினைக்கும் மாமியார்களின் மத்தியில், மீனாட்சியின் அறிவுரை புதிதாய்...!

அதுவே அவர் மேல் ஒரு மதிப்பையும் வரவழைத்தது.

அவளுடைய விழிகள், அவன் வரும் வழியில் பதிந்து இருந்தது... நெஞ்சமோ கனவுகளைச் சுமந்திருந்தது!

அவனுக்காகக் காத்திருந்ததில், காதல் கொண்ட மனம் நொந்தது... அணை உடைத்து கடலிடம் சேரத் தவித்திருக்கும் நதியாய் அவள்!

* * *

அன்று, முகேஷ் அவசரமாகக் கிளம்பி மதியமே வீட்டுக்கு வந்து விட்டான்.

போனில் இருமுறை பேசி இருந்தாலும், நம்பிக்கை இல்லாமல் அவள் முகத்தை ஒரு கணம் ஆராய்ந்தான்.

பிறகு, திருப்தியுடன் பக்கத்தில் போட்டிருந்த நாற்காலியில் வந்து அமர்ந்தான்.

இரவு பகலாகத் தூக்கம் சரியில்லாமல், அவள் வெகுவாய் களைத்துப் போயிருப்பது, அவனுக்குள், ஒரு குற்றவுணர்வை வரவழைத்தது.

அவளையும் கவனித்து, அவள் மற்ற வேலைகளையும் கவனிக்க வேண்டி இருப்பது அறிந்து, மனம் வேதனையைத் தத்தெடுத்தது.



அவனிடம், ''நீங்க ரெஸ்ட் எடுத்துக்கங்க... ப்ளீஸ்! என்னால உங்களுக்கு ரொம்ப சிரமம்... பத்து நாளா நீங்க சரியாவே தூங்கலை!

''ஆபீஸ் வேலையும் இந்த நேரம் பார்த்து ரொம்ப அதிகம்! நான்தான் இப்ப நார்மலா இருக்கேனே... நீங்க படுத்துக்கங்க!'' என்றாள் அக்கறையுடன்!

அவன் அந்த நாற்காலியிலேயே சாய்ந்து கண் மூடினான்.

''அங்கே வேணாம்... இங்கே பெட்ல வந்து படுத்துக்கங்க!''

அவளின் மென்மையான குரலில், ஒரு கணம் அவளையே கூர்ந்தவன், பக்கத்து மெத்தையில் படுத்தவன் தான்... மறு நிமிடமே ஆழ்ந்த நித்திரையில் இருந்தான்!

உறங்கும் போது, அதுவும் அருகில் அவன் முகத்தைப் பார்த்தபோது, பொறுப்பும், பிடிவாதமும், கருணையும் கலந்து தெரிந்தது அதில்!

தேக்கடியில் அவன் விமர்சித்து ரசித்தது, இன்று மனக் கண்ணாடியில் அப்படியே தெரிவதாய்...!

அவன் உறக்கம் கலைக்காமல், முன்னுச்சி முடியை மெல்லக் கோதி விட்டாள் நந்து.

தன் மனைவி முதன் முதலாகத் தன்னை நேசத்துடன் தீண்டியதை உணராமலேயே, நல்ல ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான் அவன்.

நந்துவின் மனம் முழுவதும் காற்று நிரம்பிய பலூனைப் போல், அவன் நினைவுகளே நிறைந்திருந்தன.

அப்படியே சாய்ந்து, அவன் கை விரல்களில் தன் விரல்களைக் கோர்த்தபடி, கண்களை மூடிக் கொண்டாள்.

உள்ளம் ஊமையாய் நினைவுகளை அசை போட்டது.

இப்போதெல்லாம் தன் முகவரி என்னவென்று யாராவது கேட்டால், அவன் இதயம் என்று சொல்லத் தோன்றுவதை, நாணத்துடன் நினைவு கூர்ந்தாள்.

அவனைப் பற்றி எண்ணங்களுக்குள் சுகமாய், கவிதை இழைகள் தடம் பதித்தன!

"உன் பார்வைகள்
என்றுமே...
பெண்மையைத் துகிலுரித்ததில்லை...
மனிதருள்
மலிந்திருக்கும்...
பலகீனங்கள் உன்னை நாடியதில்லை...
உன் சீற்றத்தை...
கண் சிவந்து
வெளிப்படுத்தாமல் நீ இருந்ததில்லை...
அன்பெனும் மந்திரம்...
உன்னிடம்
வார்த்தைகளால் வெளிப்பட்டதில்லை...
மௌனச் செய்தியாய்...
செயல்களில் மட்டுமே!
இல்லை... இல்லை என்ற
என் களிப்புகள்...
உன்னிடம் அதிகம்
இருந்ததாலேயோ என்னவோ...



உன்னை எனக்கு
பிடிக்காமல் போகவில்லை...
மிகவும் பிடித்திருக்கிறது!
என்னுயிரில் கலந்தவனே!
என் இதயக் கூட்டில்
நிறைந்தவனே...
என்னைப் புரிந்து கொள்வாயா...?"

என்று எழுதி, பத்திரப்படுத்தி வைத்தாள்.

என்னை விரும்ப வைப்பேன் என்று சவால் விட்ட முகேஷிடம், அன்று அவ்வளவு வீம்பாக உன்னை நேசிக்க முடியாது என்று கூறிவிட்டு, இப்போது எப்படி வெட்கத்தை விட்டுத் தன் காதலைச் சொல்வது என்ற தயக்கம், மனதினுள் கிளர்ந்தது.

நெஞ்சம் முழுவதும் சஞ்சலமாகி மயங்கியது... வாய் விட்டுச் சொல்லத் தயங்கியது...

ஆனால் அவனை மட்டும் உயிராய் விரும்பியது!

தனக்குள்ளேயே போராடத் தொடங்கினாள் நந்து.

* * *

ஒரு மணி நேரம் கழித்துக் கண் விழித்த முகேஷ், அவளை உடனே நிமிர்ந்து பார்த்தான்.

அவள் இயல்பாக இருக்கவும், மெல்லப் புரண்டு தள்ளிப் போய், ஓரத்தில் படுத்துக் கொண்டான்.

அந்த இடைவெளியே அவள் மனதை இறுகப் பிழிவதாய்!

தன்னை அவன் வெறுத்து விடுவானோ என்ற பயம் கூட மனதில் வருவது புரிந்தது.

"அன்பின் வழியாகச் செய்யும் ஒவ்வொரு செயலும், மகிழ்ச்சியை கொடுத்துக் கொண்டே இருக்கும்."

விவேகானந்தரின் வரிகள் ஆறுதலுடன் நினைவில் படர்ந்தன.

## 27

மதுரையிலிருந்து, அன்று மாலையே காயத்ரி வந்து விட்டார்.

அவளை சிறு குழந்தை போல் கவனித்துக் கொண்டாலும், அவர் வந்ததுமே விலகிப் போன முகேஷிடம், மனம் தேடிச் சென்று சரணடைவதாய்...!

அவனுடைய அருகாமைக்கும், கவனிப்புக்கும், மென் தொடுகைக்கும் மனம் பெரிதும் ஏங்கியது.

ஆனால், முகேஷிடம், எந்த மாற்றமும் தெரியவில்லை.

எப்போதும் போல் தொழிற்சாலைக்குச் செல்வதும், வீட்டிலிருக்கும்போது அடிக்கடி வந்து இயல்பாக அவளைப் பார்த்துச் செல்வதுமென்று, சாதாரணமாகவே இருந்தான்.

காயத்ரி அவனுடன் தங்கி இருப்பதால், பக்கத்து அறையை அவன் உபயோகப்படுத்த, அவனுடன் செலவழிக்கும் நேரமே வெகு அரிதாய்!

* * *



ஒரு நாள் மதியம், தூக்கத்திலிருந்து விழிக்க ஆரம்பித்த போதுதான், காயத்ரியும், மீனாட்சியும் பேசிக் கொள்வது நந்துவின் செவிகளில் மெல்லப் பதிந்தது.

"எங்க முகேஷ் கல்யாணம் பண்ணிக்காமலே இருந்திடுவானோன்னு, ஒரு சமயத்துல நான் ரொம்ப பயந்து போயிருக்கேன் அண்ணி!

"எந்தப் பொண்ணோட ஃபோட்டோவைக் காமிச்சாலும் வேண்டாம்பான்! அவங்கப்பா கூட கிண்டல் பண்ணுவாரு...

"வானத்துலயிருந்து ஒரு தேவதையப் புடிச்சிட்டு வந்து காட்டணும் போலருக்கு, உன் பையனுக்கு அப்படின்னு!

"ரெண்டு வருஷம் முன்னாடி, ஒரு அனாதை ஆசிரமத்துல, ஒரு குழந்தையோட முழுப் பராமரிப்பு செலவையும் ஏத்துக்கிட்டு அதுக்கு கார்டியனா அவன் ஆனப்ப, நான் இன்னுமே பயந்து போயிட்டேன்...

"அவன் வாழ்க்கையில கல்யாணம், குழந்தைங்கன்ற நல்ல விஷயங்களே நடக்காமப் போயிடுமோன்னு ரொம்ப கவலைப்பட்டு கோவில் கோவிலாப் போயிட்டிருந்தேன்.

"ஆனா, நந்துவைப் பாத்துட்டு வந்து அவனா கல்யாணத்துக்குச் சரின்னு சொன்னான்! அப்புறம்தான் எங்களுக்கு நிம்மதியே வந்தது!"

ஒரு பெருமூச்சுடன் முடித்தார் மீனாட்சி.

முகேஷின் மறுபக்கமும், அவனுடைய மனித நேயமும், நந்துவின் மனதில் நெகிழ்வுடன் ஆழமாய் பதிய, சட்டென்று அவனுக்காக உருகியது அவள் இதயம்!

உடனே காயத்ரியும் பேச ஆரம்பித்தார்.

''எனக்கும் அப்படித்தான்னி! இவ வேற அனிதா இறந்து போனதுலருந்து அதே ஞாபகமா இருந்தாளா? இவளோட மனசை மாத்தி கல்யாணம் பண்ண முடியுமான்னு ஆயிடுச்சி!

''ஆனா, எல்லாம் நல்லபடியா முடிஞ்சது அந்த தெய்வச் செயல்தான்!'' நிம்மதியுடன் கூறினார் காயத்ரி.

''இனிமே நமக்கு என்ன வேணும்? பேரக் குழந்தைங்க பிறந்து அதுங்களைப் பாத்துட்டாப் போதும்!''

மீனாட்சி முடித்தபோது, முகேஷின் குரல் கேட்க, மெதுவாக எழுந்து அமர்ந்தாள் நந்து.

அப்போது தான் உள்ளே வந்தான் முகேஷ்.

''என்னம்மா என்ன பேசிட்டு இருக்கீங்க...?'' என்றபடி இயல்பாக அவளருகில் வந்து அமர்ந்து நலம் விசாரித்தான்.

''எங்க ரெண்டு பேருக்கும் பாட்டி ஆகணும்னு ஆசை வந்திடுச்சி... அதைப் பத்தித்தான் பேசிக்கிட்டிருந்தோம்'' புன்னகையுடன் கூறினார் மீனாட்சி.

உடனே, வெட்கத்தில் முகம் சிவந்து மனம் குழம்பி விட, அதை மறைக்கத் தலை குனிந்தாள் நந்து.

''அதைப்பத்தி உங்க மருமககிட்ட தான் நீங்க கேக்கணும்'' என்று முகேஷ் பதில் சொல்வான் என மனம் ஆவலுடன் எதிர்பார்த்தது.



ஆனால், அவன் வார்த்தைகள் பெரும் ஏமாற்றமளிப்பதாய்!

''ஏம்மா... அவளே உடம்பு சரி இல்லாம இருந்து இப்பதான் எழுந்திரிச்சிருக்கா! ஏன் சும்மா தொண தொணங்கறீங்க?''

சிடுசிடுப்புடன் கூறி விட்டு எழுந்து செல்பவனையே ஆச்சர்யமாகப் பார்த்தார் மீனாட்சி.

காயத்ரிக்கு தர்ம சங்கடமாய் இருக்க, நந்துவின் விழிகளில் மெலிதான நீர்ப்படலம்!

தன்னை எப்படி அவனுக்குப் புரிய வைக்கப் போகிறோம் என்ற எண்ணமே மலைப்பாய்...!

* * *

பிறகு, அவனிடம் யாருமில்லாத தனிமையில் பேசினாள்.

''ஏங்க அத்தையத் திட்டினீங்க... பாவம்! ஏதோ அவங்க தன் ஆசையச் சொன்னாங்க. அதுக்குப் போய் அவங்க கிட்ட கோபப்பட்டுட்டு...! நீங்க சாப்பிட்டீங்களா...?'' அக்கறையுடன் கேட்டாள்.

உடனே எழுந்து ஜன்னலருகில் சென்று நின்றான் அவன்.

''அதெல்லாம் ஆச்சு! நம்ம ரெண்டு பேருக்குள்ள இருக்கற விஷயம், அவங்களுக்குத் தெரியாது இல்லியா. அதெல்லாம் சாத்தியமே இல்லாதப்போ, ஏன் வீணா அவங்க மனசையும் ஆசைய வளக்கணும்? அவங்களை ஏமாத்த வேணாமே...!''

எங்கோ தூரப்பார்வை பார்த்தபடிக் கூறினான்.

"இல்லைங்க... நான் அதுக்கு சொல்லலை!"

அவள் ஆரம்பிக்கும்போதே திரும்பி இடை மறித்தான்.

"நீ பேசாம ரெஸ்ட் எடு நந்து! நான் அம்மாவை டீல் பண்ணிக்கிறேன்... அவங்க இது மாதிரிப் பேசி, இனிமே உன்னை டிஸ்டர்ப் பண்ண மாட்டாங்க!"

அழுத்தமான குரலில் கூறி விட்டு வெளியே சென்றான்.

பனிமூட்டம் கண்டதால், மலர்த் தோட்டத்திற்கு வாராமல் திரும்பிச் சென்ற தென்றலைப் போல்... விலகி அவன் சென்றபோது அவள் மனம் பாரமாகி வலித்தது.

இன்று நீ உத்தரவிட்டால், என் உயிரையும் தருவேன் என்று அவனிடம் கூற வேண்டும் போல்...!

அவளை சாப்பிட்டீர்களா என்று, இன்று தான் முதன் முதலாகத் தான் அக்கறையுடன் கேட்டது புரிந்தது.

உடனே வேலண்டைன்ஸ் டே அன்று நடந்தது நினைவில் வர, மெதுவாக எழுந்து சென்று அந்தக் காதல் பரிசை எடுத்தாள்.

அதை நேசத்துடன் வருடியவள், அவன் நினைவுகளைப் போலவே பரிசையும் பத்திரமாகப் பூட்டி வைத்தாள்.



# 28

பத்து நாட்களுக்குப் பிறகு காயத்ரி, அவளை ஊருக்கு அழைத்துப் போக முடிவெடுத்து, மீனாட்சியிடம் அது பற்றிப் பேசினார்.

அவரும் அம்மா வீட்டுக்குச் சென்று ஓய்வெடுத்து விட்டு வரட்டும் என்று, நந்துவைப் போய் வரும்படிக் கூறினார்.

ஆனால், அவளுக்குத்தான் இப்போது முகேஷை விட்டுச் செல்லவே விருப்பமில்லை.

முகேஷாவது ஏதாவது கூறுவான் என்று பார்த்தால் அவன் எதிலுமே தலையிடாதபோது அவள் மனம் நிலவாய்த் தேய்ந்தது.

மாலையில் அவன் வீடு வந்தபோது மீனாட்சி அவனிடம் காயத்ரியின் விருப்பத்தைப் பற்றிக் கூறினார்.

அவனும், "சரிம்மா... அழைச்சிட்டுப் போகட்டும்! அம்மா கூட இருந்தா அவளுக்கும் ஒரு சேஞ்சா இருக்கும்" என்றான், உணர்ச்சிகளைத் துடைத்த குரலில்.

அன்று அறைக்குள் வரும் போதே, அவன் முகத்தில் ஏதோ மாற்றம் தென்பட்டது.

"நான் அம்மாவோட மதுரைக்குப் போகட்டுமா...?" மெதுவாகக் கேட்டாள் நந்து.

"எனக்கு உன்னைப் பிரிவதில் இஷ்டமில்லை... நான் போகமாட்டேன்" என்று ஒரு வார்த்தை இன்று நீ கூறினால், என் மனவலிகளெல்லாம் போய் பெரும் மன வலிமை வந்து விடுமென்று அவளிடம் கூற வேண்டும் போல்!

அவளையே ஒரு கணம் ஊடுருவியவன், "இதுலே என்னைக் கேக்கறதுக்கு என்ன இருக்கு நந்து? நான்தான் முன்னாடியே சொல்லி இருக்கேனே... அதெல்லாம் உன்னோட விருப்பம்!

"நீ ரொம்ப வீக்கா இருக்கே... அம்மாவோட இருந்தா மனசுக்குத் தெம்பா இருக்கும்! நல்லா போய் ரெஸ்ட் எடுத்துட்டு வா!" உலர்ந்த குரலில் கூறினான்.

நந்து, அவன் பார்வையைத் தாங்க முடியாமல் தலை குனிந்தாள்.

"எனக்கு உன்னை விட்டு செல்ல இஷ்டமில்லை... உன்னுடன் இருப்பதைத் தான் நான் விரும்புகிறேன்!" என்று வெட்கத்தை விட்டு எப்படிக் கூறுவது என்ற தவிப்புடன் நிமிர்ந்தாள்.

அந்த நொடி, அவன் விழிகளும், அவளிடமே பதிந்து இருந்தன.

பாசமெல்லாம் அவன் மேல் வைத்து விட்டு, அதை வாய் விட்டுக் கூற முடியாமல் அவள் பரிதவித்து நிமிர்ந்த போது, எதையோ எதிர்பார்த்துக் காத்திருந்தது போல் தெரிந்தது, அவன் தோற்றம்!

ஆழமான பார்வைப் பரிமாற்றத்தின் முடிவில், கண்களில் ஏதோ புரியாத பாவத்துடன் அவன் திரும்பிச்



செல்ல, இயலாமையால் தன் மீதே கோபம் வந்தது அவளுக்கு!

* * *

அன்றிரவு அனைவரும் பேசிக் கொண்டிருந்தபோது, அவள் பார்வை மட்டும் அவன் வரைந்த ஓவியத்திடம் சென்றது.

திடீரென்று அதை அருகில் சென்று பார்க்க வேண்டும் போல், ஒரு ஆர்வம் கிளர்ந்தெழுந்தது.

மெதுவாக எழுந்து சென்று பார்த்தபோது, வெகு அழகாய் இருந்த அந்த ஓவியம், ஓவியர்களும் ஒரு வகையில் பிரம்மாக்களோ என்ற ஒரு உணர்வை ஏற்படுத்துவதாய்!

கடவுள், அசையும் உயிர்களை அற்புதமாகப் படைக்கிறார்...

ஓவியர்கள் அசையாத அற்புதத்தை உயிர்ப்புடன் படைக்கிறார்களோ என்று தோன்றியது.

காற்றடித்தாலே கலைந்து போகிற மெல்லிய மேகம் போன்ற ஒரு கருத்தை மனதில் செதுக்கி, வர்ணம் சேர்த்து வடிக்கப்படும் மௌன தவமாய்!

இயற்கையை உணர்வுகளுக்குள் செலுத்தி, அதற்கு வடிவம் கொடுத்து வர்ணங்களால் நிரப்பி, தூரிகையில் வெளிக்கொணர்கிற ஒரு இனிய வாத்சல்யமாய்!

ரசனையுடன் அதில் லயித்திருந்த போது, "நந்து...!" என்று காதருகில் வருடிய குரலால், திடீரென்று ஒரு விழிப்பு நிலை வரத் திரும்பினாள்.

அருகே முகேஷ் நின்றிருந்தான்... கண்களில் புரியாத ஒரு உணர்வைத் தாங்கியபடி!

கேள்வியாய், "என்னங்க...?" என்றபோது, ஓவியத்தைக் காட்டி, "பிடிச்சிருக்கா...?" என்றான் மென்மையாக.

"ம்... ரொம்ப...!" எனும்போதே போன் வர, அவன் திரும்பிச் சென்றான்.

"நீ உன்னையே காட்டி, என்னிடம் எப்போது இப்படிக் கேட்கப் போகிறாய்" செல்லமாய் சிணுங்கியது நந்துவின் மனது.

* * *

அன்றிரவு உறக்கமே வரவில்லை!

தான் இனித் துயில் கொள்வது, அவனுடைய ஒரு சொல்லில் உள்ளது என்பது மட்டும் தெளிவாய்ப் புரிவதாய்!

ஊருக்குச் செல்வதற்கு, மறுநாள் மதியம் அவர்களுக்கு கார் ஏற்பாடு செய்திருந்தான் முகேஷ்.

காயத்ரி துணிகளையெல்லாம் எடுத்து வைக்க, கிளம்பத் தயாரானாள் அவள்.

மதியம் முகேஷ் தொழிற்சாலையிலிருந்து வந்து விட்டான்.

சாப்பிட்டு விட்டு மாடிக்குச் சென்று அவனுக்காகக் காத்திருந்தாள் அவள்.

மாடிக்கு வந்தவன், "என்ன... கிளம்பலையா...? கார் வந்துடிச்சி... கீழே எல்லாரும் வெயிட் பண்றாங்க!" அலை பாயும் விழிகளுடன் கேட்டான்.



ஏனோ, அவன் பார்வை அவள் இதழ்களின் மேல் இருந்த மச்சத்தில் படிந்து உடனே விலகியது.

பிரிவெனும் பெருந்துயர் நந்துவை ஆட்டிப் படைக்க, அவன் விழிகளுக்குள் எதையோ தேடியது மனது.

"நீங்க எப்போ மதுரைக்கு வருவீங்க?" ஆதங்கத்துடன் கேட்டாள்.

உடனே, அவளருகே வந்தான் அவன்.

"நீ வரச் சொன்ன உடனே வருவேன்... உனக்கு எப்ப இங்கே வரணும்னு தோணுதோ அப்ப சொல்லு... நான் உடனே வந்து உன்னை அழைச்சிட்டு வந்துடுவேன்!" என்றான் மென்குரலில்!

"சரி...!" என்று அவள் மௌனமாய் தலையசைத்தாள்.

"ஆனா, நல்லா ரெஸ்ட் எடுத்துக்க... ரொம்ப அனிமீக்கா வெளிறிப் போய் இருக்கே! அம்மா வீட்டுக்குப் போறதுன்னாலே பொண்ணுங்களுக்கு ஜாலிதான், இல்லை... நல்லா என்ஜாய் பண்ணிட்டு வா!" கண்களில் வராத சன்னமான சிரிப்புடன் கூறினான்.

நந்துவுக்குத் தன் மனம் புரியாமல் பேசும் அவனைப் பார்த்தால், மனதில் கோபமும் சலிப்பும் வந்தன.

சொல்வதற்கு வேறு எதுவும் இல்லாதது போல் மெல்ல அவள் கன்னத்தைத் தட்டிவிட்டு அவன் பெட்டியை எடுத்துக் கொண்டு கீழே செல்ல, அதன் பாதிப்பு இதயத்தில் எதிரொலித்தது... உணர்வுகளை உரசிப் பார்த்தது!

# 29

கார் கிளம்பிச் சென்று, அவன் உருவம் கண்களிலிருந்து மறையும் வரை, திரும்பிப் பார்த்துக் கொண்டே வந்தாள் நந்து.

பிறகு அப்படியே சீட்டில் பின்புறம் சாய்ந்து, கண்களை ஆயாசத்துடன் மூடிக் கொள்ள, அவனைச் சுற்றியே உலா வரத் துவங்கியது உள்ளம்!

இடம் பெயர்ந்த இதயத்தில், பிம்பங்களாய் அவன் நினைவுகள்!

அன்று முகேஷின் மனம் புரியாமல், தன்னைச் சுற்றி சுவர் எழுப்பிக்கொண்ட தீவு மனம், இன்று அதை உடைத்து வெளி வருவதாய்!

"நீயும் நானும், அங்கு தனிமையிலும் தனித்து தானே இருந்தோம்... ஆனால் இன்று உன் நினைவுகளால், என் விழிநீர் இமைக் கதவுகளில் நின்று எட்டிப் பார்க்கிறதே...!"

மனம் சோகக் கவிதைகளைப் பிரசவித்தது.

நந்து, மதுரைக்குச் சென்ற உடனே, வீட்டுக்கு போன் செய்தாள்.

முகேஷின் ஆழ்ந்த குரல், "ஹலோ...!" என்றதும் அவள் உலகமே ஒரு நொடி ஸ்தம்பித்தது.



"ம்... நான்தான் பேசறேங்க! இப்பதான் வந்து சேர்ந்தோம்... அதான் சொல்லிடலாம்னு உடனே போன் பண்ணேன். என்ன செஞ்சிட்டு இருக்கீங்க...?" என்றாள்.

"டி.வி. பார்த்துட்டே என்னோட ஒய்ஃபைப் பத்தி நினைச்சிட்டிருக்கேன்."

சிறு கேலியுடன் அவன் கூற ஒரு நிமிடம் இதயம் சுரம் தப்ப ஆரம்பித்துப் பிறகு இயல்பாய் துடிக்க ஆரம்பித்தது.

"அதெப்படி... ஒரே நேரத்துல ரெண்டு வேலை..."

அவள் தயக்கமாய் நிறுத்தினாள்.

"ம்... உன் கிட்டருந்துதான் கத்துக்கிட்டேன்... அப்பப்ப என் நினைப்புல டி.வி. பாத்துக்கிட்டே கனவுலகுக்குப் போயிடுவியே..."

நந்து... என்ன சத்தத்தையே காணோம்! சும்மா ஜோக் கடிச்சேன்... என்னை விட்டுட்டுப் போனதுல ஜாலியா இருக்கியா...?" உனக்கு ஒண்ணும் ப்ராப்ளம் இல்லையே? ட்ராவல் பண்ண முடிஞ்சுது இல்லை?" அக்கறையுடன் விசாரித்தாள்.

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை! நான் நல்லாத்தான் இருக்கேன்" என்றவளிடம், "இரு... அம்மா பேசணுமாம்" மீனாட்சியிடம் போனைக் கொடுத்தான்.

அவரிடம் பேசிவிட்டு வைத்தவள், தன் மனம் எதையோ இழந்து தவிப்பதை உணர்ந்து கொண்டாள்.

எவ்வளவு தான் பாசத்தைக் கொட்டி அம்மா அவளை வளர்த்திருந்தாலும், நேசம் வந்தவுடன் அவள் மனம் முகேஷிடம் ஒரு நாய்க்குட்டியாய் வாலாட்டிக் கொண்டு சென்றது ஏனோ புதிராய்...!

* * *

மறுநாள் காலையிலேயே கௌரி வந்து விட்டாள்.

அவளைக் கண்டதும், மனம் சிறிது மாறியது.

"கௌரி... கங்கிராட்ஸ்! மாப்பிள்ளை எப்படி இருக்காரு?" ஆர்வமாகக் கேட்டாள்.

"ம்... நல்லாருக்காரு! நீதான் வரலை... எனக்கு உன் மேல ரொம்பக் கோபம் தெரியுமா?"

"சரி கௌரி! அம்மா முதல் நாள் நைட்தான் சொன்னாங்க. திடீர்னு எப்படி வர முடியும் சொல்லு? சரி... மாப்பிள்ளை பேர் என்ன? உனக்கு போன் பண்ணிப் பேசினாரா?"

"ம்... அவர் பேரு... ஹரி! வாரம் ஒரு தடவை போன் பண்ணிப் பேசிடுறாரு! அதெல்லாம் இருக்கட்டும்... அங்கே நீ எப்படி இருக்கே?" என்றபோது வித்தியாசமான அமைதி வந்தது நந்துவிடம்!

அவளது மாற்றத்தை கவனித்த கௌரி, "நாம ரெண்டு பேரும் சாயந்திரம் கோவிலுக்குப் போகலாமா?" மெதுவாகக் கேட்டாள்.

'சரி' என்று தலையசைத்த நந்துவையே யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு, அவள் ஒரு வேளை மாறி இருப்பாளோ என்ற சந்தேகம் வருவதாய்...!

* * *

அன்று மாலை, இருவரும் ஆட்டோவில் கிளம்பி கோவிலுக்குச் சென்று சாமி தரிசனம் முடித்துவிட்டு, குளக்கரையில் அமர்ந்து பேச ஆரம்பித்தனர்.



கௌரி முகேஷைப் பற்றிக் கேட்டவுடன், நந்துவின் விழிகளில் கண்ணீர் இமைகளின் அணைதாண்டி நீரோடையாய் வழிய ஆரம்பித்தது.

எல்லா விபரங்களையும் மனம் விட்டு அவளிடம் கூறியபோது, நந்துவுடைய மனமாற்றம் கௌரியிடம் மனதில் பெரும் நிம்மதியை விதைத்தது.

நந்துவின் கையைப் பிடித்து ஆதரவாக அழுத்தினாள் அவள்.

"அப்புறம் என்னடி...? உன் ஹஸ்பெண்ட் கிட்ட சொல்லிட வேண்டியதுதானே?" என்றாள் ஆவலுடன்.

"ப்ச்... நான் எப்படிச் சொல்றது கௌரி? அவ்வளவு வீம்பா, அன்னைக்கு உன்னை விரும்ப மாட்டேன்னு பேசிட்டு இப்ப எப்படிப் போய்...? ரொம்பத் தயக்கமா இருக்கு... எனக்கு ஒண்ணுமே புரியலை!"

தவிப்புடன் வந்தது அவள் குரல்!

சிறிது நேரம் யோசித்தபடி அமர்ந்திருந்தாள் கௌரி.

"நீதான் அவர் கிட்டப் போய்ப் பேசணும் நந்து! அவர் விரும்பித்தானே உன்னை ஏத்துக்கிட்டாரு. நீதான் அவரை நேசிக்கலை! இப்ப உன் மனசுல இருக்கற நேசத்தை நீதானே சொல்லணும்! ஆமாம்... நீ எப்போ திரும்பிப் போகப் போறே?"

"தெரியலை... என்னை நல்லா ரெஸ்ட் எடுத்துட்டு வரச் சொன்னாங்க! நான் சொன்னா வந்து அழைச்சிட்டுப் போறேன்னு... அவர் சொன்னார்."

வெட்கத்தின் முகவரி, நந்துவின் குரலில்!

"எவர்...?" கௌரி கிண்டலடித்தாள்.

"போடி... நீ எனக்கு நல்ல யோசனையா சொல்லு வேன்னு பாத்தா, புரிஞ்சுக்காம கேலி பண்றே... நான் இதப் பத்தி அம்மா கிட்டயும் பேச முடியாதுன்னு தானே உன் கிட்டக் கேக்கறேன்" சலுகையுடன் சிணுங்கினாள்.

"சரி... ஒரு வாரம் போகட்டும்! அப்புறமா நீயே போன் பண்ணி அவரை வரச் சொல்லு."

கௌரி கூறியவுடனே, "ஒரு வாரமா...? வரச் சொல் லிட்டு... நான் எப்படி என் மனசைப் பத்தி சொல்றதுன்னு கேட்டா ஏன்டி நோகடிக்கிறே...?" என்றாள்.

"எய்! இதுக்கெல்லாம் என்ன கிளாஸா எடுக்க முடியும்...?"

"எனக்கு ஒண்ணுமே புரியலை! பைத்தியமே பிடிச் சிடும் போல இருக்கு!"

"ம்...! பைத்தியமே இப்பதான் தெளிஞ்சிருக்கு! திரும்பவும் புடிச்சா, உன் அவரோட கதி அதோ கதிதான்! பாத்தும்மா... மனசைக் கன்ட்ரோல் பண்ணிக்க" கௌரி யின் குரலில் கிண்டல் வாசனை!

"சரிடி! ஒரு வாரம் கழிச்சி வரச் சொல்றேன்... என் னவோ எக்ஸாம் எழுதப் போற மாதிரி பயமா இருக்கு!"

"இதுவும் பரீட்சைதான்! நீ பாஸாகணும்னு நான் மீனாட்சி அம்மனை வேண்டிக்கறேன்! ஆனா, ரிசல்ட் பத்து மாசம் கழிச்சிதான் வரும் இல்லையா?" கௌரி குறும்புடன் கேட்டாள்.



"சீ... போடி!" என்று வெட்கப்பட்ட நந்துவின் கன் னங்கள், இன்று தான் புதுப் பெண்ணைப் போல சிவந்தன.

வீட்டுக்குத் திரும்பி வரும்போது மனம் லேசாகி வாழ்க்கையே ரம்யமானது போல்...!

எல்லாவற்றையும், எல்லோரிடமும் பகிர்தல் சாத்திய மில்லை.

மரியாதை நிமித்தமாய், கௌரவம் காரணமாய், அன்யோன்யம் இல்லாததால் சாத்தியமின்றிப் போகிறது.

எதிர்பார்ப்பில்லாத உன்னதமான நட்பு மட்டுமே, மனதை இணைக்கும் பாலமாவது புரிந்தது.

## 30

அநந்திதாவுக்கு, அந்த ஒரு வாரமும் ஒரு யுகமாகக் கழிந்தது.

அம்மாவுடன் இருக்க வேண்டுமே என்ற ஆவல் மட்டுமே, பொழுதை நகர்த்தியது.

விடுமுறையில் இருந்த காயத்ரியும், அவளுக்குப் பிடித்ததை எல்லாம் செய்து கொடுத்தார்.

ஒரு நாள், மன்னார் குடியிலிருந்து மதுரையைச் சுற்றிப் பார்க்க வந்திருந்த உறவினர் ஒருவர், வீட்டுக்கு வந்திருந்தார்.

அவர் காயத்ரியிடம், கூறிய விஷயங்கள், அவளுக்குள் பெரும் சிந்தனையைத் தூண்டுவதாய்!

"உங்க மூத்த மாப்பிள்ளைக்கு ஆக்சிடெண்ட் நடந்து, ரெண்டு கையும் போயிடுச்சி... கூட இருந்த அந்தப் பொம்பளையும் விட்டுட்டுப் போயிட்டா! வேலையும் போய், அவங்க அம்மாவுக்கும் முடியாம ரொம்பக் கஷ்டப்படறாரு... பாவமாதான் இருக்கு! ஆனா பண்ணின பாவத்துக்கு அனுபவிச்சு தானே ஆகணும்."

காயத்ரியின் விழிகளில், அனிதாவின் நினைவில் மெல்லிய நீர்க்கசிவு!

பொயட்டிக் ஜஸ்டிஸ் என்பது போல், இதுவும் கடவுளின் தீர்ப்போ என்று தோன்றியது.

இதுவரை மனதால் ஊனமாக இருந்த ஒருவன், இப்போது உடலாலும் ஊனமானது புரிந்தது.

ஆனால், அதிலும் சந்தோஷப் பட முடியாமல், நந்துவின் மனதுக்குள் ஏதோ ஒன்று தடை செய்தது.

அவள் மனதிலிருந்த இறுக்கம் மட்டும் விடை பெற்றுச் சென்றதென்னவோ, உண்மையாய்...!

அனியின் நினைவு மனதை சஞ்சலப் படுத்த, தன் வாழ்க்கையானது இனிதாய்த் தொடர வேண்டும் என்ற வேண்டுதல் மனதில்...!

புதிதாய்ப் படர்ந்திருந்த நேசம், மனப்புண்ணை வெகுவாய் ஆற்றியிருந்தது.

தினமும், முகேஷுடன் போனில் பேசினாலும், அந்த ஐந்து நிமிடங்களுக்காகவே தான் உயிர் வாழ்வது புரிந்தது.



அவன் குரல் கேட்டதுமே நெஞ்சம் ஆனந்தமாய் சிறகடித்து, அவன் மனதையே அவளுக்கு அறிமுகப் படுத்துவதாய்!

இதுதான் நேசமோ என்ற கேள்வியும் எழுந்தது.

இமைக்கின்ற நொடிக்கும் குறைவான பொழுதில் கூட, அவனைப் பற்றி ஆயிரம் எண்ணங்கள் எழுந்தன.

ஆனால் அவன் முகம் தரிசிக்கக் காத்திருந்த இந்த ஒரு வாரமும், ஒரு யுகமாய்...!

* * *

அன்று மாலை, குணா மாமாவும், கௌரியும் அவளைப் பார்க்க வந்திருந்தனர்.

கிளம்பும்போது மாமா அவளிடம், "நந்து... நான் நாளைக்கு பிசினஸ் விஷயமா நம்ம காரில கிளம்பி கும்பகோணத்துக்கு போறேன்! நான் மாப்பிள்ளைகிட்ட என்ன சொல்றது? ஏதாவது சேதி இருக்கா?" என்றார்.

உற்சாகத்துடன் எழுந்தவள், "சேதி ஒண்ணும் இல்லை மாமா! நானும் உங்களோட வரவா? என்னை அழைச்சிட்டுப் போறீங்களா?" என்றாள் ஆர்வமான குரலில்.

அவர் உடனே, "பாத்தியா காயத்ரி! நான் ஒரு பேச்சுக்கு சேதி இருக்கான்னு கேட்டா, ஊருக்கே கிளம்பறேன்னு சொல்றா! என்ன இருந்தாலும் பொண்ணுங்களுக்குக் கல்யாணம் ஆனா அவ்வளவுதான்... பிறந்த வீட்டையே மறந்துடுவாங்க போலருக்கு!" என்று கிண்டலாகக் கூறினார்.

நந்து தயக்கத்துடன், ''அம்மா... நான் கிளம்பவா?'' என்றவுடன், அவள் ஊருக்குப் போகிறாள் என்ற வருத்தத்தையும் மீறி மனம் நிறைந்த புன்னகை ஒன்று, அவர் முகத்தில் தெரிந்தது.

அவர் தலையசைக்கவும், ''சரி மாமா... நான் இப்பவே போய் துணி எல்லாம் அடுக்கி வச்சிடறேன்... நாளைக்கு எத்தனை மணிக்கு கிளம்பணும்...?'' என்றாள் ஆவலுடன்.

கௌரிக்கும் சிரிப்பு வர, வாயைப் பொத்தி அதை அடக்கினாள்.

''ஏய் கௌரி... என்ன என்னைக் கிண்டல் பண்றியா? உனக்கும் கல்யாணம் ஆகட்டும்... அப்புறம் பாக்கறேன்!'' குறும்புடன் கூறினாள் நந்து.

''காலையிலப் பத்து மணிக்குக் கிளம்பறேம்மா... ரெடியாயிடு!'' என்றபடி அவர் கிளம்ப, கௌரி அவளருகில் வந்தாள்.

''நந்து... அவர் நைட் போன் பண்ணா நீ வரதப் பத்தி ஒண்ணும் சொல்லாதே! சர்ப்ரைஸா போய் உன் மனசைப் பத்தி சொல்லு! அதுக்காக, நைட்டே கிளம்பி ரெடியா விட்டு உக்காந்திருக்காதே!'' கேலி செய்து விட்டுக் கிளம்பினாள்.



# 31

அன்றிரவு முகேஷ் பேசியபோது, மனம் ரகசியக் குறுகுறுப்பில் மலர்ந்தாலும், நாளை ஊருக்கு வரப் போவதை மட்டும் அவள் கூறவில்லை.

இரவு உறக்கம் வராமல் தவித்து, வெகு நேரம் கழித்தே அவள் உறங்கினாள்.

முகேஷுக்கு இனிய அதிர்ச்சியாக இருக்கட்டும் என்று போன் பண்ணாமலே கிளம்பிச் சென்ற நந்துவுக்குதான், அங்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

முகேஷ் ஊரில் இல்லை... காலையில்தான் கிளம்பி, நண்பன் ஒருவனின் திருமணத்துக்கென்று, சென்னைக்குச் சென்றிருந்தான்.

நாளைக்குக் கல்யாணம் முடிந்தவுடன், இரவு கிளம்பி வருவானென்று மஹேஷ்வரன் கூறினார்.

அவளைக் கண்டதும், மீனாட்சியும் அவரும் மிகவும் மகிழ்ந்தனர்.

ஆனாலும் ஒற்றைச் சிறகு முறிந்த ஊனப் பறவையாய், உடனே அவனிடம் செல்ல நினைத்துத் தவித்த மனது, பறக்க மறுத்தது.

ஒரு முடிவுடன், அன்றிரவு பத்து மணிக்கு அவன் தங்கி இருந்த ஹோட்டலுக்குப் போன் செய்து பேசினாள் நந்து.

மனதில் ஒரு புதுவிதமான சிலிர்ப்புடன் காத்திருந்த போது, அவனுடைய அறைக்கு இணைப்பு தரப்பட, அவன் எடுத்தவுடன் மெதுவாக "ஹலோ...!" என்றான்.

"நந்து...!" அவனுடைய ஆழ்ந்த குரலைக் கேட்டதும், உள்ளம் படபடத்தது.

"நான் இப்பதான் ரிசப்ஷன் முடிஞ்சு வந்தேன்... இந்த நம்பர் அப்பாகிட்ட வாங்கினியா? நானே உனக்குப் பேசணும்னு நினைச்சிட்டிருந்தேன்... எப்படி இருக்கே நந்து...? என்னை ஞாபகம் இருக்கா...?" சீண்டலாகக் கேட்டான்.

"ம்... நீங்கதான் மறந்துட்டீங்க! ஊருக்குப் போறதைக் கூட என் கிட்டச் சொல்லலை!" சலுகையுடன் வந்தது அவள் குரல்!

"ஏய்... நான் அவசரமாகக் கிளம்பி வந்தேன்... நேத்து நைட் கூடத் தெரியாது! திடீர்னு வரவேண்டியதாப் போச்சு! என் மேலக் கோபமா...?"

"ம்... இல்லை! நீங்க எப்படி இருக்கீங்க?"

"நான்..." நிறுத்தியவன், "நீ இல்லாம நான் எப்படி நல்லா இருக்க முடியும் நந்து...?" ஆழ்ந்த குரலில் கேட்ட போது அவனுக்குள், ... என்ன இருந்த போதும் அவள் தன்னருகில் இல்லையே என்ற ஏக்கம் பெரிதாய்!

உடனே, "ஆனா நீ அங்கே உன் அம்மாவோட ஜாலியா இருக்கே... இல்லையா?" என்றான் குற்றம் சாட்டும் ரலில்.



"இல்லை!" என்றாள் நந்து ஒற்றை வார்த்தையில்!

அவன் கேலியாக, "என்ன இல்லை...? பொய்யா சொல்றே...?" என்றான்.

"இல்லை முகேஷ்... நான் சந்தோஷமா இல்லை! என்னால உங்களை... நான் உங்களை ரொம்ப மிஸ் பண்றேன்! உங்களை விட்டுட்டு அங்க இருக்க முடியாம, நம்ம வீட்டுக்கு வந்துட்டேன்! இன்னிக்கு மதியம்தான் வந்தேன்...

"உங்களை உடனே பாக்கணும் போல இருந்தது! அதான் சர்ப்ரைஸாக் கிளம்பி வந்தேன்... நான் ரொம்பத் தப்புப் பண்ணிட்டேன். உங்க மனசைப் புரிஞ்சிக்காம ரொம்பக் காயப்படுத்திட்டேன்... சாரி" கூறி விட்டுக் கண் கலங்கினாள் நந்து.

அவள் குரல் பெரிதும் உடைந்திருந்தது.

ஒரு வேகமான மூச்சுடன், "நான் காலையிலே கிளம்பி வரேன் நந்து" என்று கூறி வைத்தவன், ஏனோ உடனே கிளம்பினான்.

நாளை காலையில் கல்யாணம் முடிந்ததும், அவன் கிளம்பினால்கூட இங்கு வருவதற்கு மாலையாகி விடும் என்று தோன்றியதால் வெகு நேரம் அவன் ஞாபகங்களை மனம் தத்தெடுக்க, நந்து விழித்திருந்தாள்.

விழிகள் செருக, உறக்கம் தொலைத்த நினைவுகளிலும், பிறகு தூக்கம் நிறைந்த கனவுகளிலும், அவன் பிம்பமே தெரிந்தது.

மனதில் மறைந்து இருக்கும் மாய உணர்வுகள் விசுவ ரூபமெடுத்து, அவன் நினைவுகளையே பரிசளிப்பதாய்!

காதல் தீப்பொறியை இதயப் பொந்தினுள் வைக்க, அதை ஏக்கத் தென்றல் விசிறிவிட, வெந்து தணிந்தது தேகம்!

# 32

எங்கிருந்தோ வந்த குயிலின் சப்தம் அவளைக் கனவிலிருந்து விழிக்கச் செய்ய, விழிப்பு நிலை அவன் நினைவை மீண்டும் உயிர்ப்பிக்கச் செய்தது.

சோம்பலாக விழித்துப் பார்த்தால் விடியவில்லை... மணி நான்கு என்றது... சுவர்க் கடிகாரம்!

திரும்பினால் எதிரில் முகேஷ் நின்றிருப்பது போல்... கனவென்று எண்ணிக் கண்களை மூட முயன்ற போதே, அவன் உருவம் அசைந்தது.

நிஜத்தின் நிதர்சனம் உசுப்பி எழுப்ப, வேகமாக எழுந்து அமர்ந்து அவனையே நோக்கினாள் நந்து.

அவன் எதையோ எதிர்பார்க்கும் விதமாக அவளையே கூர்ந்தான்.

தாங்க முடியாமல் "முகேஷ்..." என்று வேகமாகச் சென்று, அவன் மார்பில் தஞ்சம் புகுந்தாள் அவள்.

அவளுக்கு, இதுவரை தன்னில் பாதியைத் தொலைத்திருந்ததைப் போல்... அவனைக் கண்டதும் புதிதாய் ஜனமெடுத்தது போல்!



அவள் தன் நினைவுக்கு வர வெகு நேரம் ஆகியது.

இதயத்தில் மகிழ்ச்சியும், விழிகளில் கண்ணீரும் போட்டி போட்டுக் கொண்டு வந்தன.

அவளைப் பிரிய மனமின்றி அணைத்தபடியே அழைத்து வந்து படுக்கையில் அமர்ந்து, அவளைத் தன் மடியில் சாய்த்துக் கொண்டான் முகேஷ்.

ஏனோ வானவில்லைத் தூளியாக்கி, அதில் தலை சாய்த்தது போன்ற இதம் வந்தது நந்துவுக்கு!

அவன் விழிகளில் ஏதோ ஒரு மௌன எதிர்பார்ப்பு தெரிய, என்னவென்று யோசித்தாள் நந்து.

ஆனால் அவன் மனம் புரிந்து உடனே, "ஐ லவ் யூ முகேஷ்!" என்று கூறிவிட்டு, கண்களை நாணத்துடன் இறுக மூடிக் கொண்டாள்.

அவன் இமையோரம் கோடி மின்னல் உருவாக... உயிரும் உள்ளமும் அந்த நிமிடமே அவள் வசமானது.

அவள் காதருகில் குனிந்து "உன் மனசு எப்ப மாற ஆரம்பிச்சுது நந்து? எத்தனை நாட்கள் நீ என்னை ஏங்க வச்சிட்டே!" ஆதங்கத்துடன் கேட்டான்.

சிணுங்கலாக "ம்... தெரியலைங்க! தாஜ்மஹாலைப் பரிசா கொடுத்தீங்களே... அன்னிக்கு! அப்புறம் உங்க ஆபீஸிலேருந்து அந்தப் பொண்ணு வந்தப்போ, மனசு பொறாமையில தகிச்சதே... அன்னிக்கு!

"உங்க ஃப்ரெண்ட் வினோத்தும், வாசன் மாமாவும் உங்களைப் பத்தி சொன்னப்ப...! நீங்க என்னை ஆறுதல்

படுத்தினப்போ எனக்குள்ளே வந்த மாற்றங்கள்... ரேகா உங்களைப் பத்திப் பெருமையா சொன்னது...! தேக்கடியில உங்க குறும்புத்தனம்...

''கடைசியா, என் பர்த்டே அன்னிக்கு நீங்க நடந்துக்கிட்ட விதம்... அதை விட சுந்தர் பேசினதை நம்பாம என்னை நீங்க நம்புனது... தவமணியோட துரோகம்... முருகன் மேல வந்த பரிதாபம்... ஆண்களிலயும் நல்லவங்க இருக்காங்கன்றது எல்லாமா சேர்ந்து கொஞ்சம் கொஞ்சமா என்னை மாத்தி, என் மனசு என்கிட்ட இருந்து சொல்லாமலே இடம் மாறின மாதிரி ஒரு உணர்வு...

''ஆனா எனக்கு உடம்பு சரியில்லாமப் போனப்ப நீங்க என் மேல காட்டின அன்பும் அக்கறையும் தான் என்னை முழுசா மாத்தி, நான் சாகறதுக்குள்ளே, இன்னும் ஒரே ஒரு முறையாவது காதலிச்சி வாழணும்னு தோண ஆரம்பிச்சது!'' என்றபோது, அவள் கன்னங்களில் நாணத்தின் வரிகள் சிவப்பாய்!

ஒற்றை விரலால் அவளுடைய இதழ் மூடி, ''ஷ்... வாழவே ஆரம்பிக்கலை... அதுக்குள்ளே இதென்ன பேச்சு...?'' என்றவனின் குரலில் ஆழம் காண முடியாத மென்மை!

தன்னைவிட அவனைத் தான் அதிகமாக விரும்புவது அந்த நிமிடமே புரிய, மௌனக்கரை உடைத்து, வார்த்தைகளாய் நேச அலைகள் வெளி வந்தன.

''நான் உங்களைப் பத்தி ஒரு கவிதை கூட எழுதி இருக்கேன்... தெரியுமா...?'' என்றாள் குறும்புடன்.



''அப்படியா...?'' என்று அவன் ஆச்சரியப்பட்டான்.

''நீங்கதான் என்னைப் புரிஞ்சிக்கவே இல்லை... நான் ஊருக்குக் கிளம்பவான்னு கேட்டப்ப, வேண்டாம்னு ஒரு வார்த்தை சொல்லி இருந்தீங்கன்னா, நான் இங்கேயே இருந்திருப்பேன்!'' என்றாள் சிணுங்கலாக.

அவள் மூக்கைப் பிடித்து செல்லமாகத் திருகியவன், ''ஏய்... என் மகாராணி மனசு இறங்கினது எனக்கெப்படித் தெரியும்...? நானே உன் அருகாமையில என்னை இழந்து தவிச்சிட்டு இருந்தேன்! என்னைக் கண்ட்ரோல் பண்ணிக்கறதே பெரும்பாடா இருந்தது எனக்கு...? நீயா வாய் திறந்து சொல்ல வேண்டியது தானே...?'' செல்லக் கோபத்துடன் கேட்டான்.

சலுகையுடன் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள் நந்து.

''ம்... எனக்கு நேரா எப்படி சொல்றதுன்னு புரியலை... வெக்கமா இருந்தது... அதான் போன்லே சொன்னேன்'' என்றவளின் விழியோரங்களில் புதிதாய் காதல் கவிதைகள் தெரிய, வாய்மொழிகள் அங்கு அர்த்தமற்றுப் போவதாய்!

பார்வையாலேயே அவனைத் துண்டாடியவளை, இறுக அணைத்துக் கொண்டான் அவன்.

திடீரென்று நந்து அவனிடமிருந்து விலக, அவளைப் பிரிய மனமின்றி ''இப்ப எங்க போற நந்து...?'' என்றவனின் குரலில் பெரும் தவிப்பு தெரிந்தது.

மெதுவாக, ''கவிதையை எடுத்துட்டு வாதுக்குதான்!'' என்றபடிச் சென்று எடுத்து வந்த கவிதையை அவனிடம் கொடுத்து விட்டு, உரிமையுடன் அவன் தோளில் சாய்ந்து கொண்டாள் நந்து.

அந்தக் கவிதையை ஆர்வத்துடன் வாசித்தவன், ''அழகான கவிதான்!'' என்று இரு பொருள்படக் கூறிய போது ''ஏய்...!'' என்று அவன் மார்பில் செல்லமாகக் குத்தினாள் நந்து.

அவள் கைகளிரண்டையும் பிடித்தவன், ''ஒரு நிமிஷம்! என்னோட வா..!'' என்று அவளை அழைத்துச் சென்று தான் வரைந்திருந்த ஓவியத்தை எடுத்துக் காட்டினான்.

அவளுக்கு ஒரு கணம் ஒன்றுமே புரியவில்லை.

முதல் நாள் கல்லூரி விழா அன்று அவள் அணிந்திருந்த இளரோஜா நிறச் சுரிதாரில், ஒரு சிற்பம் போல் அவள் உருவம், அச்சாய் அதில் வரையப்பட்டிருந்தது.

என்ன தவம் செய்தேன் என்ற உணர்வில் காதலாகிக் கசிந்துருகி அவள் நிமிர்ந்தாள்.

அவன் பார்வை... அவளுடைய உதட்டின் மேற்புறமிருந்த அந்த சிறு மச்சத்தில் படிந்தது.

மறு நிமிடம் அவன் உதடுகள்... தேன் துளியை சுமந்திருந்த அவள் இதழ்களின் மேல் பதிந்தன.

சட்டென்று, உடலெங்கும் பரவி விகசித்த வெட்கத்துடன் அவனிடமிருந்து விலகினாள் நந்து.



முகேஷின் விரல்கள், வேகமாக நீண்டு அவளைப் பற்றின.

''ஏய்... எங்கே போறே? இனிமே நான் உன்னை எங்கேயும் போகவிடமாட்டேன்.''

அவளை தாபத்துடன் இழுத்து அணைத்துக் கொண்டான் அவன்.

''ம்... இதெல்லாம் கொஞ்ச நாள் தான்! 'ஆசை அறுபது நாள்... மோகம் முப்பது நாள்னு' சொல்லுவாங்க... கேட்டிருக்கேன்.''

பொய்க் கோபத்துடன் சிணுங்கினாள் அவள்.

''ஊஹூம்... என்னைப் பொறுத்தவரைக்கும் அதுலே ஒரு சின்னத் திருத்தம்! ''மோகம் முப்பது வருஷம்... ஆசை அறுபது வருஷம்... போதுமா?''

செல்லக் குறும்புடன் கண் சிமிட்டிக் கேட்டான் முருகேஷ்.

அந்த நிமிடம் நந்துவின், மனதில் கவிதைக் கூடு மாயமாகி, கனவுலகம் சொந்தமாகியது.

அன்று, திருமணத்தில் இரு கரங்கள் இணைந்தன!

இன்று இரு மனங்களும் இணைய, இனிய உறவு இல்லறமாய் மலர்ந்தது.

முன்பு வானத்தைத் தொட மறுத்த அந்த நிலவு இப்போது தன் வானை விட்டுப் பிரிய மனமின்றி, தன்னை வெட்கத்துடன் வானில் பதித்துக் கொண்டது.

வானின்றி... வெண்ணிலவு இல்லை என்பதை புரிந்து உயிராய் உருகிக் கலந்தது.

மௌனமெனும் பள்ளியறை மந்திரத்தை, அந்த அறை முழுவதும் உச்சரித்தபோது, கோடைகாலக் காற்று விடிய லின் குளிர்ச்சியைத் தத்தெடுப்பதாய்!

வானமும் பூமியும்... அவர்களுக்கு வெளிச்சக் கீற்றாய் வாழ்த்து மடல் வாசிக்க ஆரம்பித்தன.